
www.tamilarangam.net

# தேசபக்தன்

## தமிழீழ புதிய சனநாயக கட்சி

http//home.no.net/ndptamil

patriot_editor @Yahoo.com




**NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM (N.D.P.T.)**

# N. D. P. T

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM (N.D.P.T.)

RGSD. ISSN - 07647 2262 RNI 04512 / 1999 CANADA

## தமிழீழத் தேசியவாதமா? சிங்களத் தேசியவாதமா?



## தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தின் எதிர்காலம்

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2031 (2000) இதழ் 17

தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன்
NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்

# தேசபக்தன்

NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்
தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாராளுமன்றத் தேர்தலை பகிஷ்கரிப்போம்

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக் கான ஆயுதப் போராட்டம், தேசிய விடுதலை யுத்தம் இரண்டையும் 1977-ல் இருந்து 1994 வரை UNP கட்சித் தலைமையி லான சிறீலங்கா அரசு எதிர்கொண்டு வந்தது. இராணுவத் தீர்வை பிரதானப்படுத்தி வந்த சிறீ லங்கா அரசால் வெற்றி பெற முடியவில்லை, சிறீ மாவின் குடியுரிமையை பறித்து, சனாதிபதி ஆட்சி முறையையும் அமுல்படுத்தி UNP கட்சி தலைமையிலான அரசு ஏகபோக ஆட்சியை 17 வருடங்கள் நடத்தி வந்தது. 1994-இல் ''யுத்தம் மட்டுமே சமாதானத்தை கொண்டு வருவ தற்கான ஒரு வழி அல்ல'' அரசியல் தீர்வு அதி காரப் பரவல், பேச்சு வார்த்தை, சமாதானம் என்ற அரசியலை முன் வைத்து, துப்பாக்கிக் குண்டுக்கு தந்தையை இழந்த மகள், கணவனை பறி கொடுத்த மனைவி, தந்தை தாத்தா இல்லாத பிள்ளைகளின் தாய் என்ற ஜனரஞ்சகமான கோசங்களுடன் சந்திரிகா தலைமையிலான SLFP கட்சியும் பொது சனமுன்னணியும், UNP யை தோற்கடித்து 10-வது பாராளுமன்ற தேர்தலில் வெற்றி வாகை சூடியது. யுத்தத்தில் பிள்ளைகளை, கணவன்மார்களை, தந்தைகளை பறிகொடுத்த தமிழ், சிங்களக் குடும்பங்களின் கண்ணீரை துடைப்பார் என கூட்டம் கூட்டி பிரச் சாரம் நடந்தது.

கடந்த ஆறு ஆண்டுகளில் சந்திரிகாவின் சமாதான முகமூடி அணிந்த யுத்த அரசியல் அம்பலத்துக்கு வந்துள்ளது. தாய் சிறீமாவின், தந்தை பண்டாவின் 'தேசிய மயமாக்கல்' கொள்கைகள் எல்லாம், தாய் பிரதமராக இருக்கும் போதே, மகள் சனாதிபதியாக இருந்து தொலைத் தொடர்பு துறை உட்பட அரசு நிறுவ னங்களை ''தனியார்மயப்படுத்தி உலகமய மாக்கி காட்டினார். 95,97-இல் முன் வைத்த ஒரு மோசடியான அரசியல் தீர்வுப் பொதியைக் காட்டி, சமாதானத்துக்கான ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தி காட்டியுள்ளார், எதிர்க் கட்சியும் ஏற்றுக் கொள்ளும் ஒரு அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை முன்வைத்து வரலாற்றில் தடம் பதிக்க முனைந்தார், UNP கட்சி ஆட்சிக்கு, சற்றும் குறைந்தது அல்ல SLFP தலைமையிலான பொது சன முன்னணி அரசு என்பதை 6 ஆண்டுகள் ஆக்கிரமிப்பு யுத்தத்துக்கு தலைமை வகித்து பல புதைகுழிகளை தமிழீழ மண்ணில் ஏற்படுத்தி 1000 கணக்கானவர்களை காணாமல் போக வைத்து நிரூபித்துள்ளார். ஆனால் யுத்தத்தில் பெருந்தோல்வியை சந்தித்து நிற்கிறது. சந்திரிகா அரசு, ராஜதந்திரக் காய் நகர்த்தல் மூலம் பாராளு மன்றம் கலைக்கப்பட முன்னர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை நிறைவேற்ற முனைந்த சந்திரிகா அரசு. UNP இன் ஆதரவு இல்லாததால், பாராளு மன்றத்துக்கு வெளியில் சிங்கள இன பௌத்த மதவெறி அமைப்புகள், கட்சிகளின் ஆர்ப்பாட்ட எதிர்ப்பால் காலவரையின்றி யாப்பு சீர்திருத்த முயற்சியை தள்ளிப் போட்டுள்ளது. ஆடி 24-ம் திகதி 10-வது பாராளுமன்றம் காலாவதியாகி றது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் தனது முயற்சிகளுக்கு எதிர்கட்சி மீது குற்றம் சுமத் துவார். யாப்பு சீர்திருத்தம் அமுலாக்க பாராளு மன்றத்தில் தனக்கு பெரும்பான்மை பலத்தை தாருங்கள், எதிர்க்கட்சியை நிராகரியுங்கள் என்ற கோசத்தை அம்மையார் முன்னிறுத்துவார். சந்திரிகாவின் அரசியல் யாப்பு சீர்திருத்த மசோ தாக்களை ஏற்றுக் கொண்டுள்ள கட்சிகள், ஏற்றுக் கொள்ளாத கட்சிகள் என எல்லா 41 தேர்தல் பாதைக் கட்சிகளும் தேர்தல் சூதாட்ட அரசியலில் சூடுபிடித்து நிற்கிறார்கள்.

### தமிழ்த் துரோக கட்சிகளும் சூதாட வருகிறார்கள்:

உள்நாட்டு தேர்தலைக் கண்காணிக்க 800 அன்னிய தேர்தல் கண்காணிப்பாளர் தேவை என U.N.P. கூறுகிறது. தேர்தல் சாக்கடை நாறுகிறது.

www.tamilarangam.net



இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் யாப்புக்குள் உரிமை கோரிப் போராடி தோற்றுப் போன நிலமையில்தான், தனித் தமீழிழம், தனியரசு ஒரே தீர்வு என்ற நிலைப்பாட்டுக்கு வந்த தமிழ் அரசியல் சக்திகள் அரசியல் யாப்பை நிராகரித்து பாராளுமன்ற தேர்தல் பாதையை பகிஷ்கரித்து, ஆயுதம் தாங்கிய பலாத்கார புரட்சி வழியை முன்னிறுத்தினர். தமிழீழ அரசுக்கான திட்டங்களை வைத்து இயங்கினர். மாவட்ட அபிவிருத்தி சபை திட்டத்தை 81இல் சிறீலங்கா அரசு முன் வைத்தபோது TULF தேர்தல் வழிக்கு சென்றது. இதை துரோகம் என்றவர்கள், பகிஷ்கரித்தவர்கள் ஆயுதம் ஏந்தி இருந்தவர்கள், 87-ல் மாகாண சபை திட்டத்தில் கலந்து கொண்ட னர். தமிழீழக் கோரிக்கைக்கு துரோகம் செய்தனர், திம்புக் கோரிக்கைகளைக் கூட, கைவிட்டு தமிழ்த் துரோக இயக்கங்களாக மாறினர். இன்று வரை புலிகளும், புரட்சிகர தேசபக்த சக்திகளுமே தேர்தல் பாதையை நிராகரித்து நிற்கின்றனர். சிறீலங்கா அரசின், அரசியல் யாப்பை ஏற்றுக் கொண்டு தேர்தல் பாதைக்கு சென்ற துரோகத் தலைமைகள். புலிகளின் அழிப்பு, தடைக்கு அஞ்சி அரசு சார்பு நிலையை எடுக்கவில்லை, அரசியல் ரீதியாக தமிழீழக் கோரிக்கையை, தாங்களே முன் வைத்த திப்புக் கோரிக்கைகளை கைவிட்டு பாராளுமன்றத் தேர்தல் அரசியலில் சிறீலங்காத் தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ளனர்.

திம்புக் கோரிக்கை உள்ளிட்ட நமது அரசியல் தீர்வுப் பொதியை, சிறீலங்கா அரசு ஏற்றுக் கொண்டு அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை ஆளும் கட்சியா - எதிர்க்கட்சியா இரண்டும் சேர்ந்தா என்பதை அவர்களே தீர்மானித்து அரசியல் யாப்பை மாற்றாதவரை, அரசியல் யாப்பின் அடிப்படையில் ஆள்வதை தீர்மானிப்பதற்கு நடத்தப்படும் தேர்தல்களை பகிஷ்கரிப்பது நமது கடமை. தமிழீழத்துக்கான அரசியல் யாப்பை உருவாக்க முன்னேறுவது நமது கடமை.

சந்திரிகா அரசு முன் வைத்துள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தமானது, குறைந்த பட்சம், தமிழீழ மக்களின் திம்புக் கோரிக்கைகளைக் கூட நிவர்த்தி செய்யவில்லை. ஒரு பிராந்திய அதிகாரப்பகிர்வு முறையை மட்டும் முன் வைக்கிறது. வடக்கு கிழக்கு பாரம்பரிய ஒன்றிணைப்பைக் கூட ஏற்பதற்கு பதில், வடக்கு கிழக்கு இணைந்த தற்காலிக நிர்வாக சபை பற்றி கூறுகிறது. 10 ஆண்டுக்கு பின் கிழக்கில் (வடக்கில் அல்ல) பொதுசன வாக்கெடுப்பு மூலம் இணைப்பு பற்றி முடிவு எடுக்கும் என்கிறது.

தற்காலிக நிர்வாக சபை என்பது நீண்ட கால சதி நோக்கம் கொண்டது, இந்த யாப்புச் சீர்திருத்தத்தை அடுத்த பாராளுமன்றத்தில் முன் வைத்து அரசியல் நிர்ணய சபை மூலம் சட்டமாக்குவேன் என சந்திரிகா சூளுரைக்கிறார். சந்திரிகா அரசின் சூழ்ச்சியை புரிந்து கொள்ள வேண்டும். 1993-இல் ஒஸ்லோ ஒப்பந்தம், தற்காலிக நிர்வாக சபை திட்டத்தை ஏற்ற பாலஸ்தீன ஒப்பந்தமும் யாசீர் அரபாத்தும் இன்று கிழக்கு ஜெருசலேம், இலட்சக்கணக்கான அகதிகளின் குடியேற்றப் பிரச்சனைகளால் இசுரேலுடன் மோதிக் கொண்டிருப்பதை தமிழீழப் போராளிகள் கணக்கில் கொள்ளத் தவறக் கூடாது, சிறீலங்கா அரசின் புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்த மோசடியை இன்றே அம்பலப்படுத்த தொடங்க வேண்டும். தமிழீழப் போராட்டத்தை தொடர வேண்டும்.

— ஆசிரியர் குழு

www.tamilarangam.net



# கறுப்பு யூலை நினைவுகள்

1983 'யூலை தமிழ் இனப் படு கொலை' தமிழீழ மக்களின் வாழ்க்கையில் முக்கியமான சம்ப வம். போராட்ட வரலாற்றில் திசை திருப்பத்தை ஏற்ப டுத்திய நிகழ்ச்சி. சிறீலங்கா அரசின் இன ஒடுக் குமுறை, இன அழிப்பு 83 யூலைக்கு முன்னரும் நடந்துள்ளது. 1977, 79, 81 என்பன இனக் கல வரங்களாக காட்டப்பட்டன. தமிழர்களின் வீடுகள், கடைகள், தொழில் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. வெட்டிக் கொலை செய்யப் பட்டனர். அகதிகளாக்கப்பட்டனர். ஆனால் 83 யூலை இனப் படுகொலை நாடு முழு வதும், தேர்தல் பட்டியல் அடிப்படையில் சிறீலங் காவில் உள்ள தமிழர்களின் வீடுகள், கடைகள் அழித்து எரியூட்டப்பட்டது. அரசு படைகளும் இன - மத வெறி அமைச்சர்களின் குண்டர் படை களும் தெருக்களில் தமிழ் மக்களை உயிருடன் எண்ணை ஊற்றி எரித்தனர். பெண்கள் மனித நாகரீகம் வெட்கி தலை குனியும் வகையிலான பாலியல் வன்முறைக்கு வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டனர், 1200 தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். கோடிக்கணக்கான தமிழர் சொத்துக் கள் அழிக்கப்பட்டது 'வெலிக்கடைச் சிறையில்' 53 தமிழ்ப் போராளிகள் ஆதரவா ளர்கள் கண் தோண்டி கொடிய சித்திரவதைகளால் கொலை செய்யப்பட்டனர். அதுவரை காலம் சிறீ லங்காவில் இருந்து தமிழீழம் நோக்கி வந்த அக திகள் 83 யூலைப் படுகொலைக்கு பின் இந்தியா வுக்கும் வெளிநாடுகளுக்கும் அகதிகளாக சென்ற னர். உலக மக்களும் நாடுகளும் சிறீ லங்கா அரசின் இனவெறியாட்டத்தை, படுகொ லையை கண்டித்தன. தமிழ் மக்களின் இரத் தத்தால் சிறீலங்கா ஆளும் வர்க்கத்தின் இன மத வெறியர்களின் கைகள் கழுவப்பட்டது. மனிதா பிமானம் உள்ள மக்களின் கண்ணீரில் நாடு நனைந் தது.

யாழ்ப்பாணத்தில் 13 சிங்கள இராணுவத்தை புலிகள் தாக்கி அழித்ததன் எதிரொலிதான் இது என சிங்கள இன - மத வெறியர்கள் அரசியல்வா திகள் நியாயம் பேசினர்.

இன்று 1300-க்கும் மேலான சிறீலங்கா இரா ணுவம் ஆனையிறவில் அழிக்கப்பட்டது, 3000 படையினர் காயம்பட்டுள்ளனர். சிறீலங்கா ஆக்கி ரமிப்பு படைகளின் யுத்த சாகச வீரர்கள் நினைவு நாளில் (யூன் 7) சிறீலங்காவில் கரும்புலிகளின் தாக்குதலில் சிங்கள அமைச்சர் அழிக்கப்பட்டார், சிறீலங்காவிலேயே எத்தனை தாக்கதல்கள். ஆனால் அரசின் கைகளை மீறி சிறீலங்காவிலுள்ள தமிழர்கள் மீது பௌத்த சிங்கள வெறியர்கள் குண்டர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லையே ஏன். அரசு இயந்திரத்தின் கைகளை மீறி எதுவுமே தமிழர்கள்மேல் நடந்ததில்லை. அரசின் அரசியல் வாதிகளின் கட்டளைப்படியே 83 யூலை தமிழ் இனப் படுகொலை நடந்தது என்பதை நிரூபணம் செய்கிறது; கொழும்புத் தமிழ்த் தலைமைகள் சொல்வதுபோல் சிறீலங்கா அரசு, ஆளும் வர்க்கம் இன மதவெறிக் கொள்கையில் மாற்றம் வந்துவிட்டது என்கிறார்கள். வேடிக்கை விளை யாட்டு அதே இனவெறியரசு தமிழீழப் பகுதியில் யுத்தத்தை நடத்துவதை குண்டு மழை பொழி வதை பொருளாதார தடை விதித்து அழிப்பதை துரோக தமிழ்த் தலைமைகள் கண்களுக்கு தெரி யவில்லை. எல்லாம் புலிகளுக்கு எதிரானது என அரசுடன் சேர்ந்து நியாயம் பேசுகின்றனர். சிறீ லங்காப் படைக்கு ஆள் பற்றாக்குறை இருப் பதால் தமிழர்களை கொல்ல, குதற விரும்பும் சிங்கள பௌத்த வெறியர்களை படையில் சேர்த்து, தமிழீழ பகுதிக்கு அனுப்பி இன அழிப்பை செய்கிறது அரசு. ஒவ்வொரு பாராளு மன்ற உறுப்பினரும் (MP) 100 படையினரை சேர்த்துக் கொடுக்க வேண்டும் என கட்டளையிட் டுள்ளது ஆளும் வர்க்கம் சந்திரிகா அரசு. இதைக் கண்டு கொள்ள மறுக்கும் கொழும்புத் தமிழ்த் தலைமைகளும், அறிவு ஜீவிகளும் சந்திரிகா அம்மையார் இனவாதப் பாதையை கைவிட்டு வருவதாக, மெதுமையாக நடப்பதாக பேசி எழுதி வருகின்றனர்.

அதேவேளை சிறீலங்கா அரசின் ஆளும் வர்க்கத்தின், இன - மதவெறி அமைப்புக்களின் தமிழ் இன ஒடுக்குமுறை அரசியலை ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளை, அப்பாவி சிங்கள மக்களின் சிந்தனை - செயலாகவும் இணைத்து பொருத்தி முழச் சிங்கள மக்களையும் தமிழர் களின் எதிரிகளாக காட்டி வரும் புலிகளின் பிரச்

www.tamilarangam.net



சார உத்தியையும் ஏமாற்றையும், நவீன தேசியம் என்ற பெயரில் முதலாளித்துவ தேசிய வெறிக் கொள்கைக்கு தமிழீழத் தொழிலாளிகளை பெரும் பான்மை உழைக்கும் மக்களை திசைதிருப்பு வதும் நடக்கிறது. 1987-ல் சிறீலங்கா அரசுக்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டத்தை 62000 சிங்கள மக்களை எரித்து, புதைத்து கொலை செய்து நசுக்கியது சிறீலங்கா இராணுவம் மேயர் ஜெனரல் வீரசேகரா மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது. 'பத்தலாந்த' சிறைக் கொட்டடியை நடத்திய பிரிஷ் டக்ளஷ் என்ற பொலிஸ் அதிகாரி இந்தியாவிலும், சுவிர்ச்சலாந்திலும் தலைமறைவாக இருந்துவிட்டு நாடு திரும்பியுள்ளான். சந்திரிகா சூதாடுகிறாள். இதைப் புரிந்து கொண்டு மக்களுக்கு தெளிவுபடுத்தி தேசிய விடுதலைப் போராட்டத்தை புரட்சிகர தேசபக்த சக்திகள் முன்னெடுக்க வேண்டும்.

சிறீலங்கா அரசுக்கு எதிரான புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கவும், கூட்டிணைந்து போராடவும் வேண்டும். அதேபோல் போராட்டத்தை பலவீனப்படுத்தும் அப்பாவி முசுலீம் சிங்கள மக்கள் மேலான தாக்குதல்களை, வெளியேற்றங்களை பொய் பிரச்சாரங்களை விமர்சிக்கவும் வேண்டும். இதன் மூலம்தான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேறும். வெற்றியடையும்.

சிறீலங்கா அரசின் 83 யூலைப் படுகொலைக்கு பின்பும், ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அப்பாவி தமிழ் மக்கள் மீது பல படுகொலைகளை அரசு புரிந்து வருகின்றது நவாலி தேவாலயம், மடு தேவாலயம் மீதான தாக்குதல்கள், கொக்கடிச் சோலை, செம்மணி படுகொலைகள், புதைகுழிகள் தொடர்கின்றன. கிளிநொச்சி, நெடுங்கேணி எலும்புக் கூடுகள் வெளிவருகின்றன. அரசின் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் 60000 தமிழ் மக்கள் பலி கொல்லப் பட்டுள்ளனர். 15000 சிறுவர்கள் அநாதைகளாக வுள்ளனர். (சிறுவர்கள் அரசை எதிர்த்து போராடக் கூடாதா) 10,000 தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளனர். 2500 தமிழ் ஆண்களும் பெண்களும் அரசின் அவசர கால, பயங்கரவாத சட்டத் தில் வெலிக்கடை, காலி, கறுத்துறை பூசா, மகசீன் சிறைகளில் வாடுகின்றனர். சிறைகளில் இன்றும் இனவேறுபாடு கையாளப்படுகின்றது. இன்றும் சிறையிலுள்ள தமிழ் பெண்கள் மீதான தாக்குதல் வெளிப்படுத்தியது. 83 யூலை படுகொலையின் கரிய இருள் தமிழ் மக்களின் வாழ்க்கையில் தொடர்கிறது. கறுப்பு யூலை நினைவு கூறப்படுகிறது. தங்களின் விடியலுக்கான போராட்டங்களிலும் மக்கள் விழித்து நிற்கின்றனர்.

சிறீலங்கா அரசு, அப்பாவித் தமிழ் மக்கள் மேல் நடத்திவரும் அடக்குமுறை, புதைகுழி, இனப்படு கொலைகளில், அந்த யூலையில் தமிழர்கள் இரத்தம் சிந்தினார்கள் என்பதால் 'சிவப்பு யூலையாக' மாறிவிடமுடியுமா? மக்கள் தன்னெழுச்சியாகவோ, அரசியல் இயக்கங்கள் போராட்ட அமைப்புக்களால் அணி திரட்டப்பட்டோ எதிரியை எதிர்த்து போராடுகின்ற போது சிந்துகின்ற இரத்தமும், அப்பாவி மக்கள் மேல் எதிரிகளும் அரசும் திட்டமிட்டு நடத்துகின்ற படுகொலைகளிலும் சிந்தப்படுகின்ற இரத்தம் சிவப்பானதுதான். இரண்டு எதிர் எதிரான நிகழ்ச்சிகளின் மக்களின் துயர - எழுச்சி உணர்வுகளின், அரசியல் பண்புகளையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. 83 யூலை இனப் படுகொலை தமிழீழ மக்களின் வாழ் வில் போராட்டத்தில் ஒரு துயரம் நிறைந்த, துன்பம் மிகுந்த நாட்கள் நினைவுகள்.

புலிகள் 83-ல் 13 இராணுவத்தை அழித்த போதும் எதிரியின் இரத்தத்தில் கையை நனைத்த வேளையிலும் தங்களது போராளிகளை இழந்த இரத்த சுவடுகளிலும் கூட யூலையை சிவப்பு யூலையாக நினைவு கொள்வதில்லை. 87-ல் எதிரிகளின் முற்றுகைகளில் இருந்து விடுபட எதிரிக்கு அதிர்ச்சி தாக்குதல் நடத்திய தன்னைத் தானே தற்கொலை தாக்குதலில் ஈடுபடுத்திய மில்ல ரின் நினைவு நாளை, யூலை 5 கரும்புலிகள் நினைவு தினமாக வெளிப்படுத்துகின்றனர்.

மொழி அரசியலில் இருந்து கருப்பு யூலையை, சிவப்பு யூலையாக பார்ப்பது வேறு. அதையும் கூட கரும்புலிகளின் வெற்றிச் சரித்திரம் ஊடாக தமிழீழம் மாற்றியுள்ளது. வரலாற்று ரீதியான பொருள் பொதிந்த அரசியல் அர்த்தம் கொண்ட மக்களின் துயரத்தை, துன்பத்தை எதிரியின் கொடூரத்தை வெளிப்படுத்தும் கறுப்பு யூலை நினைவை. நாம் சிவப்பு யூலையாக சிந்திக்க முடியாது. நினைவு கொள்ள முடியாது. கறுப்பு யூலையின் கரிய நிகழ்ச்சிகள் இனியும் தமிழீழ மக்கள் எதிர் கொள்ளாதிருக்க சிவப்பு போராட்ட பாதையில் செல்வோம் என உறுதி கொள்வோம்.

''ஆப்பிரிக்காவில் ருவாண்டா நாட்டில் 8 இலட்சம் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதுபற்றி அய்நா சபையின் ஆய்வுக் குழு. இந்தி

www.tamilarangam.net



யாவை சேர்ந்த பகவதி தலைமையில் நடந்தது. இவ் இனப் படுகொலைக்கு பின்னணியில் அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்ஸ் இருந்ததை தெளிவுபடுத்தியுள்ளது. சிறீலங்காவில் நடக்கும் படுகொலைகளுக்கு பின்னணியில் எந்த அன்னிய நாடுகள் நிற்கின்றன என்பது எப்போது உறுதிப்படப் போகிறது''

— சோபா

ஞ ஞ ஞ ஞ ஞ

# உண்மையிலும் உண்மையாக

விரிந்து கிடந்த
கூந்தலை முடிந்து
கலைந்து போன ஆடைகளை
அணிவதற்காய் நானும்
மெதுவாக எழுந்தபோது
'இவள் அவனோட விரும்பித்தான்...'
வார்த்தைகள் என்னை
அறுத்து வதைத்தன
திரும்பிப் பார்த்தேன்
அம்மா, அக்கா, அண்ணா அனைவ
ருமே
என்னைப் பிழையாக...
''தான் செத்திருக்கலாம்
இல்லாட்டி
அவனைச் சாக்காட்டியிருக்கலாம்
இரண்டு மில்லாமல் எங்கட
மானத்தை...''?
தொடர்ந்தன பொறிகள்,
ஆனால்... நான் சிரித்தேன்
''இராணுவக் கற்பழிப்புக்காய்
கலங்கிடலாகாது'' என
மேடையேறி முழங்கிய அண்ணன்
புத்தகங்களில் எழுதிய அக்கா
இன்று... எனது ஊரவன்
அதே நிலையில்...
எனக்குப் புரியவில்லை
அந்நியன் ஆத்திரத்தில்
அடக்கு முறையின் வடிவில்
நடந்து கொண்டான்.
ஆனால்... இவனோ...
காமனாய்... கயவனாய்...
இவனை என்ன செய்யலாம்?
கற்புக்காய் கண்ணீர் வடிக்க
நான் ஒன்றும் கண்ணகியல்ல.
மானத்தை நினைத்து நிற்க,
நான் ஒன்றும்
இழக்கவில்லை.
தற்கொலையில் உயிரைமாய்க்க
நான் ஒன்றும் கோழைல்ல.
இராணுவத்தை விட்டுத் தள்ளினோம்.
ஆனால்... நமது இனத்தவனை
வெறிப்பிடித்தவனை
திருமணமாகி இரு குழந்தையும்
பெற்றவனை
என்னைப்போல் இன்னும்
எத்தனை பேர்?
இவனைப் போல் இன்னும்
எத்தனை பேர்?
இவர்களுக்கு என்ன செய்யலாம்?
குழம்பினேன்
நா குளறவில்லை
குடும்ப கௌரவத்திற்காய்
என்னைக் கொல்லலாம்
ஆனால் நானாக...
அது நடக்காது.
எனது பாதங்கள் தொடரும் பய
ணத்தில்
முடிந்தால்... துணிவிருந்தால்
உண்மையிலும் உண்மையாக
எவராவது வாழ வரலாம்.

— ரங்கா

www.tamilarangam.net



# தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தின் எதிர்காலம்? 'ஓயாத அலை' வெற்றி

தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில், புலிகளின் ஒப்பறேசன் 'ஓயாத அலை' இராணுவ ரீதியில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஓயாத அலை - மூன்றாம் கட்ட தாக்குதலில் ஆனையிறவு இயக்கச்சி கூட்டுப்படைத் தளத்தின் மீதான வெற்றி புலிகளின் யுத்த வரலாற்றில் முன்னேற்ற மான இராணுவ வளர்ச்சியாகும். மீண்டும் யாழ்ப்பா ணத்தை கைப்பற்றுவதற்கான புலிகளின் இரா ணுவ முன்னேறுதல் கொழும்புத்துறை சரசாலைப் பகுதி பாதுகாப்பு எல்லைக் கோட்டுடன் நிற்கி றது! ''பலாலி படைத்தளம்', காங்கே சன் துறை துறைமுகம் மீதான புலிகளின் தாக்குதல் தொடரும், யாழ் விரைவில் புலிகளின் இரா ணுவக் கட்டுப்பாட்டுள் வந்துவிடும், யாழில் உள்ள 30,000 அரசு துருப்புக்கள் சரணடைந்து விடுவார்கள். புலிகளின் முன்னறிவிப்பை தொடர்ந்து துருப்புக்கள் அரசின் உத்தரவுப்படி தாங்களாகவோ அல்லது அன்னிய நாடுகளின் வெளியேற்ற உதவியுடன் யாழைவிட்டு வெளி யேறிவிடுவார்கள்'' என்று முன் ஊகிப்பு செய்கின்ற அளவுக்கு மே மாதத்தில் இராணுவ நெருக்கடி வெளிப்பட்டிருந்தது. சிறீலங்கா அரசு தனது அவசரகால இராணுவ - அரசியல் உள்நாட்டு திடீர் நடவடிக்கைகள், சர்வதேச அவ சரகால இராணுவ - பொருளாதார, உதவிகள் மூலம், அரசு துருப்புக்களின் பின் வாங்கல் பாது காப்பு எல்லைக் கோட்டை தற்காலிகமாக திடப் படுத்திக் கொண்டுள்ளது. புலிகளும் தங்களது முன்னேறும் நடவடிக்கையைவிட்டு பாதுகாப்பு எல்லைக் கோட்டை திடப்படுத்தி வருகின்றனர். தங்கள் கட்டுக்குள் வந்த பகுதிகளை பாது காக்கும் இராணுவத் தயாரிப்புக்களில் ஈடுபடு கின்றனர். பாதுகாப்பு எல்லைக் கோட்டை பாது காக்கும் இராணுவ நடவடிக்கைகள்தான் இரண்டு தரப்பும் செய்து கொண்டிருக்கின்றன. புலிகள் தந்திரோபாய ரீதியாக முன்னேறும் தாக்குதல் அசுமாத்தங்களை, அச்சுறுத்தலை செய்த னர். பலாலி முகாம் மீது செல் வீச்சுக்களை தற்காலிக மாக மேற்கொண்டனர். தற்போது அரசு துருப் புக்கள் தந்திரோபாய ரீதியான எல்லைப்படுத்தப் பட்ட பரிசோதனை தாக்குதல்களை விமானப் படைக் குண்டு வீச்சுக்களுடன் நடத்திப் பார்க்கின் றனர். 'ஓயாத அலை - 3-இன்' இராணுவ வெற்றியுடன், இராணுவச் சமனிலை மாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், நெருக்கடிகள் உள்நாட்டிலும் உலகளவிலும் எதி ரொலித்துக் கொண்டிருக்கிறது. இந்த இராணுவச் சமனிலை மாற்றம், புலிகளின் வெற்றி, தமிழீழப் போராட்டத்தில் குறிப்பிடும்படியான முன்னேற்றம், வெற்றி, இதன் அரசியல் தாக்கம் தமிழீழப் பிரச்சனைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை, பேச்சு வார்த்தையை ஏற்ப டுத்தும் அளவுக்கு சிறீலங்கா அரசையும், ஆளும் வர்க்க கட்சிகளையும் கீழ் இறங்கி வரவைக்க வில்லை, சர்வதேச சமூகமும், நாடுகளும் கூட சிறீ லங்கா அரசுக்கும், ஆளுகின்ற வர்க்க கட்சிக ளுக்கும், இன மதவாத நிறுவனங்களுக்கும் ஒரு அழுத்தத்தை நெருக்கடியை கொடுக்க வில்லை. புலிகளுடன் பேச வேண்டும். புலிகள் பங்கு கொள்ளாமல் சமாதானம். பேச்சுவார்த்தை சாத்தியம் இல்லை என்று மட்டுமே சொல்கின்றன. அதற்கான ஏற்பாட்டை சில நாடுகள் முன்முயற் சியுடன் செய்கின்றன.

புலிகளின் ஆணையிறவு இராணுவ வெற்றியை, யாழ்ப்பாணத்துக்கான நுழைவை மிகவும் உணர்ச்சி பூர்வமாக பார்த்து தமிழீழ வாசற் கதவு திறக்கப்பட்டுவிட்டது. தமிழீழம் இந்த வருடத்தில் கிடைத்துவிடும் அய்நா (U.N.) சபையில் தமிழீழம் பதிவு செய்யப்படுவதுதான் ஒரே ஒரு வேலை மீதம் இருக்கிறது என்ற பாவ னையில் அரசியல் அடியெடுப்புக்களும், பிரச்சா ரங்களும் எதார்த்த உண்மைகளை காணத் தவறி [illegible]மிட்டு மிகைப்படுத்தி வெற்றி

www.tamilarangam.net



எழுச்சி அரசியல் நடத்தப் படுகின்றது; புலிகளின் இராணுவ வெற்றியை, ஒரு பெரும் படைத்தளத்தின் மீதான வெற்றியை கொண்டாடுவது வாழ்த்துக் கூறுவது சரியானது, ஆனால் இவ்வெற்றியில் இருந்து புலிகளின் அரசியலை ஒரே ஒரு தேசிய அரசியலாக மக்கள் அரசியலாக, புலிகளின் யுத்தம், மக்கள் யுத்தமாக மாறிவிட்டதாக புலிகளின் தலைமை பிரச்சாரம் செய்வதில் தவறு இல்லை (செய்யவே செய்வார்கள்) ஆனால் தமிழீழ புரட்சிகர தேச பக்த சக்திகள், கட்சிகள் இந்த எழுச்சிக் கண்ணோட்டத்துக்கு பலியாகக் கூடாது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட யுத்த வரலாற்றில் 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின், இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை 1991-களில் இருந்து இன்றுவரை மீண்டும் சிறீலங்கா அரசுக்கு எதிரான யுத்தத்தை புலிகள் இயக்கம் மட்டுமே நடத்தி வருகிறது; தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் யுத்தத் 'தீ'யை இன்றுவரை அனையவிடாமல், சமரசப்படாமல் நடத்தி வருகின்ற புலிகள் இயக்கத் தலைமைக்கும், அதன் தலைவர் பிரபாகரனுக்கும், மாவீரர்களுக்கும், களத்திலுள்ள எல்லாப் புலிப் போராளிகளுக்கும் தமிழ் மக்களும் புரட்சிகர தேசபக்த சக்திகளும் நன்றியும், வாழ்த்துக்களும் கூற வேண்டும். அதில் தவறு இல்லை.

அதேவேளை தேசிய விடுதலைப் போராட்டத்தில், யுத்தத்தில் புலிகளுடன் கொள்கை முரண்பாடுள்ள, சிறீலங்கா அரசை எதிர்த்து போராடிக் கொண்டிருந்த, போர் புரிந்த ஏனைய விடுதலை இயக்கங்களை அழித்தும், தடை செய்தும் சிறீலங்கா அரசுக்கு எதிரான தமிழீழ யுத்தத்தை பலயீனப்படுத்தி, தனி இயக்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டிய வரலாற்றை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின் சமரசம் அடைந்த தலைமைகளை, இயக்கங்களை தவிர இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு, சிறீலங்கா அரசு எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு கொள்கைகளில் உறுதியாக நிற்கின்ற தமிழீழ தேசபக்த புரட்சிகர இயக்கங்களை அவர்களின் அரசியல் - இராணுவச் செயற்பாடுகளை தடை செய்து, கைது செய்து, அழித்து இன்றுவரை புரட்சிகர தேசபக்த இயக்கத்தை தலைமறைவு - இரகசிய இயக்கமாக செயற்பட தள்ளியதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை - யுத்தத்தை மறுபுறம் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கின்ற புலிகள் தலைமையும், தலைவர் பிரபாகரனும் விடுதலை யுத்த வெற்றிக்கு இழைக்கின்ற தவறுகளையும் தமிழீழ மக்களும் புரட்சிகர தேசபக்த சக்திகளும் கவனத்தில் கொள்கிறோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் - யுத்தத்தின் வெற்றிக்காக புலிகள் உட்பட ஒவ்வொரு விடுதலை இயக்கமும், கட்சியும் நடத்துகின்ற அரசியல் போராட்டங்களை, இராணுவ நடவடிக்கைகளை வெற்றிகளை நாம் நிச்சயமாக வரவேற்கிறோம். அதேவேளை போராட்டத்தின் - யுத்தத்தின் வளர்ச்சிக்கு, விடுதலைக்கு எதிரான - தவறான, விடுதலை இயக்கங்களை அவற்றின் அரசியல் இராணுவக் கண்ணோட்டங்களை, போராட்ட நடவடிக்கைகளை சுட்டிக் காட்டுவதில் - தவறுகளின் தாக்க விளைவுகளை அதற்குரிய தளங்களில் விமர்சிப்பதும் சரியான வழியை முன்வைப்பதிலும் புரட்சிகர தேசபக்த சக்திகள் தெளிவாக உறுதியாக இருக்க வேண்டும், தமிழீழ விடுதலைக்காக சிறீலங்கா அரசுக்கும் சர்வதேச எதிரிகளுக்கும் எதிராக போராடுகின்ற எந்தவொரு சகவிடுதலை இயக்கத்தையும் அதனுடனான முரண்பாடு - உடன்பாடுகளை (அரசியல் - இராணுவ ரீதியில்) வெளிப்படுத்துவது, கையாள்வதில், சகல சகோதர விடுதலைச் சக்திகளையுயும் புதிய சனநாயக தமிழீழ விடுதலையை வெல்வதற்கான பலத்தை அதிகரிப்பது ஒருங்கிணைப்பது என்ற மைய நோக்கிலிருந்து பொது எதிரிக்கு எதிரான சமூக விடுதலை இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான சுயவிமர்சன - விமர்சனப் பார்வை, அணுகுமுறையை கடைப்பிடிப்பதில் இயக்கத் தலைமைச் சக்திகள் முதிர்ச்சி பெற வேண்டும். அப்போதுதான் அரசியல்- இராணுவ நடவடிக்கைகளில் சகோதர இயக்கங்களின் கீழ் அணிச் சக்திகள் முழுப்பலத்துடன் ஆரோக்கியமாக களத்தில் கூட்டிணைந்து செயற்பட முடியும்.

புலிகளின் ஒப்பரேசன் ஓயாத அலை வெற்றி, ஆனையிறைவு - இயக்கச்சி கூட்டுப் படைதளத்தின் வீழ்ச்சி, புலிக் கொடியேற்றமும் புலிப் போராளிகளையும், தமிழீழ மக்களையும் புதுப் பொலிவுக்குள்ளாக்கியுள்ளது. உலக நாடுகளிலுள்ள தமிழீழ ஆதரவாளர்களுக்கு புதிய நம்பிக்கையை, தென்பை கொடுத்துள்ளது. புலிகளால் எப்படி இந்த வளர்ச்சியை யுத்தத்தில் காண முடிந்தது என இராணுவ விட

www.tamilarangam.net



யங்களில் அக்கறை கொண்டவர்களைக் கூட வியக்க வைத்துள்ளது. கொரில்லா யுத்த இராணுவ நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடாத, புலிகளின் இராணுவச் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிக்காத புரட்சிகர தேசபக்த சக்திகள் கூட புலியின் இராணுவ வெற்றியில் விழித்து நிற்கின்றனர். புலிகளின் வளர்ச்சியை உற்றுக் கவனித்தால். உண்மை புலப்படும், தெளிவு பிறக்கும்.

## தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகளின் தனிச்சிறப்பு

சிறீலங்கா அரசுக்கு எதிரான தமிழீழ மக்களின் தேசிய விடுதலை ஆயுதப் போராட்டத்தின் (பலாத்காரப் புரட்சி) மூலமே அடையமுடியும் என்ற நிலையை எடுத்தது முதல் இன்றுவரை புலிகள் இயக்கமும் தலைவர் பிரபாகரனும் அதில் உறுதியாக இருந்து ஆயுதம் தாங்கிய கொரில்லாப் போராட்ட நடவடிக்கைகளை வளர்த்து வருகின்றனர். சிறீலங்கா அரசு 1985-ல் முப்படைகளையும் கொண்டு கட்டவிழ்த்துவிட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்து தமிழீழ தேசிய விடுதலை யுத்தமாக புலிகளின் தலைமை விடுதலை யுத்தத்தை வளர்தெடுத்திருக்கிறது. இதில் பிரபாகரனின் தலைமைப் பாத்திரம் முக்கியமானது. 1986 கடைசிப் பகுதியில் சிறீலங்காப்படை ''ஒப்பரேசன் லிபரேசன்'' தாக்குதலில் வடமாராட்சியில் புலிகளின் கழுத்தை நெரிக்கின்ற அளவுக்கு சென்றபோதும், 88-ல் இந்தியப்படை ''ஒப்பரேசன் பவான்'' தாக்குதலில் புலிகள் வன்னிக்கு பின்வாங்க நேரிட்ட போதும், ''ஒரு சில புலிகள் உள்ளனர் காடுகளில்'' என ராஜீவ் அறிவித்த நிலமை, 96-ல் சிறீலங்காப் படை ''ஒப்பரேசன் சூரியக்கதிர்'' இராணுவ நடவடிக்கை மூலம் புலிகள் 5 ஆண்டுகளாக கட்டுப்பாடில் வைத்திருந்த (இராணுவம் பெரும் முகாம்களில் முடக்கப்பட்ட நிலையில்) யாழ்ப்பாணத்தை 50 நாள் தாக்குதலில் எதிரி கைப்பற்றிய போது, புலிகள் மீண்டும் 96-ல் வன்னிக்கு பின்வாங்கினர். துணை பாதுகாப்பு அமைச்சர் அனுரத்வத்த ''புலிகளின் தலைமை வெளிநாட்டுக்கு ஓடிவிட்டது'' என அறிவித்த நிலமை. எதிரிப் படைகளின் நிர்மூலமாக் கும் இராணுவ தாக்குதல்களிலும் எதிரியின் - புலியின் பலத்தை — பலவீனத்தை கணிப்பிட்டு, தனது முன்னணிப் படை யுத்த முறைக்கு உகந்த முறையில் கொரில்லா யுத்த, நடமாட்ட யுத்த வடிவத்தை மிகச் சிறப்பாக மூலோபாய ரீதியாகவும், தந்திரோபாயமாகவும் கையாண்டு பின்வாங்கி முன்னேறி, பின்வாங்கி கடந்த 4 ஆண்டுகால வன்னிப் பெருநில யுத்த நடவடிக்கை வளர்ச்சி கண்டது. 'ஓயாத அலை' இராணுவ நடவடிக்கைகளை ஸ்தானயுத்த வடிவத்திலிருந்து நடத்தினர். ஓயாத அலை — 3-இன், மூலோபாய ரீதியான எதிர்தாக்குதல் வெற்றி மூலம் எதிரி மிகப்பெரிய படைத்தளத்தைவிட்டு (ஆணையிறவு) பின்வாங்க செய்ததன் மூலம், தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் இராணுவ ரீதியாக விடுதலை யுத்தத்தின் மூன்றாவது கட்டமான எமது மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதலும் எதிரியின் மூலோபாய ரீதியான பின்வாங்குதலுமான மூன்றாவது கட்டத் தின் வாசற் கதவை தட்டியுள்ளது. எட்டியுள்ளது. புலிகள் இயக்கம் மட்டுமே தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் தீர்மான கரமான முழுப்பங்கை வழங்கி வருகிறார்கள். ஒரு சில புரட்சிகர தேசபக்த அமைப்புகள் புலிகளின் தடையை மீறியும் அரசியல் குழுக்களாக மட்டுமே இயக்கி வருகின்றன. அரசுக்கு எதிரான யுத்தத்தில் வேறு இயக்கங்களின் இராணுவச் செயற்பாடு இல்லாதவரை புலிகள் என்றால் யுத்தம். யுத்தம் என்றால் புலிகள் என்ற நிலைமையே நீடிக்கும்.

## வன்னிப்பகுதி பின்வாங்கலும், புலிகளின் வளர்ச்சியும்

சிறீலங்காப் படைகளின் யாழ் மீதான 'ஒப்பரேசன் சூரியக் கதிர்'இன் போது புலிகள் சில இடங்களில் மட்டுமே நின்று பிடிப்பதற்கான எதிர்த் தாக்குதலை நடத்தினர்; புலிகளின் இராணுவ அடித்தள கட்டமைப்பும், தலைமையும் பாதுகாப்பாக (கட்டுப்பாட்டு பகுதியை பாதுகாக்க அல்ல) பின்வாங்கும் கால அவகாசத்தை பெறும் வகையிலும், பின்வாங்குகிறார்கள் என்பதை எதிரி முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத வகையிலும், பின்வாங்கும் பாதையில் எதிரி தாக்காமல் இருக்க வேண்டி திசை திருப்பும் வகை யிலேயே புலிகளின் எதிர் தாக்குதல்களும்

www.tamilarangam.net



பின்வாங்குதலும் நடைபெற்றது. இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது ஒரு முகாமை (சிறியதோ - பெரியதோ) தற்காலிக சிறிய முகாம் களை விட்டு பின்வாங்குவதற்கும், ஒரு பிரதே சத்தை கட்டுப்பாட்டுள் வைத்து சிறிய முகாம் களை நடத்தி கட்டளை வழங்கும் மிகப்பெரிய முகாமை விட்டு பின்வாங்குவதற்கும், எதி ரிக்கும் நமக்கும் இடையில் எப்போது வேண்டு மானாலும் கைமாறலாம் என்ற நிலைமையில் இருக்கும் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து பின்வாங்குவதற்கும், விடுதலைப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு நீண்ட வருடங்கள் நமது கட்டுப்பாட்டு பகுதியாக அரசுபோல் செயற் பட்டுக் கொண்டிருக்கும் யாழை விட்டு பின்வாங்கியதற்கும் உள்ள வேறுபாட்டை அர சியல் இராணுவ விஞ்ஞான கண்ணோட்டத்தில் வகைப்படுத்தி புரிந்து கொள்ள வேண்டியுள் ளது.

யாழில் இருந்து புலிகள் பின்வாங்கியதை சீனப் புரட்சியின் போது மாஓ தலைமையில் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி நடத்திய நீண்ட பயணத் துடன் பலர் ஒப்பிட்டு பேசி வருகின்றனர். புலிகள் தங்களின் பாதுகாப்பான பின்வாங்குத லுக்காக இலட்சக் கணக்கான மக்களை நிர்பந்தப் படுத்தி கூட்டிச் சென்றனர். ''மக்கள் எதிரியின் ஆக்கிரமிப்பு பகுதியில் வாழ விரும்பவில்லை, அரசு துருப்புக்கள் வெறும் நிலத்தைதான் கைப்பற்ற முடிந்தது மக்கள் துன்புறுதப்படு வார்கள்'' (புலியின் ஆட்சியை 5 ஆண்டு ஏற்று வாழ்ந்தால்) எனப் பல காரணங்களை வைத்தனர். புலிகளின் முன்னணிப் படை யுத்த முறை மக்களை தனது இராணுவ பின்வாங்க லுக்கு பயன் படுத்திய தந்திரத்தை, சீனக் கொம்யூனிஸ்டு கட்சியோ, மாஓவோ தங்களது யுத்தமுறையில் பயன்படுத்தியது இல்லை. கொரில்லா யுத்த, கிர மான யுத்த வடிவத்தை பின்வாங்குதலை — முன்னேறுதலை இரண்டு யுத்தங்களும் நடத்தி இருந்தாலும் மக்கள் யுத்த முறையும், முன்ன ணிப்படை யுத்த முறையும் அதன் அரசியல் இரா ணுவ விஞ்ஞானமும் என்றும் எங்கும் சமப்படுத் தவோ ஒன்றுபடுத்தவோ முடியாதது.

யாழில் இருந்து பின்வாங்கிய புலிகள் வன்னியில் தமது இராணுவத் தவறுகளை பலவீ னங்களை மீள் பரிசீலனை செய்த னர். தோல்வியின் காரணத்தை கொரில்லா படை வடிவத்தில் இருந்து கிரமமான படை வடிவத் துக்கு வளர வேண்டிய தேவையை, அதற்கான கன ரக ஆயுத தேவையை, படைநிலை பிரிப்புக் களை, வழங்கல் தயாரிப்புக்களை, கிரமமான படை நடத்தலுக்கான பயிற்சிகளை வன்னிப் பெரு நிலப்பரப்பில் செய்யத் தொடங்கினர். தமி ழீழப் பகுதி கொரில்லா அணிகளில் இருந்து கிர மமான படைக்கு போராளிகளை தரம் பிரித்த துடன், கிழக்கிலும், வன்னியிலும் கொரில்லா அணி செயற்பாட்டை புனரமைத்தனர். புலிகள் தமது முக்கியமான கடமையாக கிரமமான படை வடிவத்தை வளர்ப்பதில் அக்கறை காட்டினர். கடற்புலிகளின் கொரில்லா அணியை கிழக்கு கடலில், கடற் புலி (தற்கொலை) நடவடிக்கை களை அதிகமாக கூர்மைப்படுத்தினர். கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட கொரில்லா தாக்குதல் களில் ஈடுபட்டனர். முக்கியமாக சிறீலங்காவில் கரும்புலிகளின் ஊடுருவல் தாக்குதல்களை தொடக்கினர். மலையகத்தில் ஊடுருவி மின்மாற் றிகளை தகர்ப்பதில் அக்கறை காட்டினர். அரசு படைகளுடன் கூடிச் செயற்படும் தமிழ் கட்சி களின் அரசியல் - இராணுவ தலைவர்களை குறி வைத்து அழிக்கும் தனிப்படையை அணியை உருவாக்கினர். எதிரியின் கட்டுப் பாட்டு பகுதியில் யாழ்ப்பாணத்திலும் கூட சிறுரக துப்பாக்கி குழுவை (PISTOL GROUP) ஊடுருவி செயற்பட உருவாக்கினர். கிழக்குகடல் பகுதியில் கடற்புலி நடவடிக்கைகளை அதிகரித்து வெளிநா டுகளில் இருந்து ஆயுத இறக்குமதிகளை செய்தனர்; புதிய படையணிகளை உருவாக்கினர் சிறுத்தை அணி, அதிரடிப்படை, எல்லைக் காவற் படை விமான எதிர்ப்பு அணி என அதேபோல் உளவு அமைப்பை பல துறைகளுக்கும் உருவாக் கினர். மற்றய தமிழ்க் கட்சிகளுக்குள்ளும், எதிரி முகாமிலும், உள்நாட்டிலும் உலகளவிலும் உளவு அமைப்பு வலையை விரிவுபடுத்தி பலப் படுத்தினர்.

புலிகள் இயக்கத்தில் தலைமை மட்டத்தில் எழுந்த முரண்பாட்டை கச்சிதமாக கையாண்டு பிரபாகரன் வெற்றி பெற்றார். புலிப் போராளிகள் எதிரியிடம் சரண் அடைவது என்பதை திட்ட வட்டமாக தடுத்து நிறுத்தினர், எதிரியின் 'ஆயுத கண்காட்சி' முறைக்கு வாய்ப்பு அளிக்கவில்லை.

வெற்றியைக் கேணியில் M124 ரக உலங்கு வானூர்தி முதலில் வன்னியில் வீழ்த்தப்பட்டது. 96 யூலையில் ''ஓயாத அலை - 1'' முல்லைத்

www.tamilarangam.net



தீவு இராணுவ முகம் மீதான புலிகளின் கிரமமான படையணித் தாக்குதல் நடந்தது இதில் புலிகள் மிகப்பெரிய வெற்றியை பெற்றனர். 1991, 92-ல் 'பலவேகய' இராணுவ நடவடிக்கை மூலம் முல்லைதீவு பகுதியை அரசு கைப்பற்றி யது. யாழிலிருந்து புலிகள் வன்னிக்கு பின்வாங்கி 7-வது மாதம் கழிந்து இத்தாக்கு தல் மீண்டும் நடந்தது. மேயர் லோறன்ஸ் பெர்னான்டோ தலைமையில் 2000 துருப்புக்கள் இருந்த முகாம் அழிக்கப்பட்டது. 1000 துருப்புக்கள் கொல்லப்பட்டனர் காணாமல் போயினர், கைது செய்யப்பட்டனர் சிலநூறு துருப்புக்கள். 30 மில்லியின் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் மற்றும் குண்டுகள், வெடி பொருள்கள் தொலைத் தொடர்பு சாதனங்களை புலிகள் கைபற்றினர். இது கிரமமான படையணி குறுகிய நாள் நடத்திய ஸ்தான யுத்த முறையின் வெற்றியாக அமைந்தது. தேசிய விடுதலை யுத்த வரலாற்றில், முகாமை மீளக் கைப்பற்ற சிறீலங்காத் துருப்புக்கள் வான்வழியாக அலம்பில் பகுதியில் இறங்கியபோது புலிகளின் போர் நடவடிக்கையில் 2 அதிகாரிகளும் 50 துருப்புக்களும் கொல்லப்பட்டனர். எதிரியின் மீள்தாக்குதல் கூட தோற்கடிக்கப்பட்டது. புலிகளின் இழப்பு 350-ஐ தாண்டவில்லை, இந்த ''ஓயாத அலை - 1''-இன் வெற்றி விடுதலைப் புலிகளுக்கு ஆயுத பலத்தை, உளவியல் பலத்தை, கிரமமான படைக்கு சிறந்த யுத்த பயிற்சியை வழங்கியது என்றால் மிகையாகாது. இதனால்தான் புலிகளின் தலைவர் 'ஓயாத அலை' என்ற ஒப்பரேசன் பெயரை தொடர்ந்து பாவிக்கிறார். முல்லைத் தீவில் கைப்பற்றிய ஆர்ட்லெறி ஆயுதங்கள் புலிகளுக்கு இன்று கைகொடுக்கிறது கவனிக்கத்தக்கது.

இதற்கு பதிலடியாக சிறீலங்கா இராணுவம் 'சத்திய ஜெய' (உண்மை வெற்றி) இராணுவ நடவடிக்கையை 1 டிவிசன் துருப்புக்களுடன் தொடங்கி மேற்கொண்டு 500 துருப்புக்களை இழந்து புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சியை கைப்பற்றியது, புலிகள் 250-க்கும் மேலான போராளி இழப்புடன் கட்டுப்பாட்டை கைவிட்டு பின்வாங்கினர். மூன்று மாதத்தின்பின் பரந்தனில் உள்ள ஆர்ட்லெறி அரசு தளத்தினுள் புலிகள் ஊடுருவி தாக்கி அழித்தனர். இந்த ஆர்ட்லெறி தளம்தான் அரசு படைகளின் முன்னேறுதலுக்கு கைகொடுத்து வந்தது.

97 மாசி மாதத்தில் சிறீலங்கா அரசு துருப்புக்கள் வவுனியா - யாழ் (A9) நெடுஞ்சாலையை கைப்பற்றுவதற்கான தரைவழிப்பாதையை திறப்பதற்கான ('ஜெயசிக்குறு') 'வெற்றி நிட்சயம்' இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. (தெற்காசியாவில் மிக அதிக காலம் நீடித்த இராணுவ நடவடிக்கை 'ஜெயசிக்குறு' எனப்படுகிறது) புலிகள் எதிரியின் இப்பெரும் இராணுவ நடவடிக்கையினை எதிர்த்து கொரில்லாப் போர்த் தாக்குதல்களையும், கிரமமான படையின் நடமாட்ட யுத்த வடிவ தாக்குதல்களையும் எல்லா வழிகளிலும் பிரேயாகித்து 'வெற்றி நிட்சயம்' நடவடிக்கையின் 1, 2-ம் கட்ட தாக்குதல்களை வெற்றி பெற விடாது தடுத்து வந்தனர். ஆனால் மிகப் பெரியளவில் மனிதவள இழப்பை சந்தித்தனர்.

புலிகளிடம் தேவையான அளவு ஆயுதங்கள் இருந்தபோதும், படைவடிவ வளர்ச்சியை கண்ட வேளையில் ஆள் பற்றாக்குறை (மனித வளம்) இருந்தது. இதனால்தான் புலிகள் குறைந்த இழப்பில் கூடிய வெற்றியை சாதிக்கும். எங்கும் ஊடுருவி சென்று தாக்கி அழிக்கக் கூடிய கரும்புலி (தற்கொலைப்படை) தாக்குதலை, தரையிலும், கடலிலும் ஊக்குவித்தனர். கிரமமான படை நடவடிக்கைகளில் கூட கரும்புலிகளை பயன்படுத்தினர். கட்டுப்பாட்டு பகுதியின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தவும், எதிரியின் தாக்குதல்களை நின்று பிடித்து முறியடிக்கவும், இழப்புக்களை சரி செய்யவும், புதிய தாக்குதல்களை எதிரி மீது நடத்துவதற்கான படைகளை தயார் செய்யவும், பலப்படுத்தவும் என பல வகையான யுத்த வேலைகளுக்கு படையின் மனிதவளம் பலம் என்பது மிக அவசியமானது. யுத்த வளர்ச்சியுடன் அதிகரிக்க வேண்டியது. புலிகளின் அரசியல் கண்ணோட்டம் மக்களின் யுத்த பங்களிப்பு பற்றிய சுத்த இராணுவப் பார்வை, தேசியத்தில் உறுதியாக நின்றாலும், மக்களின் சனநாயக கோரிக்கைகளை கவனிக்க தவறுவதும் - எதிராக நடப்பதும், வயது நிரம்பிய ஆண்களும் - பெண்களும் போராட்டத்தின், புலிகளின் கடந்த கால - சமகால செயற்பாடுகளை பார்த்து இயல்பாகவே ஒதுங்கி நிற்பது. இதனால் புலிகள், மனிதவளப் பிரச்சனை தீர்க்க வயது குறைந்தவர்களை - சிறுவர்களை படையில் சேர்த்து வந்தனர். அரசின் பிரச்சார அழுத்தம், மனிதவுரிமை அமைப்பு, குழந்தைகள் சிறுவர் அமைப்புக்களின் அழுத்தம் காரணமாக அய்நா (U.N.)

www.tamilarangam.net



### தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில், புலிகளின் யுத்தப் பங்களிப்பு பட்டியல்

| | | |
|---|---|---|
| 1982-இல் வீரமரணம் அடைந்தவர்கள் | - | 01 |
| 1983-இல் | ” - | 05 |
| 1984-இல் | ” - | 36 |
| 1985-இல் | ” - | 123 |
| 1986-இல் | ” - | 258 |
| 1987-இல் | ” - | 451 |
| 1988-இல் | ” - | 363 |
| 1989-இல் | ” - | 372 |
| 1990-இல் | ” - | 960 |
| 1991-இல் | ” - | 1613 |
| 1992-இல் | ” - | 788 |
| 1993-இல் | ” - | 925 |
| 1994-இல் | ” - | 374 |
| 1995-இல் | ” - | 1502 |
| 1996-இல் | ” - | 1374 |
| 1997-இல் | ” - | 2099 |
| 1998-இல் | ” - | 1791 |
| எனையோர் | - | 266 |
| தனிக்குழு | - | 10 |
| ஆண்கள் | - | 11071 |
| பெண்கள் | - | 2240 |
| மொத்தம் | - | 13.311 |

இராணுவ நடவடிக்கைகளில் வீரமரணம் அடைந்தவர்கள்

| | | |
|---|---|---|
| 91 ஆணையிறவு கடல் வெளிசமர் | - | 604 |
| மணலாறு | - | 233 |
| ஒப்பரேசன் தவளை | - | 460 |
| கொக்கு தொடுவாய் | - | 175 |
| இடி முழக்கம் | - | 181 |
| சூரியக் கதிர் | - | 438 |
| ஓயாத அலை - 1 | - | 315 |
| சத்ஜெய - 02 | - | 100 |
| சத்ஜெய - 03 | - | 133 |
| பரந்தன் - ஆணையிறவு | - | 193 |
| கிளிநொச்சி பரந்தன் | - | 300 |
| ஜெயசிக்குறுய் | - | 2146 |
| ஓயாத அலை - 2 | - | 405 |
| தரைக்களம்புலி | - | 54 |
| கடற்களம் புலி | - | 92 |

*நன்றி - சூரியப் புதல்வர்கள் 1999*

சபையின் பிரதிநிதி ‘ஓலறா’ நேரடியாக வன்னிப் பகுதிக்கு வந்து புலிகளிடம் சிறுவர்களை படையில் சேர்ப்பதில்லை என்ற உத்தரவாதத்தை புலிகளிடம் பெற்றது நினைவில் கொள்ளதக்கது. இதன்பின் புலிகள் தமது மனித வளப் பிரச்சனையை தீர்க்க ஒரு அறிவித்தல் வெளியிட்டார்கள், ஏனைய இயக்கங்களில் இருந்த போராளிகளை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தங்களுடன் சேர வேண்டும் என்று முதன் முதலாக அறிவித்தார்கள், மற்றைய இயக்கங்களை அழித்து தடை செய்தபோது, புலிகள் சக இயக்க தலைமைக்கும் கீழ் அணிக்கும் உள்ள வேறுபாட்டை கவனத்தில் கொள்ளவில்லை, கீழ் அணிகளை இன்று யுத்தத்தில் இணைக்க சிந்திக்கின்ற போதும் கட்டாயப்படுத்தவே முயல்கிறார்கள். புலிகளும் மக்களும் ஒன்று, புலிகள் மக்கள் யுத்தம் புரிகிறார்கள் எனப் பேசுபவர்கள், புலிகளின் படைக்கு மனிதவளப் பலயீனம் தொடர்ந்து இருப்பதற்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும். தமிழீழத்தில் நடுத்தர வயது ஆண் - பெண்களை திரட்ட முடியாத புலிகளின் தலைமை, தமிழ்நாட்டில் உள்ள இன உணர்வுமிக்க பொடியன்களை வரவழைத்து ஆயுதப் பயிற்சிக் கொடுத்ததும் கவனிக்க வேண்டியது ‘தமிழ் தேச மீட்புப் படையின் அடிப்படையை’ அறிவது நல்லது.

1985-களில் தமிழீழ விடுதலை யுத்தத்துக்காக தங்கள் இன்னுயிரை அர்ப்பணிக்க 5 இயக்க தலைமைகளின் கீழும் 20,000 போராளிகள் ஆரம்ப இராணுவப் பயிற்சி பெற்று இருந்தனர் என ஒரு கணிப்பீடு தெரிவிக்கிறது. 15 ஆண்டுகளில் தொடர்ந்து யுத்தம் நடக்கிறது. போராட்டம் வளர்ந்து செல்கிறது. புலிகளின் தலைமையில் எனின், புலிகளுடன் இணைந்து யுத்தம் புரியும் போராளிகளின் பலம் மட்டும் தேவையான அளவுக்கு அதிகரிக்கவில்லை, புலிகளின் அரசியல் இராணுவப் பலயீனங்கள் என்ன? சிறீலங்கா அரசு தனக்கு எதிராக போராடக் கிளம்பிய ஆயுதம் தரித்த தமிழ் இயக்கங்களையே, 87 ஒப்பந்தத்துடன் சமரசப்படுத்தி அவர்களை புலிகளுக்கு எதிராக செயற்படவிட்டு, தான் புலிகளிடம் ஆக்கிரமித்த பகுதிகளில், துரோக குழுக்களின் அரசியல் இராணுவ செயற்பாட்டுக்கு அனுமதித்து இருக்கிறது. புலிகளோ தங்களை சகோதர இயக்கமாக கருதும், கூட்டிணைந்து போராடத் தயாராக இருக்கும். சிறீலங்கா அரசுக்கு எதிரான உறுதியான அரசியல் பார்வையும் மக்களின் சனநாயகம் - தேசத்தின் விடுதலையில் தெளிவும் உள்ள புரட்சிகர தேசபக்த அமைப்புக்களை கூட செயற்பட தடை விதித்து அழித்து வரு

www.tamilarangam.net



கிறது. புலிகளின் தனி இயக்க சர்வாதிகார கொள்கையில் மாற்றம் வராத வரையில், மனித வளப் பிரச்சனை யுத்தத்தில் தொடரும் இதை கவனிக்க வேண்டும்.

1998 சிறீலங்கா அரசு புதிய இராணுவ நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிட்டது; ஒட்டி சுட்டான் மீது 'றிவிபல' மன்னார் பகுதி மீது 'றணகோச' 1, 2, 3, 4 என பல கட்ட தாக்குதலை தொடுத்தது. 'எடிபல' தாக்குதலில் புலிகளின் கடும் எதிர்ப்பு இன்றி அரசு துருப்புக்கள் தங்களின் மூலோபாய ரீதியான தாக்குதல்களில் முன்னேறி இலக்கு வைத்த இடங்களை கைப்பற்றினார்கள். 'நீர்ச்சிந்தல்' 1, 2 இராணுவ நடவடிக்கையில் புலிகள் கடுமையான இழப்புக்களை சந்தித்தனர், அரசு துருப்புக்கள் இவ்இராணுவ நடவடிக்கைகளை 'கேக் யுத்தம்' (CAKE WAR) கேக் சாப்பிடுவது எவ்வளவு இலகுவானது. அதுபோல் இருந்தது என இராணுவ ஆய்வாளர்கள் எழுதினர். புலிகளின் இந்த இழப்புக்களையும், பின்வாங்குதலையும் யுத்த களத்துக்கு வெளியே இருந்து கண்காணித்தவர்கள், மனித இழப்பு எண்ணிக்கை அடிப்படையில் கணக்கு பார்த்ததுடன் புலிகள் யுத்த ரீதியாக நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாக எழுதினர். உண்மையில் புலிகளின் இந்தப் பின்வாங்கல்கள், இழப்புக்கள் மூலோபாய ரீதியான பின்வாங்குதலாக தோல்வியாக இருக்கவில்லை, தந்திரோபாய ரீதியான பின்வாங்கலாகவே இருந்தது என்பதை 98-இன் பிற்பகுதியில் கிளி நொச்சியை கைப்பற்றிய புலிகளின் ''ஓயாத அலை - 2'' மூலோபாய ரீதியான எதிர்தாக்குதலும் அரசு துருப்புக்களின் தோல்வியும் நிரூபித்தது.

புலிகள் விடுதலை யுத்தத்தின் மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டத்தில்தான் இருந்தார்கள். ''எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பும் எமது எதிர்தாக்குதலுக்குமான கட்டத்திலேயே'' தேசிய விடுதலை யுத்தம் நடந்து கொண்டிருந்தது. 1996-ல் அரசு படைகள் மூலோபாய ரீதியான பாதுகாப்பில் இருந்தபடி முல்லைத் தீவு. முகாமை இழந்தான். கிளி நொச்சியை கைப்பற்றினான். பாதுகாப்பில் இருந்தபடி எதிர்த் தாக்குதலை முன்னேறி நடத்தி ஒட்டி சுட்டான், மடுப்பகுதியை கைப்பற்றினான், கிளிநொச்சியை மீண்டும் இழந்தான், புலிகள் யாழ் கட்டுப்பாட்டு பகுதியில் தமிழீழ அரசு நடத்தியது போல் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் முல்லைத் தீவை மையப்படுத்தி ஒரு தமிழீழ அரசை நடத்தி வந்தனர், கிரமமான படை வடிவத்தில் இரண்டு யுத்த முறைகளான நடமாட்ட யத்தத்தையும் ஸ்தான யுத்தத்தையும் பின்பற்றி வந்தனர். ஆனால் தரையிலும் கடலிலும் கொரில்லா தாக்குதல்கள், கரும்புலித் தாக்குதல்கள் தான் முதன்மை பெற்று விளங்கின; சில தாக்குதல் உதாரணங்களை கவனிப்போம். முல்லைத்தீவு கடற்பரப்பில் 2 (FAG) 'டோரா' மூழ்கடிக்கப்பட்டது. முல்லைத்தீவில் 'ஐரிஸ்மோனா' பயணிகள் கப்பலை உள்ளிழுத்து கடற்படையை வரவைத்து போர் ரோந்துக் கப்பல் 'ஜெயசாகரா' மற்றும் டோராக்களை தாக்கி அழித்தனர். கொழும்பு துறைமுகத்தில் சரக்கு கப்பல் மீதான தாக்குதல் 'ஜெயசிக்குரு'வுக்கான தாண்டிக்குளம் ஆயுத வழங்கல் முகாம் மீதான கரும்புலி தாக்குதல். சீனன் குடாவில் தரித்து நின்ற விமானம் மீதான தாக்குதல், மாங்குளம் முகாம் தாக்குதல், சிலாவத் துறை, வெற்றிக்கேணி கடற் சமர்கள், முல்லைத்தீவு கடற்சமர் ஒன்றில் கடற்புலிகள் பெரும் இழப்பை சந்தித்தது. திருமலையில் கரும்புலி படகு விபத்துக்குள்ளாகியது கடற்புலிகள் கொரில்லா அணியாகவும், கரும் புலி அணியாகவுமே செயற்பட்டு வந்தது. கரும் புலிகளின் இழப்பு 97 வரை மொத்தம் 147, ஆண் 110, பெண் 37, தரைத் தாக்குதலில் 55 கடலில் 92 கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

சிறீலங்காவில் நடந்த தாக்குதல்கள் கொலனாவ கபுகஸ்கந்த எரிபொருள் நிலையம் 95, மத்திய வங்கி குண்டு வெடிப்பு 96, உலக வர்த்தக மைய குண்டு வெடிப்பு 97, கண்டி தலதா மாளிகை 98, சிறீலங்காவில் அரசியல் வாதிகள், இராணுவ அதிகாரிகள் மீதான தற்கொலைத் தாக்குதல்கள், யாழில் 2 மேயர்கள், 7 உள்ளூராட்சி தலைவர்கள், EPRLF, PLOT & இன் இராணுவத் தலைவர்கள், என பட்டியல் தொடர்கிறது. புலிகள் தமக்கு எதிரி எனக் கருதுபவர்களின் அரசியல் - இராணுவத் தலைவர்களை திட்டமிட்டு அழிப்பதன் மூலம் ஏற்படும் எதிரியின் கால வெற்றிடம், தமது வளர்ச்சி என்ற கொள்கையை ஆரம்பம் முதல் சிறீலங்கா அரசுக்கு எதிராக மட்டுமல்ல, சக இயக்கங்கள் மேலும் கையாண்டு வருகிறார்கள் என்பதும் கவனிக்கக் கூடியது.

99-இன் முற்பகுதியில் கிளாலி கடற்படை கண்காணிப்பு தளம் மீது புலிகளின் 'கடற்சிறுத்தை அணி' தாக்குதல் நடத்தியது. பல இலட்சம் பெறுமதியான 'றடார் சாதனங்களை' கைப்பற்றியது. தனங்கிளப்பு 'றடார்' நிலையம்

www.tamilarangam.net



அழிக்கப்பட்டது. சிறீலங்கா துருப்புக்களின் இராணுவ தாக்குதல்களுக்கு தரைப்படையின் முன்னேறுதலுக்கு ஆர்ட்லரி, மோட்டார் தாக்கு தலின் பின்பக்க உதவியும், விமானப் படையின் குண்டு வீச்சும் முக்கிய பங்காற்றி வந்தன. முல்லைத் தீவு முகாம் மீதான வெற்றியில் புலிகள் எதிரியிடம் இருந்து கைப்பற்றிய 155 MM பீரங்கிகளின் சுடுவீச்சு தூரம் 39 KM நிமிடத் துக்கு குறைந்தது 3 செல்களை ஏவக்கூடியது. 122MM பீரங்கிகளின் சூடு வீச்சு தூரம் 18 MM நிமிடத்துக்கு 6 செல்களை ஏவ முடியும். 120 MM மோட்டர் சுடுவீச்சு தூரம் 7.5 MM 12 மோட்டர்களை, 3 பீரங்கிகளை கைப்பற்றி இருந் தனர், இதனைக் கொண்டு புலிகள் பீரங்கி படை யணியை உருவாக்கினர். கிரமமான படை வடிவ வளர்ச்சியில் இது முக்கியமானது. 'ஓயாத அலை 3-இன் வெற்றிக்கு' பீரங்கி களின் பயன்படுத்தல் பெரும் துணை புரிந்தது. எதிரிக்கு எதிரான நமது ஆயுத தர வளர்ச்சி என்பதும் யுத்தத்தின் முக்கிய அம்சம், ஆணை யிறவு படைத்தளத்தை கைப்பற்றியதும் புலிக் கொடியை பீரங்கிப் படையணி 'கொமாண்டர் பாணு' ஏற்றி வைத்து வெற்றி உரை நிகழ்த்தியது கவனிக்கத்தக்கது. 99-ல் சிறீலங்காப் படையின் விமானப்படை மிகப் பெரியளவில் சிதைந்திருந் தது. குண்டு வீச்சு விமானங்களும், F-10, புக்காரா மற்றும் அவ்ரோக்களும், M1 ரக உலங்கு வானூர்திகளும் புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணை தாக்குதல்களால் சுட்டுவீழ்த் தப்பட்டன. இயந்திரக் கோளாறுகுளால் பல வீழ்ந்து நொறுங்கியது. இது தமிழீழப் பகுதி யிலும் சிறீலங்காவிலும் நடந்தது 30 விமானப் படைவான் கலங்களை இதுவரை விமானப் படை இழந்துள்ளதாக ஒரு கணிப்பீடு கூறுகி றது; ஆளில்லாத வேவு விமானங்கள் எல்லாம் செயலற்று போனது. புலிகளிடம் அமெரிக்கா வின் 'சிங்கர்' ஏவுகணைகளும் ரசியாவின் 'சாம்' ஏவுகணைகளும் நிலத்தில் இருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகளும் உள்ளன. விமான எதிர்ப்பு படையணி உள்ளது.

சிறீலங்காப்படை 1 இலட்சத்து 20,000 துருப் புக்களை கொண்டிருக்கிறது. புலிகளின் படை பலத்தைவிட மனிதவள கணிப்பீட்டில் 12 மடங்கு அதிகமானது எதிரி துருப்பு எண்ணிக்கை ஆனால் யுத்தத்தில் புடம் போட்டப்பட்ட துருப்புக்களின் எண்ணிக்கை 18,000 மட்டுமே. இதிலும் சிறந்த தாக்குதல் அணியாக செயற்படுவது 1 டிவிசன் மட்டுமே. அதுதான் 53-வது டிவிசன், இதுபற்றி சிறிது கவ னிப்பது அவசியம்.

## சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல் படையணிப் பலவீனம்

1990 - 94 காலப் பகுதியில் 'தனிப்படையணி' என்ற பெயரில் சிறீலங்காப் படையின் சிறந்த போர்ப் படையாக மணலாற்றில் இருந்து செயற் பட்டது. 92-ல் புலிகளின் மணலாற்று தாக்குதலை முறியடித்து 200-க்கும் மேலான புலிகளை அழித் தது கவனிக்க கூடியது. அதிரடிப்படை வீரர்களை கொண்ட 'சுதந்திரமான பிரிகேட்'டாக செயற்பட்டு வந்தது. இது 'கொமாண்டோ றெஜிமெண்ட்' எனவும் அழைக்கப்பட்டது. 1995-ல் ''ஒப்ப றேசன் றிவேசா'' (சூரியக்கதிர்) யாழ் மீதான தாக்குதலுக்காக ஒரு TASK FORCE ஆக 9,000 விசேட படையினரை கொண்ட முழுப்படையணி யாக விரிவடைந்து 96-ல் 53-வது டிவிசனாக மாற்றப்பட்டது. யாழ் மீதான ஆக்கிரமிப்பில் முக்கிய பங்காற்றிய பின் 97-ல் அமெரிக்க படைத் துறையின் உயர் இராணுவ அதிகாரியின் மேற்பார்வையில் அமெரிக்க உதவிகளுடன், வழி நடத்தப்பட்டு வந்தது. அமெரிக்க இரா ணுவப் பயிற்சி உள்நாட்டிலும் அதி விசேட பயிற் சி. அமெரிக்க பசுபிக் பிராந்தியத்தின் இராணுவ கட்டளைத் தளங்களிலும் வழங்கப்பட்டு வந்தது. வருகிறது. இப்படை அணியின் ஒரு துருப்பை உருவாக்க 4 இலட்சம் ரூபாய் செலவ ழிக்கப்படுகிறது. சிறீலங்காப் படையின் தரைப் படைத் தாக்குதல் அணியான 53-வது டிவிசன் மீது, புலிகள் வன்னி யுத்தத்தில் குறிவைத்து தாக்கி வந்தனர். இதைப் பலவீனப்படுத்தி அழிப் பதில் அக்கறை காட்டினர்! வெற்றி நிட்சயம்! தாக்குதலில் புளியங்குளத்தை கைப்பற்றுவதற் கான நீண்ட மோதல்களில், மன்னகுள தாக்கு தலில் புலிகளிடம் சிக்கி நொருக்கப்பட்டதும் இந்த எதிரி அணியே, 98-இல் ஓயாத அலை - 2-ல் கிளிநொச்சியில் இழந்த பகுதிகளை மீட்பதற் கான மறுதாக்குதல்களில், மாங்குளம், கரிப்பட்ட முறிப்பு மோதல்களில் புலிகளினால் பெருமளவு தாக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டது. 53-வது டிவிசன் இராணுவ ரீதியாக இவ்வளவு பலவீனங் களை எதிர்கொண்டிருந்தது சிறீலங்காப் படை. (இன்று ஓயாத அலை வெற்றிக்கு பின்பும் 53வது படையணிக்கு அமெரிக்கா 'பச்சை கொமவன் டோ பயிற்சி' கொடுக்கிறது. ஆசிய நாடுகளில் 20 நாட்டு இராணுவம் U.S. இடம் இப்பயிற்சி பெறு கின்றன)

www.tamilarangam.net



அரசியல் ரீதியில் சந்திரிகாவின் சமாதான முக மூடி போட்ட ஆக்கிரமிப்பு யுத்தம், ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க முடியாத நிலை, தீர்வுப் பொதி கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் உள்நாட்டிலும், உலகளவிலும் செல்லாக்காசாகிக் கொண்டிருந்தது. ஆட்சியை கைப்பற்றும் போது கொடுத்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற் றாது அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் சந்திரிகா குறியாக இருந்ததால், யுத்த செலவைக் கூட்டிக் கொண்டார். பொருளாதார நெருக்கடியால், சிறீ லங்கா மக்கள் கூட வீதிக்கு இறங்கிக் கொண்டி ருந்தனர். ஆளும் கட்சிக்கும், எதிர் கட்சிக்கும் இடையிலான மோதல் எல்லாத் தளங்களிலும் வெளிப்பட்டது. அதிகார வர்க்கம் சூதாடிக் கொண்டிருந்தது. தேசிய பாதுகாப்பு வரியை மக்களிடம் அறவிட்டு கொண்டு ஆயுதங்கள், வெடிபொருள்கள், இராணுவ வாகனங்கள், விமானங்கள், உலங்கு வானூர்தி கடற்படை கப்பல்கள் வாங்குவதில் மிகப்பெரிய மோசடியும், ஊழலும் தலைவிரித் தாடியது. தரமற்ற வான்கலக் கொள்வனளவு பற்றி விவாதம் மட்டும் நடந்தது. அய்நா படை, NATO படைகளுக்கு குண்டு துளைக்காத கவசங் களை விற்பனை செய்யும் பிரித்தானிய கொம்ப னியிடம் செய்யப்பட்ட ஒப்பந்தமே கேள்விக்குறி யானது.

சிறீலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு யுத்தத் துக்கு ஆரம்பம் முதல் தலைமை தாங்கி வந்த UNP கட்சி சார்பான இராணுவ தளபதிகளுக்கும், SLFP கட்சி சார்பான தளபதிகளுக்கும் அதிகாரப் பனியுத்தம் ஒன்று நடந்து வந்தது. இன்றுவரை தொடர்கிறது. 25,000 படையினர் இராணு வத்தை விட்டு ஓடி இருந்தனர். 12,000 படை யினர் அங்கவீனமாகியிருந்தனர் படையில் இருந்து காணாமல் போனவர்கள். புலிகளால் சிறைபிடிக்கப்பட்டிருந்தவர்கள். (800 பேர்) 'காணாமல் போனோர் சங்கம்' தயானந்த தலை மையில் அரசை நிர்பந்தித்துக் கொண்டிருந்தது. புலிகள் தங்களிடம் சிறைபிடிக்கப்பட்டிருந்த இராணுவத்தை உண்ணாவிரதப் போராட்டம் நடத்த வைத்து அரசை நிர்பந்த நிலைக்கு தள்ளி, சரியான பிரச்சாரம் மேற்கொண்டனர். எதிரி இரா ணுவம் மீது உளவியல் தாக்குதல் நடத்தினர். (சிறீ லங்கா அரசுக்கு எதிராகப் போராடிய தமிழீழ தேச பக்த போராளிகள் புலிகளின் சிறைகளில் இன் றும் வாடுகின்றனர் என்பதை நினைத்துப் பார்ப்பதும் நல்லது) அரசு பல மன்னிப்புக்கள் வழங்கியும், புதிய இராணுவச் சேர்ப்புத் திட்டங் களை சலுகைகளை வழங்கியும் ஓடிப்போன படையினர் திரும்புவதில், ஆட்சேர்ப்பில் அரசு வெற்றி பெறவில்லை. இதனால்தான் சந்திரிகா அரசு தீர்வுப் பொதியை எதிர்க்கும் சிங்களவர்க ளிடம் 30,000 பேரை படைக்கு திரட்டி தரமுடியு மா? என சவால் விடுகிறார். அதேவேளை ஒரு M.P. அவரது தொகுதியில் 100 பேர் வீதம் படைக் கு ஆள் திரட்ட கட்டளை இடுகிறார். இதனால் 3,000 தமிழர்களை வவுனியா, மன்னாரில் இரா ணுவத்தில் சேர்க்க 20 ஆண்டுகளின் பின் போட்ட திட்டமும் தோற்றுப் போனது; ஓடிய இராணு வத்தை கைது செய்து சிறையில் அடைத்தது. குரு நாகல, பனாகொடை சிறைகளில் இருந்து சிலர் தப்பினர். அரசின் கைதுக்கு பயந்து தலைமறை வான முன்னாள் இராணுவத்தினர். சிறீலங்காவில் கொலை, கொள்ளை போன்ற செயல்களில் ஈடு பட்டனர். இராணுவத்துக்குள்ளேயே அதிகாரிக ளுக்கும், கீழ்நிலைப் படையினருக்கும் இடையில் கட்டளைகளை நிறைவேற்றுவதில் முரண்பாடு கூர்மை அடைந்திருந்தது. MIL, DIT, NEB என இராணுவ உளவுப்பிரிவு மிகப் பலவீன மான நிலைக்கு சென்றது.

(புலிகளின் இராணுவ உளவு அமைப்பு மிக நவீன முறைகளில் பலப்பட்டிருந்தது. புலிக ளுக்கு தகவல் கொடுத்தவர்கள் என்ற குற்றச் சாட்டில் முல்லைத்தீவு, ஆணையிறவு முகாமில் இருந்த ஒரு சிலர் இராணுவப் பொலீசால் கைது செய்யப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.) இத்த கைய ஒரு ஒட்டு மொத்த இராணுவ அரசியல் சூழ்நிலைமையில்தான் சிறீலங்கா இராணுவம் தனது 50-வது ஆண்டு நிறைவை 99-ல் கொண்டாயது, புலிகள் தங்களின் ''ஓயாத அலை -3''-வது கட்ட மூலோபாய ரீதியான எதிர்த் தாக்கு தலை 2.11.99-ல் தொடக்கினர். மூன்றரை ஆண்டுகளில் சிறீலங்காப் படைகள் கைப்பற்றிய பகுதிகளில், 'றணகோச' பகுதிகளை விட்டு மீதம் அனைத்தையும் 1 வார கால முன்னேறும் எதிர் தாக்குதல் யுத்தத்தில் எதிரியிடம் இருந்து விடு வித்தனர். கடல்தர முழக்கமும், கடற்புலிகளும் சிறப்புப் பங்காற்றினர். 16 கொம்பனி, 40 பிளட் டுன்கள் புலிகளிடம் தோற்றுப் பின்வாங்கின. 11 முகாம்கள், 26 சிறு மற்றும் தற்காலிக முகாம்கள் புலிகளின் கட்டுப்பாட்டுள் வந்தது. சிறீலங்கா தலைநகரில் கரும்புலித் தாக்குதல்கள் நடந்தன. 1991-இல் ஆணையிறவு முகாம் மேலான 6 வார கால தாக்குதல் சண்டையில் தோல்வி கண்ட,

www.tamilarangam.net



பாரிய இழப்பை சந்தித்த புலிகள் ஆணையிறவு இயக்கக் கூட்டுப் படைத்தளத்தின் மீது 3,000 புலிகள் பங்கு பற்றிய கிரமமான படை வடிவத்தின் ஸ்தான/நடமாட்ட யுத்த முறையில் நடத்திய ஓயாத அலை -3, 1,000-த்துக்கு குறைவான புலிகளின் இழப்புக்களுடன் வெற்றி வாகை சூடியுள்ளது.

கொலனிய காலத்தின் ஆக்கிரமிப்பில் ஒல்லாந்தர்களால் உருவாக்கப்பட்டு, நவகொலனிய கட்டத்தில் சிறீலங்காப் படைகளால் பராமரித்து பாதுகாத்து, வட தமிழீழத்தை தென் மத்திய தமிழீழத்தில் இருந்து பிரித்து, ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்திய சிறீலங்காப் படைக்கு 54-வது டிவிசனின் தலைமையகமாக, கட்டளை பிறபிக்கும் தளமாக விளங்கிய ஆணையிறவு படைத்தளம், 53-வது டிவிசனையும் சேர்த்து 17,000 எதிரித் துருப்புக்களை கொண்டிருந்த ஆணையிறவு இயக்கச்சி கூட்டுப் படைத்தளம். அதன் உயிர் நாடியான வெற்றிலைக் கேணி கட்டைக்காடு கரையோர தளத்தை முன்னதாக புலிகள் கைப்பற்றி, உணவு, ஆயுதப்படை, வழங்கல் வழிகளை மிகச் சிறப்பாக தடுத்து நிறுத்தி, பரந்தனை கைப்பற்றி நீர் வழங்கலை நிறுத்தியழித்து எதிரியை பணயமாக்கினர், வெற்றிலைக்கேணி மீதான 'மறுதாக்குதலுக்கு' தாழையடியில் தயாராக இருந்த 53-வது டிவிசனின் ஒரு பிரிகேட் மீது புலிகள் தாக்குதல் நடத்தி வெற்றி கண்டதும், சாவகச் சேரி - ஆணையிறவு நெடுஞ்சாலையை, புலிகளின் ஒரு அணி கடல்வழியாக சென்று தரையில் இறங்கி Amphibious தாக்குதல் முறையில் முகமாலையில் ஒரு ஊடறுப்பு தாக்குதலை நடத்தி இயக்கச்சியை நோக்கி முன்னேறியது. 53-வது டிவிசனின் ஒரு படையணி இங்கும் தாக்கு பிடிக்க முடியாமல் திணறியது. 53-இன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் காமினியின் ஆலோசனையை ஏற்க்க மறுத்த படைத்தலைமை அவரை திருகோண மலைக்கு மாற்றியது. 30 அரசு படையினர் தண்ணீர் இன்றி இறந்தனர். 1200 படையினர் மோதலில் இறந்தனர். 3,000-க்கு மேல் காயமுற்றனர், இறுதியில் சிறீலங்காப் படை பின்வாங்கியது. ஆணையிறவில் புலிகள் புலிக்கொடி நாட்டினர். 22.4.2000, சிறீலங்காப் படை தாங்கள், புலிகளின் யாழ்ப்பாணம் மீதான முன்னேறுதலில் யாழை இழந்து விடுவோமா, யாழில் இருந்து பின்வாங்க முடியாமல் புலிகளிடம் சரண் அடைய வேண்டி வருமா என்ற அளவுக்கு இராணுவச் சமனிலை தலைகீழாகியது. 87-ல் இந்தியப் படைகளை எதிர்த்த புத்தபிக்குகள், இந்தியப் படையை வரவழைக்க முயன்றனர், சிறீலங்கா இராணுவத் தலைமைத் தளபதிகள், வெளியுறவு அதிகாரிகள் இந்தியாவுக்கும், சிறீலங்காவுக்கும் இடையில் பறந்து திரிந்தனர். விரைவில் ஆயுதம் வழங்கும் நாடுகளிடம் ரஸ்சியா, சீனா, தென்னாபிரிக்கா, ஈரான், பாகிஸ்தான், இஸ்ரேல், செக் குடியரசுக்கும் என சிறீலங்கா பாதுகாப்பு துறை அதிகாரிகளும், தளபதிகளும் பறந்தார்கள். இஸ்ரேலும், செக்கும், பாகிஸ்தானும் பின்னால் நடக்கப் போகும் ஆயுத வியாபாரத்துக்காக உடனடியாக இலவசமாகக்கூட ஆயுதங்களை வழங்கின. திடீர் குண்டுவீச்சு விமானம், பல குழல் ஏவுகணை உட்பட ஆயுத உதவிகள் உறுதி செய்யப்பட்டது. சிறீலங்கா அரசு 50 மில்லியன் டொலர் நிதி மேலதிகமாக யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் இராணுவத் தளபதியும், பாகிஸ்தான் (தளபதி) பிரதமர் ஒரே காலத்தில் ஒரே இராணுவக் கல்லூரி நண்பர்கள் எனக் கூறி பரஸ்பரம் உதவினர். வீரசூரியா பதவி ஓய்வுக்கு பின் பாகிஸ்தானுக்கான சிறீலங்காவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1971-இல், 1987-ல் படை அனுப்பி சிறீலங்கா அரசுக்கு உதவி, சிறீலங்கா - தமிழீழ மக்களின் போராட்டத்தை நசுக்கிய இந்திய அரசு, 87-ல் 70,000 படைகளை சமாதான ஆக்கிரமிப்பு படைகளாக அனுப்பி புலிகளிடம் மூன்று ஆண்டுகளில் 1250 படையை இழந்து, 3,500 படையினர் காயம்பட்டு, தோல்வி கண்ட அனுபவத்தால், படையை அனுப்ப மாட்டோம் என்றது. மத்திய கூட்டணி அரசில் உள்ள தமிழ்நாட்டுக் கட்சிகளின் கோரிக்கையால் இராணுவ உதவியும் வழங்கமாட்டோம் என்றது. ஆனால், யாழிலுள்ள சிறீலங்காப் படைகளை வெளியேற்ற ''ஒப்பறேசன் **PASHA**'' என்ற பெயரில் முப்படைகளும் தயாராக இருந்தன. இந்திய விமானப் படைத் தளபதி சிறீலங்காவுக்கும், சிறீலங்கா ஜெனரல்கள் இந்தியாவுக்கும் சென்று அடுத்த கட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி திட்டமிட்டனர். சிறீலங்கா அரசு படைவெறியேற்றம் பற்றி முடிவு செய்யவில்லை. இந்தியரசு இறுதியில் சிறீலங்கா படைகளுக்கு 1,400 மில்லியன் மனிதாபிமான உதவி வழங்கியுள்ளது. ஆனால் 20 பில்லியன் பெறுமதியான, உலங்குவானூர்தி இறங்கி ஏறும் வசதி கொண்ட, 80 படையினர் பிரயாணம் செய்யக்கூடிய, பெரிய கடல் ரோந்துக் கப்பலை

www.tamilarangam.net



சிறீலங்காவுக்கு கொடுத்துள்ளது.

இந்தியரசு உள்நாட்டில் காசுமீர், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்களில் தேசிய இன விடுதலை ஆயுத இயக்கங்களின், வேறு மாநிலங்களில் கொம்யூனிஸ கட்சிகளின் ஆயுதப் போராட்டத்தை எதிர் கொண்டிருக்கிறது. பஞ்சாபில் போராளிகளை நசுக்கி இருக்கிறது. (ஜெனரல் KPS கில்லின் உதவி சிறீலங்காவுக்கு கிடைத்துள்ளது) காசுமீரில், நாகலாந்தில் சில இயக்கங்களுடன் போர் நிறுத்தம் செய்துள்ளது இந்தியரசு. திரிபுரா விடுதலைப் புலிகள் (TNLT) அமைப்புடன் பேச்சு நடத்துகிறது; இதை மீறியும் பல இயக்கங்கள் போராடுகிறது. பாகிஸ்தானுடன் எல்லை யுத்த நெருக்கடியில் இருக்கிறது. வங்கதேசத்திலும், நேபாளத்திலும் பின்தளம் அமைத்துள்ள வடகிழக்கு மாநில ஆயுதப் போராட்ட இயக்கங்களை, நேபாளத்தில் மாஓயிச ஆயுதப் போராட்ட இயக்க நடவடிக்கைகளின் தாக்கத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கார்க்கில் யுத்தத்தின் (KRC) அறிக்கை அடிப்படையில் இராணுவப் பலப்படுத்தலை செய்கிறது. சீனாவின் தெற்காசிய இராணுவ கொள்கைக்கு பதில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இஸ்ரேல், பிரான்ஸ், ரசியாவுடன் மிகப்பெரிய இராணுவக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது. பாகிஸ்தானிடம் இருந்து பிரித்து கொடுத்த வங்கதேசத்தின் எல்லைப் பிரச்சனைகளை தீர்க்க முட்கம்பி வேலி போடத் தயாராகிறது. இந்தியாவிலுள்ள தேசிய இன விடுதலை இயக்கங்களுடன் அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு பேசத் தயாராகிறது. காசுமீரில் ''பிராந்திய சுயாட்சி'' தீர்வை முன் வைக்கிறது. இஸ்ரேல் நாட்டுடன் இராணுவ உபகரண கொள்வனவில் ஈடுபட்டுள்ளது. இஸ்ரேல் அரசின் 'மொசாட்' உளவு அமைப்பின் உலக விடுதலை இயக்க அழிப்பு அனுபவத்தை எல்லாத் துறைகளிலும் பெற ஒப்பந்தம் செய்துள்ளது. சிறீலங்காவின் இனப்பிரச்னைக்கு பிரிவினையை ஏற்றுக் கொள்வதில்லை என்ப தில் உறுதியாக நிற்கிறது. தன்கைகளை மீறி அன்னியர்கள் முடிவு செய்ய அனுமதிக்காது என்பதையும் தெளிவுபடுத்தி வருகிறது.

சிறீலங்கா அரசு 'யாழில் ஒரு இராணுவ வீரன் இருக்கும் வரை பின்வாங்கப் போவதில்லை' என அறிக்கை செய்கிறது. புலிகள் 'யாழை மீண்டும் பிடித்தே தீருவோம்' என உறுதிமொழி எடுக்கின்றனர். அரசு சர்வதேச பொருளாதார இராணுவ உதவிகளை பெற்று தன்னை திடப்படுத்த முயல்கிறது. வருகிறது. பிரிட்டன் கூட புலிகளை தடை செய்யவேண்டுமெனக் கோருகிறது. அரசும், புலிகளும் தங்கள் தங்கள் பாதுகாப்பு எல்லைக் கோட்டை விட்டுப் பின்வாங்காது பாதுகாப்பதற்கான தயாரிப்புக்களிலும், ஆர்ட்லறி, மோட்டர் செல்விச்சுக்களை நடத்துகின்றனர். அரசு படை கிபீர் விமானங்கள், புதிய MIC27 விமானக் குண்டு தாக்குதலையும் நடத்துகிறது; விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற கதையாக ஆணையிறவில் இருந்து தந்திரோபாயமாக பின்வாங்கியதாக படைத்தளபதிகள் கூறுகின்றனர். தேசிய விடுதலை யுத்தம் 'எமது மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதலும் எதிரியின் மூலோபாய ரீதியான பின்வாங்குதலுமான விடுதலை யுத்தத்தின் 3-வது' கட்டத்தின் வாசலுக்குள் நுழைந்திருக்கிறது. யுத்தத்தின் வளர்ச்சிக்கு மீண்டும் யாழ்ப்பாணம்தான் கைப்பற்றப்பட வேண்டுமா? என்பது புலிகளின் தலைமையும், தமிழீழ யுத்தம் வெற்றி பெற வேண்டும் என விரும்பும் இராணுவ ஆய்வாளர்களும், போராடும் சக்திகளும் சிந்திக்க வேண்டும். இராணுவ ரீதியாக தமிழீழப் போராட்டத்தை நசுக்கிவிட புலிகளை அழித்துவிட துடிக்கும் சிறீலங்கா அரசுக்கும், சர்வதேச எதிரிகளுக்கும் ''ஓயாத அலை வெற்றி'' எச்சரிக்கை செய்திருக்கிறது. தமிழீழ விடுதலைக்காக போராடுகின்ற புரட்சிகர தேசபக்த சக்திகள். புலிப் போராளிகளுக்கு, தலைமைக்கு வாழ்த்துக் கூற வேண்டியது கடமையாகும்.

## யுத்தத்தின் எதிர்காலம் என்ன? புலிகளின் கடமை என்ன?

யாழுக்குள் முன்னேறிய புலிகள் ''எதிரிப் படையினர் சரண் அடையவும்'', ''எதிரி வெளியேறவும்'' யுத்தப் பகுதிக்குள் சிக்கியுள்ள மக்கள் வெளியேறவும்'' கால அவகாசம் கொடுக்க தற்காலிக போர் ஓய்வை செய்ய இரண்டு தடவைகள் அறிவித்த போதும் எதிரி கீழ் இறங்கி வரவில்லை. தென்மராட்சியில் 40,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள், வடமராட்சிக்கும், வன்னிக்கும் சில ஆயிரம் மக்கள் சென்றுள்ளார்கள். எதிரியை மூலோபாய ரீதியாக இந்தளவுக்கு இராணுவ ரீதியில் பின்வாங்க வைத்த போதும், சிறீலங்கா அரசும், ஆளும் வர்க்கக் கட்சிகளும், அரசியல் ரீதியில் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வுப் பொதி, அரசியல் சாசன மறுசீரமைப்பு பற்றி பேசுகிறார்களே தவிர, 1985-களில் புலிகள் உட்பட தமிழீழப் போராளிகளால் முன்வைக்கப்பட்ட, திம்புக் கோரிக்கைகளைக்

www.tamilarangam.net



கூட அங்கீகரிக்க கீழ் இறங்கி வரவில்லை. இந்தியா, நோர்வே உட்பட எந்த வெளிநாடும், திம்புக் கோரிக்கைகளை சிறீலங்கா அரசு நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்க மறுக்கின்றன. மாகாணக் கவுன்சில்களின் கூட்டாட்சி போய், பிராந்தியங்களை ஒன்றிணைக்கும் ஒற்றையாட்சி திட்டத்தை கூட நிறைவேற்ற முடியாதளவுக்கு சிறீலங்கா ஆளும் வர்க்க கட்சிகள் மோதிக் கொள்கின்றன. இனவாத, மதவாத அரசியல் இயக்கங்கள், நிறுவனங்கள், 'சிங்களத் தேசிய வாதம்' என்ற பெயரில் இன, மத வெறிக்கு பின் சிங்கள மக்களை அணி திரட்டுகின்றன. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை, 'பயங்கரவாதம்' எனக் கூறி போரை உக்கிரப்படுத்தி புலிகளை அழிக்கக் கோருகின்றன, வெளிநாடுகளின் ஆயுத உதவி என்பது சிறீலங்கா அரசுக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் கிடைக்க தொடங்கியுள்ளது, ஒவ்வொரு நாடுகளும் பிராந்திய அளவிலும், சர்வதேசளவிலும் போராடும் போராளிகளுக்கு எதிராக ''பயங்கரவாதம் மற்றும் ஆயுத, போதை மருந்து கடத்தல், மனிதக் கடத்தலுக்கு'' எதிரானவர்கள் என்ற ஒப்பந்தங்களில் கூடி ஒப்பந்தம் போட்டு செயற்படுகின்றன; தடைகளை விதிக்கின்றன. இத்தகைய தேசிய - சர்வதேசிய அரசியல் - இராணுவ நிலைமையில் தமிழீழத் தேசிய விடுதலை யுத்தத்தின் எதிர்காலம் எப்படி முன்னேறப் போகிறது.

புலிகளின் ஓயாத அலை வெற்றிக்கு பின் முக்கியமான சில கேள்விகள் இராணுவ ரீதியில் எழுந்திருக்கின்றன. மாற்றங்கள் நடத்திருக்கின்றது.

Ü புலிகள் கொரில்லாப் படை வடிவத்தை தாண்டி, கிரமமான படை வடிவ வளர்ச்சிக்கு வந்திருக்கிறார்கள் என்பது மிகச் சரியானது.

Ü புலிகளிடம் யாழ்ப்பாணம் கட்டுப்பாட்டு பகுதியாக இருந்தபோது, விடுதலை யுத்தத்தின் இரண்டாவது கட்டத்தில் இருந்த வேளை ''எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பும் எமது எதிர்த்தாக்குதல் தயாரிப்பு கட்டத்தில்'' யுத்தத்தின் வளர்ச்சிக்கு இராணுவ ரீதியாக செய்யத் தவறிய கிரமமான படை வடிவ வளர்ச்சியை அதன் நடமாட்ட, ஸ்தான யுத்த முறைகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் இன்று. ஆனால் கட்டுப்பாட்டுப் பகுதி மேலான அரசியல் மாற்றங்கள் யாழைவிட வன்னிக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வித்தியாசமாக பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை, பழைய அரசியல் தவறுகளை திருத்திக் கொள்ளவில்லை. சில அணுகுமுறையை மாற்றியுள்ளனர்.

Ü கொரில்லா அணியாக இருக்கும்போது புலிகளின் தாக்குதல் செய்திகள் எதிரிக்கு முன்கூட்டி தெரிந்ததற்காக மக்களுக்கு தண்டனை அழித்த புலிகள், இன்று எதிரிகளுக்கு அறிவித்து விட்டு மக்களை வெளியேறக் கோரி விட்டு தாக்குதல் நடத்தும் வளர்ச்சியை பெற்றுள்ளதுடன் யாழ் கட்டுப்பாட்டில் இருந்தபோது எதிரியும், வெளிநாட்டு தொடர்பு ஊடகங்களும் போராட்டம், யுத்தம் பற்றிய செய்திகளை அவர்களின் நோக்கில் தெரிவித்து வந்தன. வன்னிக் கட்டுப்பாட்டுக்கு வந்தபின் சர்வதேச ஒலிபரப்பு (IBC) மூலம் புலிகளின் அரசியல் - இராணுவச் செய்திகளை புலிகளே நேரடியாக உடனுக்குடன் வழங்குகின்ற னர். புலிகளின் ஊடக வளர்ச்சி முக்கியமானது.

Ü தமிழீழ ஒடுக்கப்பட்ட, சுரண்டப்படுகின்ற மக்களின் நலனில், விடுதலையில் அக்கறை கொண்டு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னேடுக்கும் புரட்சிகர தேசபக்த சக்திகளை தடை செய்வது, அழிப்பது என்ற கொள்கையில், தமிழீழ முசுலீம் மக்கள் மீதான தங்களின் தவறுகளையும் புலிகள் திருத்திக் கொள்ளவில்லை. இது தேசிய விடுதலை யுத்தத்தில் தமிழீழ மக்களின், போராடும் சக புரட்சிகர தேசபக்த இயக்கங்களின் முழு ஆற்றலையும் எதிர்ப்பையும் சிறீலங்கா அரசும், படைகளும் எதிர்கொள்வதை தடுத்து நிறுத்துகிறது. தேசிய விடுதலையின், யுத்தத்தின் நலனில் இருந்து புலிகள் தங்களின் இத் தவறை திருத்திக் கொள்ள வேண்டும். தங்களின் தனி இயக்க சர்வாதிகார கொள்கையை அணுகுமுறையை மாற்றி அய்க்கிய முன்னணிக் கொள்கை மூலமே தமிழீழ விடுதலையை வெல்ல முடியும் என்பதில் அரசியல் - இராணுவ அணுகுமுறையை கடைபிடிக்கத் தொடங்க வேண் டும். இல்லையெனில் தமிழீழ தேச சுதந்திரத்தில் மக்களின் விடுதலையில் புலிகளின் தலைமை நேர்மையாக, தெளிவாக இல்லை என்பதை வரலாறு பதிவு செய்யும்.

Ü இராணுவ மூலோபாய ரீதியில் தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தின் 15 ஆண்டுகளை திரும்பிப் பார்த்தால், யாழ்ப்பாணத்தில் இயங்குவது, யாழைக் கட்டுப்பாட்டுள் வைத்திருப்பது,

www.tamilarangam.net



விடுதலை செய்வது என்ற அரசியல் - இராணுவக் கண்ணோட்டமே. நடைமுறையே பின்பற்றப் பட்டு வருகிறது. யாழை கைப்பற்றி ஆட்சி செய்வது. எதிரியின் மூலோபாய ரீதியான எதிர்த் தாக்குதல் விடுதலை யுத்தத்தின் முதல் கட்டத்தை அடையும்போது பின் வாங்கி வன்னிக்கு செல்வது, பின் மீண்டும் எதிரியை பலயீனப்ப டுத்தி யாழுக்கு முன்னேறுவது, யாழைக் கைப்பற் றுவது ஆட்சி செய்வது, பின்னர் மீண்டும் வன்னிக்கு பின் வாங்குவது, யாழைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவது, பின்னர் பாது காப்பது என்ற யாழ் மையவாத கண்ணோட் டத்தில் இருந்தே தென் மத்திய, கிழக்கு தமிழீழப் பகுதிகள் மீதான இராணுவ நடவடிக்கைகள் அமைகின்றன. தமிழீழ இராணுவ மூலோபா யமும், தந்திரோபாயமும், யுத்தத்தின் இயங்கி யலும் நடந்து வருவது கவனிக்க வேண்டியுள் ளது. 1987-ல் 1995-ல் இதுவே நடந்தது.

தமிழீழப் பகுதியை முழுமையான ஒரு யுத்தப் பகுதியாக எடுத்துக் கொண்டு இராணுவ மூலோ பாயம், தந்திரோபாயம் வகுக்கப்பட வேண்டும், தமிழீழத் தேசிய விடுதலையை ஒரு பலாத்காரப் புரட்சி மூலமும் வென்றெடுக்க முடியும். தனித்த மிழீழம் தான் ஒரே தீர்வு என்பதில் உறுதியாக வுள்ள இயக்க தலைமைகளும், இராணுவத் தள பதிகளும், ஆய்வாளர்களும் இதுபற்றி சிந்தித் தாக வேண்டும். யாழ்ப்பாணத்தின் பூகோள அமைப்பானது நீண்டகால யுத்த நோக்கில் தமி ழீழ விடுதலை யுத்தத்தில் நிரந்தரமான அல்லது மற்றய பிரதேசங்களை கைப்பற்றுவதற்கான விடு தலைத்தளப் பிரதேசமாக நீண்ட வருடங்கள் நின்று பிடிக்க முடியாத பூகோள அரசியல் - இரா ணுவத் தன்மைகளைக் கொண்டது வன்னிப் பெருநிலமும், கிழக்கு பகுதியுமே அத்தகைய தன்மைகளை கொண்டது. நீண்ட தரைப்பகுதியும் காடுகளையும் கொண்டிருப்பதும், பின்வாங்க லுக்கான பரந்த பிரதேசத்தையும் உள்டளக்கியது சிறீலங்காவுக்கும் தமிழீழத்துக்கும் இடையில் மிக நீண்ட தரைவழியான எல்லையோரம் இருக் கிறது. காங்கேசதுறை/பருத்தி துறையை விட திரு கோணமலைத் துறைமுகம் சர்வதேச முக்கியத் துவம் உடையது. 15 வருட யுத்தத்திலும் சிறீ லங்கா அரசு எத்தனை தோல்விகளை கண்ட போதும் நியாயமான அரசியல் தீர்வுக்கு இறங்கி வர மறுக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் இன, மதவாத சக்திகள் தேசியம் என்ற பெயரில் இன வாத சமூக அடித்தளத்தை பலப்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கைகளை - விடுதலை யுத்தத்தை அங்கீக ரித்து, சிறீலங்காவில் ஒரு புரட்சிகர இயக்கம் - ஆயுதப் போராட்டம் வளராமல் தமிழீழம் விடு தலை அடைவது கடினம். கற்பனையில் அடைந் தாலும் தேசிய வெறி கொண்ட எல்லை யுத்தம் தொடர்வதை தடுக்கவும் முடியாது. எனவே, தென்- மத்திய, கிழக்கு தமிழீழப் பகுதிகளை விடு தலைப் பிரதேசமாக மாற்றுவதும், சிறீலங்காவில் உள்ள தமிழீழ விடுதலையை அங்கீகரிக்கும், சிறீ லங்காவின் விடுதலை இயக்கங்களை அரசுக்கும் படைகளுக்கும் எதிராக செயற்பட அனைத்து வழிகளிலும் உதவுவதே அறிவுபூர்வமான இரா ணுவ மூலோபாய மார்க்கமாகும். இந்த அறிவு யுத்தத்தை நடத்தும் புலிகளுக்கு இல்லையா? பிர பாகரன் சிந்திக்கவில்லையா? என யோசியுங்கள். இங்கேதான் புலிகளின் அரசியல் இராணுவப் பலயீனம், தமிழீழ முதலாளிவர்க்க அரசியல் இராணுவச் சித்தாந்தம் வெளிப்படும், புலிகளின் சுத்த இராணுவக் கண்ணோட்டமே. தமிழீழ முத லாளி வர்க்க விடுதலையைக் கூட வளர்க்க தடை யாக இருக்கிறது. புலிகளின் தலைமைக்கு மீண்டும் ஒரு வரலாற்று வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தங்களின் தவறுகளை திருத்த வேண்டும்.

1. புலிகளின் ஓயாத அலை வெற்றியை, புலிகள் கைப்பற்றிய பகுதிகளை புலிகள் தக்க வைத்தாக வேண்டும். இது முதலாவது இராணுவ அரசியல் கடமையாகிறது.

2. புலிகள் வன்னிப் பெருநிலப் பரப்பில் சுதந் திரமாக செயற்பட ஆணையிறவு - இயக்கச்சி கூட்டு படைத்தள முகாம் வெற்றி உதவும், யாழில் புலிகளின் இன்றைய பாதுகாப்பு எல்லைக் கோட்டை தொடர்ந்து பாதுகாப்பது இரண்டா வது இராணுவ அரசியல் கடமையாகிறது.

3. கிரமமான படை வடிவத்துக்கும், விடு தலை யுத்தத்தின் மூன்றாவது கட்ட வாசலிற்கும் வந்துள்ள வளர்ந்துள்ள (யாழ் வசால் அல்ல) புலிகள் தற்போது மட்டக் கிளப்பில் உள்ள கட்டுப் பாட்டு பகுதியை விஸ்தரிப்பதும், வன்னிப் பெரு நிலப்பரப்பில் கட்டுப்பாட்டை விஸ்தரிப்பு நோக்கி முன்னேறும் தாக்குதலை நடத்துவது மூன்றாவது கடமையாகிறது. தென் தமிழீழம் நோக்கி முன்னேறி கைப்பற்றுவதன் மூலம் கிழக் கை பிரிக்க நினைக்கும் சிறீலங்கா அரசின் நீண்ட சதியை அரசியல் ரீதியாகவும் முறியடிக்க முடியும். முசுலீம் மக்கள் மேலான தனது தவறை களைந்து புலிகளின் அரசியல் - இராணுவ செயற்பாட் டுடன் நெருங்கிய அய்க்கியத்தையும் உருவாக்கி, இனவாத அரசின், மதவாதிகளின் அரசியல் இரா

www.tamilarangam.net



ணுவச் சதிகளை - பிளவுகளை முறியடித்து தேசிய விடுதலை யுத்தம் வளர முடியும். புலிகளின் தலைமை செய்யுமா பொறுத்திருந்து பார்ப்போம். புரட்சிகர தேசபக்த இயக்கம் இந்தத் திசை வழியிலேயே செல்ல வேண்டும். செல்லும். யாழில் கொரில்லா யுத்த நடவடிக்கைகளை செய்யலாம். அரசு கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் தற்காலிகமாக இருந்தாலும், புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள யாழ்ப்பாணத் தமிழர்களின் மனப்பூர்வமான ஆதரவும், உதவியும் தொடர்ந்து தமிழீழப் போராளிகளுக்கு கிடைக்கவே செய்யும். யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதில் புலிகள் தங்களின் முழுக் கவனத்தை, இராணுவச் சக்தியையும் முதல் இலக்காக கொண்டு செயற்பட்டால் உடன் வெற்றி கண்டால் அய்ரோப்பிய, அமெரிக்கா நாடுகளில் உள்ள யாழ்ப்பாண தமிழர்களை அது எழுச்சியூட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. அரசு கட்டுப்பாட்டில் யாழ் இருப்பதால் பலவீனப்பட்டு போயுள்ள புலிகளின் கட்டாய நிதி வசூல் மீண்டும் பலப்படும் என்பதும் உறுதி. இதற்கு மேலும் அய்ரோப்பிய பாராளுமன்றம் சிறீலங்கா அரசுக்கு பேச்சுவார்த்தை அரசியல் தீர்வுக்கு அதிகமான அழுத்தமும் கொடுக்கலாம். இதற்கு அப்பால் யாழை உடன் புலி மீண்டும் கைப்பற்றுவதில் தமிழீழ விடுதுலைக்கு அரசியல் - இராணுவ மூலோபாய முக்கியத்துவம் இல்லை.

புலிகளின் ஓயாத அலை, இராணுவ வெற்றியை வாழ்த்துவது, வரவேற்பது என்பதற்கு அப்பால் புலிகளின் இராணுவ மார்க்கத்துக்கு, தமிழீழ புரட்சிகர சக்திகள், கட்சிகள் இழுபட்டுச் செல்லக்கூடிய சூழலையும் அவதானிக்க முடிகிறது. புரட்சிகர அரசியல் இருந்தாலும், புரட்சிகர இராணுவச் செயற்பாடற்ற சக்திகள், புலிகளின் வெகுசன அரசியல் தவறுகளை கண்டுபிடித்து மாற்று அரசியல் பற்றி பேச முடிகிறது. இராணுவ விவகாரத்தில் மக்கள் யுத்தம் பற்றிய மேலெழுந்த புரிதல்களை கொண்டிருப்பதால், நடைமுறையில் ஆயுதப் போராட்டத்துக்கு தலைமை தாங்காதபடியால் புலிகளின் ஓயாத அலை வெற்றியை பார்த்து புலிகள் மக்கள் யுத்தம் நடத்துவதாகவும், எல்லா அரசியல் முரண்பாடுகளையும் விட்டுவிட்டு, தேசிய யுத்தத்தில், இயக்கத்தில் (புலிகளுடன்) ஒன்றுபடுமாறு எல்லாரையும் சிலர் அழைக்கிறார்கள். தேசிய அறைகூவல் விடுகிறார் கள். தேசிய இன விடுதலைப் போராட்டம் - யுத்தம் நடக்கும் பகுதிகளில் முதலாளித்துவ தேசிய இயக்கமும் - தொழிலாளி வர்க்க தேசிய இயக்கமும் தங்களின் அரசியல் ஆயுதப் போராட்டங்களில், தேசிய இன மக்களைத்தான் இணைக்கிறார்கள் (மாடுகளை அல்ல) யுத்தத்தில் மக்கள் பங்கை பலப்படுத்துவது என்பது அவ்இயக்கங்களின் வெகுசன அரசியல் பார்வையை பொறுத்து இயக்கத்துடன் - யுத்தத்தில் மக்களின் நேரடி - மறைமுக பங்களிப்பு கூடி, குறையும். வேறுபடும். புலிகள் சுத்த இராணுவவாத நோக்கில் செயற்பட்டு வந்ததால் மக்களின் நேரடிப் பங்களிப்பு குறைவாக இருந்தது. தங்களின் பலயீனங்களை புரிந்து கொண்ட புலிகளின் தலைமை வன்னி யுத்தத்தில் மக்களையும் பங்குவகிக்க வைக்கும் முறைகளில், மக்கள் மத்தியிலான தண்டனை முறைகளில் மாற்றம் செய்தது. கிராமியப்படை, துணைப் படை, எல்லைக் காவல்பட என்பவற்றில் மக்களின் பங்கை நேரடியாக இணைத்தது உண்மை. ஓயாத அலை இராணுவ நடவடிக்கையில் மக்கள் முன்னரைவிட அதிகமாக பங்கு பற்றினர் என்பதும் உண்மை. இப்படிச் செய்யத் தவறினால் புலிகளால் கிரமமான படை வடிவத்தை நகர்த்திச் செல்வது இயலாது. பரந்து விரிந்த கட்டுப்பாட்டுப் பகுதிகளை பாதுகாக்க முடியாது. புலிகள் இதைவிட இன்னமும் அதிகளவில் மக்களை யுத்தத்தில் பங்கு வகிக்க வைக்க முடியும். வன்னி யுத்தத்தில் பெருமளவு விவசாயிகள், கூலி மக்கள் புலிகளுடன் தோழோடு தோழாக நிற்கின்றனர். இதனால் புலிகளின் தமிழீழ முதலாளித்துவ அரசியல், தொழிலாளி வர்க்க அரசியல் மார்க்கமாக மாறிவிட்டது என்பதல்ல. புலிகளின் முன்னணிப் படையுத்த முறை, மக்கள் யுத்த முறையாக மாறிவிட்டது என்பதல்ல. இவ்விரண்டு யுத்த முறைகளும் கொரில்லா யுத்தத்தை, கிரமமான யுத்தத்தை ஏற்றுக் கொள்கின்றன. அதன் வர்க்க அரசியல் - இராணுவப் பாதையே யுத்த முறையை வேறுபடுத்துகிறது.

இதைப் புரிந்து கொள்ளாத தேசப்பற்றுள்ள அரசியல் சக்திகள் 'மக்கள் இராணுவம்' சுலோகத்துடன் இராணுவ பயிற்சியும் பெற்று, பயிற்சி முகாம் தளபதிகளாக இருந்த (யுத்தத்தில் ஈடுபட்ட தளபதிகள் அல்ல) சிலர், இடது தீவிரவாத இராணுவக் கண்ணோட்டத்தில் 87-களின் பின் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்த முனைந்தனர். தேசிய விடுதலை யுத்தத்தில் தீர்மானகரமான புலிகளின் சுத்த இராணுவச் செயற்பாடுகளுக்கு முன் இடது தீவிர இராணுவச் செயல் முயற்சிகள் நசுக்கப்பட்டது அல்லது சிதைந்து

www.tamilarangam.net



போனது. ஓயாத அலை வெற்றியை பார்க்கும் இவர்களில் சிலர் புலிகளின் இராணுவ மார்க்கத்தை பின்பற்றுவதே சரியானது என பேசுகிறார்கள் எழுதுகிறார்கள். புலிகள் தங்களின் தனி இயக்க சர்வாதிகாரக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்து, சக இயக்கங்களை செயற்படவும். தங்களுடன் இணைத்துக் கொள்ள வும் வெளிப்படையாக அறிவித்து அணுகுமுறை மேற் கொண்டால்! தொழிலாளி வர்க்க புரட்சிகர அரசியல் - இராணுவக் கண்ணோட்டம் இல்லாத தேசபக்த சக்திகள், புலிகளின் பாதைக்கு சென்று விடுவார்கள். இதனால்தான் தேசிய இன விடுதலைப் போராட்டக் களங்களில் புரட்சிகர இயக்கங்களை அவற்றின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை, குட்டி முதலாளித்துவ இராணுவ இயக்கங்கள் ஆரம்பத்தில், முளையில் அழித்து தடை செய்து விடுகின்றன. தேசிய விடுதலை யுத்தத்தில், நேரடிப் பங்காற்ற, யுத்தப் பங்கில்லாத புரட்சிகர அரசியல் சக்திகளும், கட்சிகளும், பின்னாளில் தேசிய விடுதலை யுத்தத்தை தீர்மானிக்கும், முதலாளித்துவ தேசிய இயக்கத்தின் இராணுவ - அரசியல் பாதைக்கு பலியாகி விடுகின்றன. அல்லது பலயீனமாகவுள்ளன, அல்லது அன்னியப்பட்டு விடுகின்றன. இதன் மறுபக்கம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற அரசியல் இயக்கங்கள், அமைப்புக்கள் மட்டுமே ''மகோன்னதமான புரட்சி இயக்கமாக'' பார்க்கும் தவறுக்கு இட்டுச் சென்று விடுகிறது. இவ்இராணுவ வாதப்பார்வை வர்க்க அரசியல் பார்வையை, மக்கள் யுத்த முறையை, தேசிய விடுதலை யுத்தத்தில் இருந்து திசை திருப்பி விடுகிறது. தமிழீழத் தொழிலாளி வர்க்க, புரட்சிகர தேசபக்த இயக்கம் இதற்கு எதிராக உறுதியாக போராட வேண்டும், தேசிய விடுதலை யுத்தத்தில் நாம் கால் பதிக்க வேண்டும்.

குறிப்பு:

தேசபக்தன் 15-இல் வெளியான ''தமிழீழ தேசிய விடுதலை யுத்தம்'' கட்டுரையை இணைத்து படிப்பது நல்லது.

— திலீபன்/தமிழரசன்

# தமிழ்நாட்டில் மீண்டும் தமிழீழ எழுச்சி

தமிழீழப் போராட்ட வரலாற்றில், தமிழ்நாட்டில் ஏற்படும் ஆதரவு அலை எழுச்சிக்கும் - வீழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. 1987 வரை ஆயுதப் போராட்ட இயக்கங்களின் நேரடிப் பின்தளமாக தமிழ்நாடு விளங்கி வந்தது. (காஷ்மீர், பஞ்சாப் போராளி இயக்கங்களுக்கு பாகிஸ்தான், மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (POK) இந்திய வடகிழக்கு மாநில போராளி இயக்கங்களுக்கு பூட்டான், வங்கதேசம் பின்தளமாக இன்று இருப்பது போல்) உலகில் தேசிய இன விடுதலைப் போராட்டம் நடக்கும் போர்க்களங்களுக் கும் அண்டை நாடுகளுக்கும் உள்ள இன, மொழி, மத, பிரதேச கலாச்சார உறவுகள், தலையீட்டுக் கொள்கைகள், சகோதரத்துவ உறவுகள் இவற்றை தீர்மானிக்கின்றன.

புலிகளின் ஓயாத அலை வெற்றியை தொடர்ந்து தமிழ்நாட்டில், புலி எழுச்சி 'ஓயாத அலை வெற்றி' 'தமிழீழ ஆதரவு மாநாடு', 'ஆணையிறவு வெற்றி மாநாடு' எனப் பல பெயர்களில் தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ ஆதரவாளர்கள், கட்சிகள் தங்கள் ஆதரவு எழுச்சியை வெளிப்படுத்தி வருகிறார்கள். 1991-ல் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின், முடங்கிப் போய் இருந்த எழுச்சி அலை, தூக்குத் தண்டனை எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் மெது மெதுவாக தலை நிமிர்த்தியது. ஆணையிறவு மீதான புலிகளின் வெற்றிக்கு பின் தமிழீழ ஆதரவுக் கொள்கை கொண்ட எல்லாக் கட்சிகளாலும், மக்கள் அமைப்புக்களாலும் தமிழீழ ஆதரவு எழுச்சி மீண்டும் முனைப்பு பெற்று வருகிறது. 1986-ல் DMK கலைஞர் தலைமை முயற்சியில் மதுரையில் ''இலங்கை தமிழர் பாதுகாப்பு மாநாடு'' TESO ஆல் நடத்தப்பட்டது. இதில் இந்திய மாநிலங்களின் பல முதல்வர்கள் இன்றைய பிரதமர் வாஜ்பாய் உட்பட கலந்து

www.tamilarangam.net



கொண்டனர். அன்று இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்தியரசு நேரடியாக வெளிப்படையான ஆதரவு, தலையீட்டுக் கொள்கையை கடைப்பிடித்த காலம். இன்று அரசு நேர் எதிரான கொள்கையை கடைப்பிடிக்கிறது. இந்நிலைமையில் MDMK வைக்கோ தலைமையில் 6 மாதங்களுக்கு முன் நடத்த திட்டமிட்டிருந்த அக்கட்சியின் மாவட்ட மாநாட்டை ''தமிழக எழுச்சி மாநாடாக'' ஈரோட்டில் யூலை முதல் திகதியில் நடத்தியுள்ளது. இம்மாநாட்டிலும் மாநில முதல்வர்களும், உள்துறை அமைச்சர் அத்வானியும் கலந்து கொண்டனர். தமிழீழப் பிரச்சினை, தீர்வு பற்றி தங்கள் தங்கள் நிலைப்பாட்டை தலைவர்கள் வெளியிட்டனர்.

''இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதில் இந்தியா தீவிரமாகவுள்ளது. இலங்கையில் மட்டுமல்ல இந்திய வம்சாவழியினர் எங்கு இருந்தாலும் இன சமத்துவ அடிப்படையில் தீர்வு ஏற்பட இந்தியரசு தனது அழுத்தத்தை கொடுக்கிறது மதிப்போடும் மரியாதையோடும் வாழ வேண்டும் என்பதில் இந்தியா பெரும் அக்கறை கொண்டுள்ளது. இலங்கை பிளவுபடுவதை இந்தியா ஒரு போதும் ஆதரிக்காது'' அத்வானி இந்தியரசு பிஜீ தீவுகளில் தலையிடுவது உட்பட அரசின் கொள்கையை வெளிப்படுத்தினார். பிஜீ அரசியல் நெருக்கடிக்கு 1997 அரசியல் சாசன மறு சீரமைப்பு அடிப்படையில். பாதுகாப்பு அமைச்சர், ''இலங்கைக்கு ஒரு போதும் படையை அனுப்ப மாட்டோம்'' என உறுதி கூறினார். PMK ராமதாஸ் வெளிப்படையாக தமிழீழத்தை, புலிகளை ஆதரித்து பேசினார் வைக்கோ தமிழீழம் மலர்ந்தால் ஆதரிப்போம். செஞ்சிலுவைச் சங்கம் போல் MDMK செயல்படும் என்றார். தமிழ்நாட்டுக்கு ஓடிவரும் அகதிகளை சிங்கள இராணுவம் வழிமறித்து சென்று துன்புறுத்துவதை, வற்புறுத்தி இராணுவ முகாமில் வேலை வாங்குவதை, ரத்தம் எடுப்பதை, 20-க்கும் மேற்பட்டவர்கள் இறந்ததை சொல்லி அழுதார். ஆனால் அகதிகள் வரவை தடுக்கும் தமிழக அரசை மத்திய அரசை, அகதிகள் தஞ்சமடைவதை தடுக்காது இருக்கும்படி, ஆதரவளிக்கும்படி கோரவில்லை. தமிழ்நாட்டு அகதி முகாம்களில் அகதிகள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சனைகளை தீர்க்கும்படி பேசவில்லை; தமிழீழத்துக்கும், புலிகளுக்கும் ஆதரவாக தீர்மானம் போடமுடியாவிட்டாலும், தமிழீழ அகதிகளுக்கு ஆதரவாக ஒரு தீர்மானம் போட முடியாத எழுச்சி மாநாடாக முடிந்து போனது. இந்த எழுச்சியை கூட எதிர்க்கும், தடை செய்யக் கோரும் கட்சிகளை ADMK, CPM தலைவர்களை ஊடகங்களையும் அகதிகள் அடையாளம் காண்கிறார்கள். மாநாட்டை எழுச்சியின் எல்லைக்கு கொண்டு சென்ற PMK ராமதாஸ். ''ஈழம் மலர்ந்தால் தெற்காசியாவில் அமைதி ஏற்படும். என்றும் தமிழீழம் இந்தியாவின் நட்பு நாடாக இருக்கும். தமிழீழம் மலர்ந்தாலும் தமிழ் நாட்டில் பிரிவினை வராது'' மூன்று வாக்குறுதிகளை 8 கோடி தமிழர்களின் தலைவர் கலைஞர் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். PMK யும் MDMஓயும் இவ்வேண்டுகோளில் கையெழுத்திட தயார் எனப் பேசி புரட்சிப்புயல் வைக்கோவையே நெளிய வைத்தார். இந்திய மத்தியரசு சிறீலங்கா அரசுக்கு கொடுத்த மனிதாபிமான (?) உதவி 100 மில்லியன் டொலர் நிதியை, வடக்கு கிழக்கில் உணவு, மருந்து, இருப்பிடம் இன்றி வாழ்வதற்கும், மரணத்தின் வாசலில் நிற்கும் தமிழீழ மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக வழங்கக் கோரவில்லை. தமிழ்நாட்டில் இருந்து திரட்டப்பட்ட சகோதர ரத்தம் தமிழீழ மக்களுக்கு அனுப்பப்படாதது பற்றியோ, மக்களிடம் இருந்து மருந்து, நிதி, உணவு திரட்டி நேரடியாக தமிழீழ மக்களுக்கு அனுப்புவது பற்றியோ பேசவில்லை. ஏன் தமிழ்நாட்டிலுள்ள தமிழீழ அகதிகளுக்கு மத்தியரசின் நிதி உதவியை கூட்டுவது, கலைஞர் புதிதாக நிதியை அகதிகளுக்காக ஒதுக்குவது பற்றிக் கூட கோரிக்கை விடவில்லை. லண்டன் IBC ராமதாஸின், வைக்கோவின் பேச்சை மீண்டும் ஒலிபரப்பியது. அகதிகளின் இந்த உள்ளக் குமுறலை ஒலிபரப்புமா?

இங்கேதான் அடிதட்டு மக்கள், அகதிகள் நலனில் இருந்து அரசியலை போராளிகளை, போராட்டத்தை பார்ப்பதற்கும், அரசியலின் நலனில் இருந்து மக்கள் நலனை போராளிகளை மதிப்பிடுவதற்கும் உள்ள மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு போராட்ட ஆதரவு எழுச்சி அலையிலும் வெளிப்படுகிறது. மீண்டும் எழுகின்ற எழுச்சி அலை மக்களின் நலனை மையப்படுத்த மறுப்பதன் மர்மத்தை தமிழீழ அகதிகளும் உழைக்கும் மக்களுக்கும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சியை உந்தித் தள்ளியதில், பின்னடைவுக்குள்ளாக்கியதில், தேக்கத்தை ஏற்படுத்தியதில் இந்தியரசுக்கு

www.tamilarangam.net



முக்கிய பங்குண்டு என்பது பலரும் அறிந்தது. மத்தியரசின் அணுகுமுறைக்கு உட்பட்டே அனுசரித்தே தமிழ்நாட்டு மாநில அரசும் ஆளும் கட்சிகளும் தமிழீழப் பிரச்சினையை போராளிகளை, அகதிகளை கையாழ்கிறது M.G.R. முதல் கலைஞர் வரை இதில் கொள்கை வேறுபாடு இல்லை. நடைமுறை ஆதரவு அணுகுமுறையில் வேறுபாடுகள் இருந்தன. M.G.R. புலிகளுக்கு அள்ளிக் கொடுத்ததையும் கலைஞர் தனது பிறந்த தின உண்டியல் வசூலை பிரித்து இயக்கங்களுக்கு கிள்ளிக் கொடுத்ததும் புலிகள் வாங்க மறுத்ததும் கலைஞரின் சட்டசபை வாக்குமூலமாகும். தமிழீழப் பிரச்சனையை போராளிகளை, அகதிகளை அணுகுவதில் பல கட்டவேறுபாடுள்ளது. 1983-க்கு முற்பட்ட காலம் (குட்டிமணியை சிறீலங்கா அரசிடம் ஒப்படைத்ததும்....) 1983-85 வரை எல்லா இந்திய சார்பு கொள்கை தமிழீழ இயக்கங்களும் ஆயுதம், பணம், முகாம் பயிற்சி என அனைத்தும் இந்தியரசு கொடுத்தது.

1985-87 திம்புப் பேச்சு வார்த்தை, இயக்கங்கள் மீது நெருக்கடி நிர்பந்தம், இயக்க முரண்பாட்டை ஆயுதம் வழங்குவது முதல் அழித்தொழிப்பது வரை கையாண்டது.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தை திணித்து இயக்கங்கள் மத்தியில் தெளிவான அரசியல் பிரிப்பு ஏற்படுத்தியது.

1987-90 வரை புலிகளுக்கும் தமிழீழப் போராட்டத்துக்கும் எதிரான அரசியல் - யுத்த நடவடிக்கை மேற்கொண்டது.

1990 - ராஜீவ் கொலைக்கு பின் புலிகள் மீதான தடையும், புலிகள் மட்டுமே தொடர்ந்து ஆயுதப் போராட்டம் நடத்துவதால் தமிழீழப் போராட்ட நடவடிக்கைகள் அனைத்துக்கும் தடை முன்னாள் போராளிகள் சிறப்பு முகாம்களில், திறந்த வெளிமுகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். 2000 ஆண்டில் கூட புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ளது. தமிழீழப் போராட்ட இயக்க நடவடிக்கைகளுக்கு தமிழீழ ஆதரவு நேரடிச் செயற்பாடுகளுக்கு தடை நீடிக்கிறது. (தமிழீழ ஆதரவு அமைப்பின் சிதம்பரம்... மாநாடுகள் தடை செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர்)

இந்தியரசின், தமிழக அரசின் அணுகுமுறைகள் மேற்கண்ட கால கட்டங்களில் தமிழீழ அகதிகள் மேலான அணுகுமுறையிலும் தெளிவாக வெளிப்பட்டது.

- அகதிகள் வருகைக்கு ஆக்கமும் ஊக்கமும் ஆதரவும் அளித்த நிலைமை, சுதந்திர நடமாட்ட அனுமதி

- அகதிகளை முகாமுக்குள் கட்டுப்படுத்தியது. போராளிகளை காட்டி நெருக்கியது

- அகதிகள் வரவை தடுத்து நிறுத்தியது. திரும்பிச் செல்ல நிர்ப்பந்தப்படுத்தியது.

- கலைஞர் அரசு அகதிகளுக்கு கல்வி, தொழில், வெளிநடமாட்டம் என்பவற்றில் இருந்த தடைகளை ஓரளவு நீக்கியுள்ளது. அகதிகள் உரிமைக்காக குரல் கொடுக்கும் அரசியல் இயக்கத்தை அனுமதிக்க மறுப்பது.

- ஆயுதப் போராளிகளையும், அகதிகளையும் வேறுபடுத்தி அணுகத் தவறிவிட்டு, பின்னர் கடும் கண்காணிப்பு, பரிசோதனை மூலம் அப்பாவி அகதிகளை துன்புறுத்தி வருவது.

- அகதிகளின் அடிப்படை உரிமைகளை, தேவைகளைப் பற்றி பேசுபவர்களைக் கூட போராளிகள், புலிகள் எனப் பெயர் சூட்டி (சிலர் முன்னாள் ஆயுதப் போராளிகளும், இந்நாள் அகதிகளும் கூட போராளிகள் அகதிகளாக மாறுவதைக் கூட சரியாக அணுகத் தவறுகிறது) சிறப்பு முகாம்களில் அடைப்பது.

- தஞ்சம் கோரிவரும் அகதிகளை நடுக்கடலில், மண்திட்டுக்களில் காத்திருக்க வைத்து சிறீலங்காப் படைக்கு செய்தி கொடுத்து சிங்கள கடற்படையிடம் கையளிக்கிறது. இந்தியக் கடற்படையும் கடலோர காவற்படையும் தமிழக காவல் துறையும், உளவுத் துறையும் கரையேறும் தமிழீழ அகதிகளை அகதிகளாக ஏன் இங்கு வந்தோம் என கண்ணீர் வடிக்கும் அளவுக்கு மனோவியல் துன்புறுத்தலை எதிர் கொள்கின்றனர்.

தமிழீழப் பிரச்சினை, தமிழீழப் போராளிகள், அகதிகள் பற்றி தமிழ்நாட்டிலுள்ள வேறுபட்ட அரசியல் சக்திகளிடம் வேறுபட்ட பார்வை அணுகுமுறை தொடர்ந்து இருந்து வருகிறது.

அரசை ஆளுங்கட்சிகளின், எதிர்க்கட்சிகளின் பார்வை;

கூட்டணிக் கட்சிகளின் பார்வை

தமிழ்இன, மொழி உணர்வு அமைப்புக்களின் பார்வை

தமிழ்நாட்டின் சமூக மாற்றத்தை கோரும் அமைப்புக்களின் பார்வை.

இவை ஒவ்வொன்றுக்குள்ளும் கூட குறிப்

www.tamilarangam.net



பான பார்வை, அணுகுமுறைகளில் வேறுபாடு இருக்கிறது. தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்ட அரசியலையும், போராளி இயக்கங்களின் அரசியலையும் வேறுபடுத்தி பார்ப்பதிலும், மக்கள் நலன்களையும், போராளி இயக்கங்களின் செயற்பாட்டை பகுத்து அணுகுவதிலும், தமிழீழத்திலுள்ள மக்களையும், தமிழ் நாட்டிலுள்ள அகதி மக்களையும் பார்ப்பது அணுகுவதிலும் கூட வெளிப்படுகிறது. இன்றைய எழுச்சி அலையிலும் இதனைக் காண முடிகிறது. தங்களின் கண்முன்னே நிற்கின்ற தமிழீழ அகதிகளின் பிரச்சனைகளை அனாதைகளின் பிரச்சனையாக கவனத்தில் கொள்ள மறுக்கின்றனர். அரசியல் சூதாட்டங்களுக்கான, கட்சித் தற்புகழ்ச்சிக்கான ஆதரவு எழுச்சிப் போர்க் கோலங்கள் நிரந்தரமானதல்ல. உறுதியானதும் அல்ல என்பதையும் 17 வருட அகதி வாழ்வு மூலம் கண்டிருக்கிறோம்.

இந்தியரசு இலங்கைக் கொள்கையில் பிரிவினையை ஆதரிக்கவில்லை. நியாயமான உரிமைகள் தமிழர்கள் பெற வேண்டும் எனக் கூறுகிறது.

இந்திய வம்சாவழி மலையக மக்களுக்காக குரல் கொடுக்குமா? வடக்கு, கிழக்கு பூர்வீக தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்குமா? அத்வானியின் பேச்சில் தெளிவு இல்லை. இன்றைய தமிழ்நாட்டு எழுச்சி என்பது தமிழ்நாட்டில் புலிகளதும், தமிழீழ தேசபக்த சக்திகளதும் சுதந்திரச் செயற்பாட்டுக்கு மீண்டும் அனுமதிக்கப் போவதில்லை. குறைந்தது அகதிகளின் சுதந்திர வருகைக்கும், நம்பிக்கையான தற்காலிக வாழ்க்கைக்கும் கூட அனுமதிக்கவில்லை. புலிகளின் இராணுவ வெற்றிக்கு தமிழ்நாட்டவர்கள் ஆதரவுக் குரல் எழுப்ப கொண்டாட அனுமதித்திருக்கிறது. சிறீலங்காவுக்கு இந்தியப் படை அனுப்பக் கூடாது என்பதை பேச அனுமதித்திருக்கிறது. (படை அனுப்பும் தலையீட்டுக் கொள்கை இன்று சரியானதல்ல என்பது மத்திய கொள்கை வகுப்பின் முடிவும் கூட) இது தமிழீழப் போராட்டத்துக்கு புற நிலைமையில் சாதகமான அம்சம். புலிகளுக்கு ஆதரவாக இயங்கும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், தலைவர்கள் அய்ரோப்பிய நாடுகளுக்கு சென்று புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் புலிகளுக்கும், போராட்டத்துக்கும் ஆதரவாக பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. (தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் மத்தியில் கூட்டம் போட்டு பேச தலைவர்களும் தயாரில்லை. அரசும் அனுமதிக்காது ஏன்?)

இலங்கைப் பிரச்சினையில் இந்தியரசின் முயற்சியில் நடந்த ஒப்பந்தம் 1987-ல் தோற்றுப் போனது. இதைமீறி மூன்றாவது அய்ரோப்பிய நாடு புலிகளையும் சிறீலங்கா அரசையும் பேச வைக்க முயல்கிறது. இதை இந்தியா கைகட்டிக் கொண்டு பார்க்காது. புலிகளும் - சிறீலங்கா அரசும் கேட்டுக் கொண்டால் மத்தியஸ்தம் செய்ய தயார் என்கிறது. (புலிகளும் - சிறீலங்கா அரசும் கோரியுள்ளன என்பதை பிரதமர் செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.) ''இந்தியாவே வருக சமரசம் செய்து தருக'' என தினமணி தலையங்கம் எழுதியுள்ளது. அண்டன் பாலசிங்கம் இந்தியரசுக்கு வெளிப்படை செய்தி அனுப்பியுள்ளார். புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்ற பொறியையும் வைத்துள்ளார். பாலசிங்கம் மத்தியரசுக்கு கொடுத்த செய்திதான் கஷூஓ ராமதாஸ் கலைஞருக்கு வைத்த மூன்று வேண்டுகோள் வாக்குறுதிகள். புலிகள் மீதான தடையை நீக்காமல் புலிகளுடன் அதிகாரபூர்வமாக மத்தியரசு பேச முடியாது. மத்தியரசிலுள்ள புலி ஆதரவு தமிழ்நாட்டு தமிழீழ ஆதரவு கட்சிகள் தலைவர்கள் மூலமாக புலியின் சிந்தனையை புரிந்து கொள்கிறது இந்தியரசு.

இந்தியரசு புலிகளையும் - சிறீலங்கா அரசையும் எதன் அடிப்படையில் சமரசம் செய்து வைப்பது. இந்தியரசால் 87-ல் முன்வைக்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலா (க்மீக குஃஊக ஏற்றுக்கொண்ட தீர்வுப் பொதியை பற்றி அமைச்சர் ஜெயக்கொடி உடனடியாக வந்து மத்தியரசுக்கு தெரிவித்தார்) அல்லது சிறீலங்கா அரசின் புதிய தீர்வுப் பொதி அடிப்படையிலா அல்லது புலிகள் கூறுகின்ற திம்புக் கோரிக்கை அடிப்படையிலா (புலிகள் இரகசியமாக வேறு திட்டம் கொடுத்துள்ளார்களா) இரண்டு தரப்பு திட்டங்களையும் கவனத்தில் எடுத்து பரிசீலித்து இந்தியரசு நோர்வே அரசு தயாரிக்கும் புதுத் தீர்வுப் பொதியின் அடிப்படையிலா இரண்டு அரசுகளும் ஒரே கருத்தை கொண்டிருக்கிறதா? திம்புக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாத தீர்வுப் பொதியை புலிகள் தீர்வாக ஏற்க மாட்டார்கள் என எதிர்பார்க்கிறார்கள் தமிழீழ மக்களும் அகதிகளும், திம்புக் கோரிக்கைகளை கூட வென்றெடுக்காத அரசியல் தீர்வு எந்த மூன்றாவது நாட்டால் திணிக்கப்பட்டாலும்

www.tamilarangam.net



அதை எதிர்த்து புலிகளும் தமிழீழ தேசபக்த போராளிகளும் தொடர்ந்து போராடுவார்கள். இதற்கும் தமிழ்நாட்டின் எழுச்சி அலை கைகொடுக்க வேண்டும்.

செக் நாட்டில் இருந்து சுலோவாக்கியா ஒரு துளி ரத்தம் சிந்தாமல் பிரிந்தது பற்றிய கலைஞரின் பேச்சை மறுபதிப்பு செய்பவர்களே 60,000 மக்களின் 10,000 போராளிகளின் ரத்தம் சிந்திய தமிழீழப் போரட்டத்தை ஆதரியுங்கள். அங்கீகரியுங்கள். அமைதியான முறையில் சேர்ந்து வாழ்வதா நடந்து கொண்டிருக்கும் ஆயுதப் போராட் டம் யுத்தம் மூலம் பிரிந்து செல்வதா என்பதை தீர்மானிக்கும் ''தீர்வுப் பொதியின்'' சுதந்திரம் தமிழீழ மக்களுக்கே உரியது. தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பது தமிழீழ தொழிலாளி வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமை என்றே அர்த்தப்படுத்துகிறோம் நாம்.

## இந்திய மத்திய அரசே, தமிழக அரசே, கூட்டணிக் கட்சி தலைவர்களே!

☞ தஞ்சம் கோரி வரும் தமிழீழ அகதிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டுங்கள்.

☞ இந்திய கடல் எல்லைக்குள் நுழையும் அகதிகளை காப்பாற்றி கரை சேருங்கள்.

☞ அகதிகள் வரும் படகை பறிமுதல் செய்யாதீர்கள். ஓட்டிகளுக்கு தண்டனை வழங்காதீர்கள்.

☞ சிறீலங்கா அரசிடம் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை கொடுக்காதீர்கள். தமிழீழ படகு உரிமையாளர்களிடம் கொடுங்கள். ஓட்டிகளை விடுதலை செய்யுங்கள்.

☞ புலிகளின் ஊடுருவலை காட்டி அகதிகளுக்கு நிர்ப்பந்தம் கொடுக்காதீர்கள்.

☞ அகதிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை உரிய நாட்களில் கிடைக்கச் செய்யுங்கள். நல்வாழ்வு அதிகாரிகளின் இலஞ்ச நடவடிக்கை, காலதாமத பணம் கொடுப்பனவுக் கொள்ளையை நிறுத்துங்கள்.

☞ அகதிகளின் குடியிருப்பு பிரச்சனை, மருத்துவம், கல்வி, தொழில் போக்குவரத்து பிரச்சனைகளை தீர்க்க மேம்படுத்த, ஒரு 'பரிசீலனைக்கு' மூலம் நடவடிக்கை எடுங்கள்.

☞ அகதிகளின் அடிப்படை உரிமைகள், நல்வாழ்வுக்காக செயற்படும் அகதி அரசியல் அமைப்புக்கு அனுமதியுங்கள்.

☞ தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ அகதிகளே இக்கோரிக்கைகளை பிரச்சாரம் செய்வோம் தமிழக மக்களிடம்.

☞ அன்னிய நாட்டில் வாழும் அகதிகள் என்ற உரிமையை தாண்டாது அரசின் சட்ட திட்டங்களை மதித்து செயற்படுவோம்.

☞ தமிழீழ அகதிகளின் ஆதரவாளர்களே அகதிகளின் கோரிக்கையை ஆதரியுங்கள்.

- அகதி குரல் -

www.tamilarangam.net



# தமிழ்நாட்டில் தமிழ்க்கூலி அகதியின் குமுறல்

உலகளவில் நடந்துவரும் இன அழிப்பு யுத்தங்களால், இயக்க மோதல்களால் பல இலட்சம் மக்கள் சொந்த நாட்டில், அன்னிய நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இலங்கையில் நடந்து வரும் யுத்தத்தால் வேர்பிடுங்கப்பட்டு சொந்த பந்தங்களை இழந்து இராணுவத்தின், கடற்படையின் எச்சரிக்கை, கைதுகளை மீறி கடல் கடந்து தமிழ்நாட்டுக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர், தமிழீழ அகதிகள் தமிழ்நாட்டிலுள்ள முகாம்களில் அடிமைச் சுதந்திரம் அனுபவித்து வருகின்றனர். இம்முகாம்களில் அகதிகள் வாழ்வதற்கு சில அடிப்படை வசதிகளை தமிழ்நாடு அரசும், இந்தியரசும் செய்து தந்துள்ளன. இவற்றின் அளவும் தொகையும் குடும்ப அங்கத்தவர்களை பொறுத்து வேறுபட்ட போதிலும் இவ்வுதவிகள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை இதனால் அனேக குடும்பங்கள் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இயந்திரமயமாக்கப்பட்ட அவசர உலகில் வேலை வாய்ப்புகள் அற்ற நிலையில் உயரும் விலைவாசியைக் கொண்டு தமது குடும்ப வறுமையைப் போக்க முடியாதுள்ளனர். தமிழர் மத்தியில் பல்வேறுபட்ட தொழில் முறை சார்ந்தோர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இங்கு நாளாந்தக் கூலி வேலைக்கு செல்லக் கூடியதாகவே இருக்கிறது. ஆயினும் நிரந்தர, தொடர்ச்சியான வேலைகள் யாருக்கும் கிடையாது. இதனால் மாவட்டத்தின் பல இடங்களுக்கும் வேலை தேடிச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அரசு சார்பு நிறுவனங்கள் பொதுபணித்துறை நீர் வினியோகப் பணிகள் அவற்றை புனரமைத்தல் போன்ற வேலைகளில் மட்டும் குறிப்பிட்ட கால அளவிற்கு சிலருக்கு வேலைகள் கிடைக்கிறது. இந்த வேலைகள் முடிந்ததும் மீண்டும் நகர்ப்புறங்களுக்கு வேலை தேடி செல்கிறார்கள். குறிப்பாக கட்டிட வேலைகள், வண்டிகளுக்குப் பாரம் ஏற்றுதல், வாய்க் கால் வெட்டுதல், அல்லது அவற்றைப் புனரமைத்தல், கல்லுடைத்தல், விவசாயக் கூலி வேலைகள், தென்னந் தோப்புகளில் வேலை, கயிறு உற்பத்தியாக்குதல், செங்கல் சூளையில் வேலை, வர்ணம் பூசுதல் எனப் பல்வேறுபட்ட தொழில்களுக்கும் செல்கின்றனர். இவ்வேலைகளை நிர்வகிக்கும் முதலாளிகளும் தனிப்பட்ட நிறுவனங்களும் தமது விருப்பத்திற்கேற்ப வேலை வாங்குகின்றனர். அத்தோடு அவர்களின் முடிவுகளுக்கு (அதாவது சம்பளம், நேரம்) நாம் கட்டுப்பட்டாக வேண்டும். மறுக்கும் பட்சத்தில் வேலை மறுக்கப்படும். இவ்வாறாக அகதித் தமிழர்கள் அனுபவித்து வரும் பிரச்சனைகளை பின்வருமாறு பிரித்து அறிந்து கொள்ளலாம்.

1. அடிமைகள்
2. குற்றவாளிகள் சமூகம்
3. வேலை நேரம், சம்பள வேறுபாடு

## அடிமைகள்

அகதித் தமிழர்கள் அனைவரையும் ஒருவகை வெளிநாட்டு அடிமைகளாகவே நோக்குகிறார்கள். இந்தியாவிலிருந்து வேலை வாய்ப்பு தேடிச் சென்றவர்களாகவும், போன இடத்தில் சொந்தம் கொண்டாட முடியுமா? அவர்களுக்கு கீழ் (சிங்களவர்களுக்கு) இருந்து வாழ வேண்டியது தானே என்று பரிந்துரைக்கின்றனர். அத்தோடு உலகில் நாம் மட்டும்தான் பிரச்சனைக்குரியவர்கள். உயிருக்குப் பயந்து நாட்டை விட்டு தப்பினோம் பிழைத்தோம் எனத் தப்பி வந்தோம் எனக் கீழ்த்தரமாகவே நோக்கப்படுவது எவ்வளவு வெட்கக் கேடானது. உண்மையில் எமது பூர்வீகம் கலாச்சாரப் பண்புகள் என்பது சரியாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு சிறு வன்முறைகளை மட்டும் அனுபவிப்பவர்களுக்கு தமிழீழத்தில் நடந்து வரும் இன அழிப்புப் போரின் முழு விளைவுகளும் புரிந்து கொள்ள முடியாத ஒன்றுதான் இருந்தாலும் அவை பற்றிய முழு விபரங்களை கேட்டு அறிவதற்கு பதிலாக, ''ஓ'' அகதியா, என்பதும் இங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் போல் நடத்த முயற்சிப்பதும் தங்கள் விருப்பத்திற்கு வேலை வாங்குவதும் உளரீதியாதகப் பாதிப்பை ஏற்படுத்தினாலும் வேலையைக்

www.tamilarangam.net



கருத்தில் கொண்டு மௌனியாக வேலை செய்து வருகிறார்கள் அகதித்தமிழர்கள்.

## குற்றவாளிகள்

உலகலாவிய ரீதியாகப் பரந்து வாழும் அகதித் தமிழர் மத்தியில் இருக்கும் சில சமூக விரோதி களின் சமூக விரோத செயல்கள் ஒட்டுமொத்த அ கதித்தமிழர் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. உண்மையில் சமூகக் குற்றங்கள் என்பது உலகில் எங்கு பார்த்தாலும் எல்லாச் சமூக மக்களுக் குள்ளும் இருக்கக் கூடிய சில சமூக விரோதிகளால் மேற்கொள்ளப்படுவதென்பது உலகம் அறிந்தது. ஆயினும் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரை அறிவு ஜீவிகள் முதல் சாதாரண மக்கள் வரை அக தித்தமிழர்கள் என்றால் ஒருவகைக் குற்றவா ளிகள் போலவும், வெடிகுண்டுக் கலாச்சாரத்திற்கு உட்பட்டவர்கள் எனவும் கருதுகிறார்கள். இவர் களுடன் பழகுவது தற்கொலைக்கு சமம், தாமும் சமூக ரீதியாகத் தாக்கப்படுவோம் என நினைக்கி றார்கள். அப்படியும் சிலர் பழக முனையும்போது, ''கவனம்'' ஏதாவது செய்து போட்டு மாட்டி விட்டி டுவாங்கள் எனப் பழகுபவர்களை எச்சரிப்பதும், குற்றவாளிகள் போல் சித்தரிப்பதும் கொடுமை. அத்தோடு வேலை களுக்கு செல்பவர்களிடம் ஜாதி, மதம், பிரதேசம், என்பவற்றைக் கேட்டல், இங்குள்ள தாழ்த்தப் பட்டவர்களோடு ஒப்பிடுதல். தெற்காசியப் பிராந்தியத்தில் தனக்கென தனிமை யான கலாச்சாரப் பண்புகளைக் கொண்ட இனம் இன்று குற்றவாளிகள் போல் குற்றவுணர்வோடு நோக்கப்படுவது கொடுமை. இன்று உலகின் மூலை முடக்கெல்லாம் பத்திரிகைகள் இவை ஒவ்வொன்றும் சமூகங்களில் நடக்கின்ற பல்வே றுபட்ட குற்றச் செயல்களை எழுதுகின்றன. இப்பத்திரிகைகள் ஊடாக நாம் நோக்கும்போது சாதாரண சமூகக் குற்றங்களைவிட மனித நேயம், மனித நாகரீகம் வெறுத்து ஒதுக்கும் அளவிற்கு கொடூரமான குற்றங்கள் நடைபெறுகின்றன. அவற்றை செய்பவர்கள் யார் எனப் பத்திரி கைகள் எழுதுகின்றன. அப்படியிருந்தும் அகதித் தமிழர் பற்றிய ஒரு தவறான கருத்து திட்டமிட்டுப் பரப்பப்படுவதாகவே நாம் உணர்கிறோம். உலகச் சக்கரத்தின் சுழற்சிக்கு உட்பட்டு உலகை மக்களைப் போன்று அமைதியாகவே வாழ விரும்புகிறார்கள். சமாதானத்தை நோக்கித் தம் பார்வைைத் திருப்பியிருக்கிறார்கள்.

## நேரம், சம்பளம் வேறுபாடு

நாம் முன்பு குறிப்பிட்டது போல் பல இடங் களில் நம்மவர்கள் வேலை செய்கிறார்கள். தமிழ் நாட்டில் அகதித்தமிழர்கள் என்றால் தேடிப் பிடிப் பார்கள். ஏனெனில் கடினமான வேலைகளைக் கூட குறைந்த கூலியில் செய்து முடிக்கும் ''அவர்'', பொது பணித்துறை சார்ந்த வேலைக ளுக்கு எம்மவர்களைத் தேடி வேலைக்குப் பிடிப் பார்கள். விரும்பி அழைக்கப்படும் அகதித்தமி ழர்களின் கடின உழைப்பில் துணை ஒப்பந்தக்கா ரர்கள் சில கோடி ரூபாய்களை சம்பாதித்தார்கள் என்றால் அது மிகையாகாது. அப்படியிருந்தும் சில வேலைகளில் சம்பள வேறுபாடு காணப்படு கிறது. உ+ம் வர்ணம் பூசுதல், இதை எடுத்துக் கொண்டால் ஊர்க்காரர் ஒருவர் வாங்கும் சம்பளம் 130-க்கும் 150-க்கும் இடைப்பட்டு இருக்கும். ஆனால் அதே வேலையைச் செய்கின்ற அதாவது வர்ணம் பூசுதல் சம்மந்தமாக முழு விப ரமும் தெரிந்தவர்கள் என்றாலும் அகதித்தமிழர் களுக்கு 80- 90-ம் தான் சம்பளமாக வழங்கப்ப டுகிறது. அத்துடன் தமிழ்நாட்டில் சில பகுதி களில் கட்டிட தொழிலாளர் சங்கம் இவ்வாண்டின் முற்பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கின. அவை கட்டிட வேலை செய்யும். அதாவது கொத்த னார், கூலியாள், சித்தாள் இவர்களின் சம்பள உயர்வு. அதாவது கொத்தனார் 170-ம், கூலியாள் 100-ம், சித்தாள் 65. இவைகள் இன்று ஏறிவரும் விலைவாசி போக்குவரத்து கட்டண உயர்வுகள் என்பன இக்கோரிக்கைக்கான மூல காரணங்க ளாகும். ஆனால் அகதித்தமிழர்கள் மத்தி யில் இப்படியான சங்கங்கள் இல்லாததும் ஒற்றுமை யின்மையும் அகதித்தமிழர்களை வெகுவாகப் பாதிக்கின்றது. காலை 9 மணி முதல் மாலை 5.30 வரை ஆனால் வாரத்தின் பல நாட்களில் இரவு 9, 10 மணி வரை வேலை வாங்குவார்கள். அதற் கேற்ற கூலி கிடையாது. அதிக நேரம் வேலை செய்ததை சுட்டிக்காட்டி சம்பளம் கேட்டால் எல்லாம் இருக்கிறதுதான் கொஞ்சம் அனுசரித் துத்தான் போக வேண்டும் என்பார்கள். அப்ப டியும் மீறி என்னங்க என்றால் உனக்கு இந்து நாட்டு நடைமுறையெல் லாம் தெரியாது இங்க வேலை செய்தால் உலகத்தில் வேலை செய்வ தற்கு சமன் என்பார்கள் விருப்பம் என்றால்'' இல்லை யேல் வேறு இடம் பார்க்கச் சொல்வார்கள் இப்படி வேலை இழந்தவர்கள் நம்முள் பலர். தென்னம் மட்டைகள் அடித்து தும்பு தயாரிக்கும் நிறுவனங்கள் அதிகம் இந்நிறு வனங்களில் வேலை செய்வதற்கு அனேகமாக அ கதித்தமிழர்களை நாடி வருவார்கள் குறைந்த கூலி கொடுத்து நேரம் பாராது வேலை வாங்கலாம் என்பதால் 60-ம், 70-ம் வரை கிடைக்கும் இதுகூட ஊர்காரர்களுக்கு பெரிய

www.tamilarangam.net



பிரச்சனையாக இருக்கிறது. ஊர்க் காரர் புலம்பு கிறார். எப்படி இவங்க வந்தாங்க நம் ''கூலி குறைஞ்சு போச்சு, விலை உயர்ந்து போச்சு'' இவ்வாறு பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் நம்மவர்களின் புலம்பலில் எப்படா நாம் நமது சொந்த மண்ணிற்குப் போவோம் என்பது. வேலையாட்களை வேலைக்குக் கூட்டிச் செல்வதற்கு என்று சிலர் இழுக்கிறார்கள். அவர்கள் மூலம்தான் நாம் வேலைக்கு செல்கிறோம். அப்படி வேலை செய்யும்போது அவரிடம்தான் நாம் பணம் வாங்க வேண்டும். அப்படியான சந்தர்ப்பங்களில் கூலி கிடைக்காத நாட்களும் உண்டு. ஏன் பணம் தரவில்லை என்று கேட்டால் முதலாளி தரவில்லை தந்ததும் தரு கிறார் என்பார்கள். அப்படி முதலாளியிடம் கேட்டால் நான் கணக்குப் பார்த்துக் கொடுத்து விட்டேன் என்பார் இங்கு பணம்? ஆகவே கூலி வேலைக்குப் போனது கூட பணத்திற்கு கல்லில் நாருரிக்க வேண்டும்.

அகதித்தமிழர்கள் புரிந்து கொள்ளக் கூடியது யாதெனில் சனத்தொகை அதிகமுள்ள நாடுகளில் இருக்ககூடிய சமகாலப் பிரச்சனைகளில் இது போன்றவைகள் சாதாரணமானப் பின்தங்கிய பொருளாதார வளர்ச்சியுள்ள அதுவும் சனத் தொகை உலகில் 2-வது, இடத்தில் இருக்கும் ஒரு நாட்டில் நாம் எதையும் எதிர்பார்க்க முடியாது. அத்தோடு நாம் யார்? எமது பிரச்சனைகளுக்கு தீர்வு என்ன? அதை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் இலங் கையர்கள் தமிழீழத் தேசிய யுத்தத்தினால் தஞ்சம் புகுந்து கடந்த 10 வருடங்களாக முகாமில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சிறிது அமை தியைத் தவிர வேறு எந்த மாற்றத்தையும் தராத இந்த அடிமை வாழ்க்கையின் காரணம் இதைத் தீர்ப்பதற்கு எமக்குள் நாம் என்ன நினைக் கின்றோம் என்பதை திரும்பத் திருப்பமிட்டுப் பார்ப்போம் இன்று நாம் அகதி முகாமில். ஆனால் எமது எதிர்காலம் கடந்தகாலத் தவறுகள் மூலம் நிகழ்காலத்தில் நடக்கும் பிரச்சனைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கலாம் என்பதை நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாகச் சிந்திக்க வேண்டும். எமது பிரச்சனையால் இன்று இந்தியா வரமுடியாத எமது சகோதரர்கள் சகோதரிகள் பெற்றோர்கள் நாளாந்தம் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் துன்பத்தில் நாம் ஒரு கொஞ்சமாவது பங்களிக்க வேண்டும் எமது பிரச்சனைகளுக்கு நாமேதான் தீர்வு காண வேண்டும். நாம் வாழும் நாடுகளில் அந்தந்த நாடுகளின் சட்ட திட்டங்களை மதித்து அமைதி யான முறையில் எமது கோரிக்கையை முன்வைக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும் ஒன்று திரண்டு இந்தியா அரசாங்கத்தை அமைதி யான முறையில் எமது பிரச்சனைக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தக் கோருவோம். அனைத்துதரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நியாயமான அரசியல் தீர்வு அமைய நாம் அனைவரும் ஒன்று கூட வேண்டும் சாத்வீக ரீதியில் போராட வேண்டும். இப்போராட் டங்கள் மூலம் சர்வதேச சமுதாயம் சிறீலங்கா அரசை வற்புறுத்த வேண்டும். மாறாக நாம் மட்டும் அமைதியாக இருக்கிறோம் என்று நினைத்து மௌனமாக இருப்போமானால் நிச்சயம் நாம் அனைவரும் தமிழ்த் தேசத்துக்கு துரோகம் இழைத்தவர்களாகவே கருதப்ப டுவோம்.

— குணா

www.tamilarangam.net



# சிம்பாவேயில் நிலப்பறிப்புப் போராட்டம்!

சிம்பாவேயில் கடந்த சில மாதங்களாக பெரும் நிலப் பண்ணையாளர்களான வெள்ளையர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன. அந்நாட்டில் மூன்றில் இரண்டு பகுதி நிலத்தை சொந்தமாகவும், பெரும் செல்வந்தர்களாகவும், வசதியானவர்களாக இருப்பவர்களுமான வெள்ளையர்கள் மீது தமது வர்க்க பாசத்தினை வெள்ளையர்கள் நாடுகள் பல வழிகளில் வெளிப்படுத்துகின்றன. இவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்படியும், நிறுத்தப்படாத நிலையில் உதவிகளை நிறுத்தியும் இருக்கின்றன. சிறு, கூலி விவசாயிகளின் ஆத்திரத்தை அந்நாட்டு ஜனாதிபதி தனது நலனுக்காக பாவிக்கின்றார் எனப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இத்தாக்குதல் மூலமாக சில வெள்ளையர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இத்துடன் சிலர் கொல்லப்பட்டும் உள்ளனர். இங்கு நிலப்பிரச்சினை பற்றிய பிரச்சனையா அல்லது அரசியல்வாதிகளின் நலன் சம்பந்தப்பட்ட பிரச்சனையா அல்லது வெறும் வெள்ளையர்கள் மீதான தாக்குதல் மாத்திரம் தானா?

கொலனியாதிக்கம் 1893 இல் பிரித்தானியாவினால் உருவாக்கப்பட்டது. சிசில் என்பவர் தலைமையில் வெள்ளையர் தமது ஆட்சியை நிலைப்படுத்தினர். கொலனித்துவ காலத்தில் மக்கள் தமது இயற்கையை அண்டி வாழ்ந்த மக்கள் மெதுமெதுவே செயற்கையான முறையில் தமது நிரந்தரமான வாழ்க்கையை இழந்து விட்டு நகரங்களுக்கும், பெரும் பட்டினங்களுக் கும் குடி பெயர்ந்து தமது உடலுழைப்பை விற்றுப் பிழைக்கும் நிர்க்கதியாகிய நிலைக்கு உள்ளாகத் தொடங்கினர். அன்று தொடக்கம் இன்று வரை வறுமையை அனுபவித்து வரும் (நமது தேசத்தில் மலையக மக்கள் இதற்கு நல்ல உதாரணம்) இம்மக்கள் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொடர்ந் தும் வறுமையை அனுபவித்து வருகின்றனர்.

கறுப்பர்களின் வேர்வையிலும், குருதியிலும் தமது சுகவாழ்வை உருவாக்கிக் கொண்ட வெள்ளைப் பண்ணைக்காரர்கள் இன்று தமது சொத்தைப் பாதுகாக்கும் பொருட்டு போராடிக் கொண்டு இருக்கின்றனர். இவர்கள் தமது குடியிருப்புக்களை எத்தனையோ இலட்சக்கணக்கான கறுப்பர்களின் சமாதி மேல்தான் தமது கோபுரங்களையும், மாடமாளிகைகளையும் கட்டி இருக்கின்றனர். இவர்கள் இன்று தமது சொத்து என உரிமை கொண்டாடுவது இன்றைய கறுப்பர்களின் மூதாதையர்களின் உழைப்பினால் உருவாகிய வழங்களேயாகும்.

கொலனித்துவ காலத்திற்கு முன்னர் நிலங்கள் எல்லாம் பொதுமையாகவே இருந்திருக்கின்றது. பொருளாதார வளர்ச்சியடையவும், இதன் மூலம் மேலதிக உழைப் பினால் உருவாகிய செல்வத்தினாலும் சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றது. இதேபோல நிலங்களையும் தமக்கிடையே உருவாகும் போட்டியினை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு எல்லைகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு தனிச் சொத்துரிமையை பாதுகாத்துக் கொள்வதற்கு அடிப்படையாக தனிச் சொத்துரிமை என்ற கொள்கைப் பாடும், அதன் கொள்கை வழி அரசும் உறுதுணையாக இருக்கின்றன. அதன் இயந்திரமான சட்டமும் தனிச் சொத்துரிமையை பாதுகாக்கும் பொருட்டான தீர்ப்பையே வழங்கியுள்ளது. இதிலிருந்து பழைய உற்பத்தி முறையை மாற்றியமைக்கின்ற பொருளாதார முறையை அங்கு முழுமையாக செயற்படுத்தவில்லை எனக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

விடுதலைப் போராட்டம் அதன் தலைவரான முகாபே தலைமையில் நடத்தினர். இவர்கள் 1980 ஆண்டு பிரித்தானியர்களிடம் இருந்து விடுதலை பெற்றனர். அன்று தொடக்கம் அந்நாட்டின் தலைவராக இருந்து வருகின்றார். ஆபிரிக்க நாடுகளில் விடுதலைப் போராட்டத்திற்கு அன்றைய சோவியத் ஒன்றியம், சீனம் ஆகிய நாடுகள் உதவி வந்தன. ஆபிரிக்க நாடுகளின் கொலனிய எதிர்ப்பிற்கு எதிராக இருந்த சக்திகள் மார்க்சிய சிந்தனையை தமதாக்கிக் கொண்டனர் எனினும் இவர்கள் கொண்ட மார்க்சியம் ஆபிரிக்க மண்ணிற்கு ஏற்றவாறான மார்க்சியம் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். கடந்த காலப்

www.tamilarangam.net



போராளிகள் ஆட்சிக்கு வந்த பின்னர், முன்னர் கொண்ட கருத்தில் இருந்து விலகிக் கொண்டதை தற்கால அனுபவங்கள் காட்டி நிற்கின்றன.

விடுதலை அடைந்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய நிலச்சீர்திருத்தம் அல்லது நிலப்பங்கீடு கடந்த 20 வருட காலங்களாக பின்போடப்பட்டிருந்த நிலப்பிரச்சினை இன்று மறுபடியும் தலைதூக்கியிருந்திருக்கின்றது. பண்ணையாளர்களிடம் இருக்கின்ற நல்ல கனிந்த நிலங்கள் அவர்களிடம் இருந்து புரட்சியின் போது பறித்தெடுப்பதே புரட்சிகர காலங்களில் வழமையான ஒன்றாகும். ஆனால் கடந்த 20 வருடங்களாக விடப்பட்டு வந்ததை, போராட்ட காலங்களில் இருக்கின்ற சக்தி பற்றி போராடும் காலங்களில் அவதானமாக இருக்க வேண்டும் என்பதை வரலாறு சுட்டி நிற்கின்றது. போராடும் காலங்களில் சோசலிசம் கம்யூனிசம் என்று கூறிப் போராட்டத்தை வழி நடத்தியவர்கள், சர்வதேச தொழிலாளர்களிடம், மனிதாபிமானிகளிடம் உதவியைப் பெற்றுக் கொண்டவர்கள், உழைக்கும் மக்களை தமது இலக்குக்காக அணிதிரட்டிக் கொண்டவர்கள் போராட்டம் வெற்றி பெற்ற பின்னர் உழைக்கும் மக்களை கைவிட்டதைத் தான் சிம்பாவே அனுபவம் காட்டி நிற்கின்றது.

நிலத்தை எவ்வாறு பங்கிடுவது என்பது பற்றி பல முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன. நிலத்தை எந்தவித நட்டஈடும் கொடுக்காது அவற்றைப் பெற்றுக் கொள்வது. இதில் இரண்டாவது முறைக்குத் தான் பலத்த ஆதரவு இருக்கின்றது. இவ்வாறு செய்வதற்கு பிரித்தானியா முன் வந்துள்ளது. 1998 உதவி வளங்கும் நாடுகள் நிலங்களை பங்கிடுவதற்கு இசைந்து சலுகைப் பணம் கொடுக்க முன் வந்திருந்தது உதவி வளங்கும் நாடுகளும், பிரித்தானியாவும் இவ்வளவு காலமும் ஆறப்போட்டிருந்தது. ஆனால் இன்று பண்ணையாளர்கள் மீது தாக்குதல் தொடங்கிய பின்னர் மீண்டும் பணஉதவி செய்ய முன் வந்துள்ளது.

நிலத்தை விடுவிக்க தொடங்கிய பிற்பாடு அண்டைய நாடுகளிலும் இதற்கு ஆதரவான நிலமை தோன்றியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தென் ஆபிரிக்காவில் ஒரு கணிப்பெடுப்பில் நிலம் விடுவிப்புக்கு பெரும்பான்மையான ஆதரவு கிடைத்திருக்கின்றது. தென்னாப்பிரிக்காவில் 50,000 குடும்பங்கள் குடியிருப்பிற்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் நிர்வாக ஒழுங்கீனம் காரணமாக இழுத்தடிப்பதாக காரணம் கூறப்படுகின்றது. இப்படியாக நிலங்கள் இல்லாதவர்கள் மட்டத்தில் விரோத உணர்வு எழுப்பியிருக்கின்றது. அண்மையில் கென்யா நாட்டில் ஒரு பண்ணை 300 தொழிலாளர்களால் விடுவிக்கப்பட்டது.

மக்களின் எதிர்ப்புணர்வு காரணமாக தென்னாப்பிரிக்கா, நமீபியா, மொசாம்பிக் ஆகியோருடன் சாம்பிய அதிபர் நடத்திய மாநாட்டில் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. மாறாக உதவி வளங்கும் நாடுகள் தாம் சம்மதித்திருந்த நிதியை கொடுக்கும்படியே கேட்டிருந்தனர். இது வெள்ளையர் நாட்டினருக்கு சம்மதமான முடிவாக இருக்க மாட்டாது. இத்துடன் இவர்களின் எதிர்ப்பும் நிதி மூலதனத்தை எதிர்க்கின்ற நிலைப்பாடாக உழைக்கின்ற மக்கள் எடுத்துக் கொள்ளவும் கூடாது. வைகாசி மாத இறுதிப் பகுதியில் சிம்பாவே நாட்டுத் தலைவர் முகாபே, நமீபியா நாட்டு மக்களும் சிம்பாவே நாட்டின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளதாக நம்பிய பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

இனத்துவ ஆதரவா? வர்க்க ஆதரவா? என்பது பற்றியும் விவாதங்கள் நடைபெறுகின்றன. சிம்பாவேயில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் வெள்ளையர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கும்படி வெள்ளையர்களின் நாடுகள் கோருகின்றன. இவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் அய்ரோப்பிய ஒன்றியம் தனது படைகளை அனுப்பும், என ஜேர்மன் பத்திரிகை தெரிவித்துள்ளது. ஆனால் பத்திரிகை எவ்வித ஆதாரங்களையும் முன்வைக்கவில்லை. ஆனால் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் மேற்கு ஆபிரிக்க நாடான சியாராலியோனில் பிரித்தானியா விசேட படையை அனுப்பி வெளிநாட்டு பிரஜைகளை வெளியேற்றி இருந்தது. இந்தச் செய்தி உண்மையாகவும் போகலாம் அல்லது பொய்யானதாகவும் இருக்கலாம். ஆனால் வெள்ளையர் நாடுகளில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் எவ்விதமான நிலைப்பாடுகள் எடுக்கின்றனர் என்பதை இங்கு கவனிக்க வேண்டியிருக்கின்றது. வெள்ளையர் நாட்டவர் வசதிபடைத்த பண்ணையாளர்கள் தாக்கப்படுகின்றனர் என்றுதான் பார்க்கின்றனர். இவர்கள் காலங்காலமாக சுரண்டப்படும் மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. மனிதவுரிமை நிறுவனங்கள் இதுபற்றி பேசுவதில்லை.

பிரேசில் நாட்டிலும் நிலவிடுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவர்களுக்கும்

www.tamilarangam.net



எவ்வித ஆதரவையும் தெரிவித்ததாக தெரியவில்லை. பிரேசில் நாட்டில் நிலங்களைக் கூட ஸ்கண்டி நேவிய நாட்டர் சொந்தமாக கொண்டுள்ளனர். இவ்வாறான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் ஆதரித்துக் கொள்ளவார்களா என்பது சந்தேகமே. இங்கு இன்னொரு சிறப்பம்சத்தை கவனிக்கக் கூடியதாகவுள்ள. அய்ரோப்பிய நாடுகள் பலவற்றில் சமூக ஜனநாயக கட்சிகளே ஆட்சியில் இருக்கின்றன. சமூக ஜனநாயக கட்சிகள் தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்தவப்படுத்துவதாக கூறப்படுகின்றது. இவ்வாறாக கட்சிகளைக் கொண்ட ஆட்சியாளர்கள் வறுமையில் வாடும் மக்களுக்கு நன்மை செய்யாமல் வசதி படைத்த பண்ணையாளர்களின் சொத்துக்களை பாதுகாக்க அதிக அக்கறை கொள்கின்றனர். போராடும் சக்திகளை காடையர்களாக சித்தரிக்கின்றனர்.

சர்வதேச நிறுவனங்கள் பல வெள்ளைப் பண்ணைகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன. மனித உரிமை அமைப்புக்கள், ஆட்சியாளர்கள் எவ்வித தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சாட்டியிருந்தனர். அத்துடன் தேர்தலை உரிய காலத்தில் நடத்தும்படி மனித உரிமை அமைப்புக் கோரியுள்ளது. சிம்பாவே ஆட்சியாளர்கள் தேர்தலை மாத்திரம் கவனத்தில் கொண்டே செயற்படுவதாக குற்றம் சாட்டினர். முகாபேயை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என மோர்கன் என்ற எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துக் கொண்டார். மேற்கு நாடுகள் பல சிம்பாவே நாட்டின் நடத்தை பற்றி அருவருப்படைவதாக கூறின. இவர் மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்த பின்னர் நாடு திரும்பிய போதே இதனைத் தெரிவித்தார். சரி இருக்கட்டும் மேற்கு நாடுகள் சிம்பாவே நாட்டின் நடத்தை பற்றி அருவருப்பு அடையும் போது இவர் ஏன் தனக்கு சாதகமாக பயன்படுத்த முனைகிறார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இவரும் வறிய நாட்டவர் பலர் மேற்கு நாட்டை ஏங்கித் தவிக்கும் நிலையில் இருந்தும், தமது வர்க்க உடன்பிறப்புக்களிடம் கை நீட்டி நிற்பதையும் இது சுட்டி நிற்கின்றது. ஐ.நாவின் செயலர் கோபி அன்னர் உட்பட பலர் வன்முறையை நிறுத்தும்படி வேண்டிக் கொண்டனர்.

உலகம் என்பது முன்னரை விட சுருங்கியுள்ளது. சுருங்கியுள்ள இன்றைய உலகத்தில் உயர்ந்த குடியைக் கொண்ட ஒரு கூட்டம் வளர்ந்து வந்திருக்கின்றது. இந்த உயர்குலக் கூட்டம் உலகின் தலையெழுத்தையே நிர்ணயிக்கும் சக்தியாக வளர்ந்து வந்திருக்கின்றது. இந்தக் கழகத்தில் (U.N.) பணம் படைத்தவர்களின் நலனைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய எந்தச் சக்திகளையும் வரவேற்றுக் கொள்ளக்கூடிய தாராளமனம் கொண்ட இந்தக் கழகமானது, (U.N.) நாளாந்தம் வளர்ந்து கொண்டு வருகின்றது. இந்தக் கழகத்தில் சாதாரண மக்களின் அவலத்தைக் கதைப்பது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால் உலகத்தின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக் கூடிய வகையில் முரண்பாடு அற்ற வகையில் அந்தக் கழகத்தில் (U.N.) பேசக் கூடிய வல்லமை இருக்குமானால் அவர்கள் அந்தக் குழுவில் அங்கம் வகிக்க தகுதி பெற்றவர்களாகின்றனர். இவர்கள் பூகோள ரீதியாக உச்சத்தில் இருப்பவர்கள் இவர்கள் கொடுக்கின்ற பட்டம் நாய்க்கு எலும்புத் துண்டைப் போடுவது போல் ஆகும்.

இந்த எலும்புத் துண்டை காவிக் கொண்டும் பெருமையடித்துக் கொண்டும் வாழ்வதற்கு உலகில் பல நபர்கள் இருக்கின்றனர். இவர்கள் மக்கள் மத்தியில் அரசியல் ரீதியில் விளிப்புக் கொள்ளாத நிலையைப் பயன்படுத்தி இருக்கின்ற, உலக நிலையில் அங்கீகரிக்கப்பட்ட நிலையை நிரந்தரமான நிலையாகக் கொண்டு இதுவே முடிந்த முடிவான உலகில் அங்கீகரிக்கப்பட்ட போக்காக பிரச்சாரம் செய்வதுடன் இந்த நியதியில் இருந்து கொண்டு இருக்கின்ற உலக நியதிக்கு ஊழியம் செய்வர். மேற்குறிப்பிட்ட உலகின் சிந்தனைப் போக்கை விளக்கிக் கொள்வதன் மூலமாக உலகின் பாகங்களில் நடக்கும் சம்பிரதாய நடப்புக்களை விளங்கிக் கொள்ள முடியும்.

போராட்ட முறை பற்றி மேற்குலகம் கொண்ட பார்வை பற்றி முரண்பட்ட கருத்துக் கொண்டுள்ளது. மேற்குலகம் சொல்கின்ற பாதையைத் தான் எல்லோரும் முன்வைக்கின்ற முறையை தற்பொழுது காணக்கூடியதாக உள்ளது. புதிய முறை எனக் கொண்டாலும் நவீன உலகில் புதிய வகையானதாகத் தோற்றம் பெறுகின்றது. ஆனால் இவை புதிய வகை அல்ல மாறாக போராடும் மக்களின் போராட்ட விருப்பை, போராட்டத்தின்பால் கொண்ட பற்றை திசைதிருப்பிக் கொள்வதாகும். இன்றைய போராட்டம் சென்சராய் என்பவர் தலைமையில் ''போராட்ட தியாகிகள்'' என அழைத்துக் கொள்கின்ற அமைப்பை சேர்ந்தவர்களால் நிலங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றது.

இந்தப் போராட்ட முறையில் நியாயம் இருக்கின்றது. ஆனால் மேற்கு தொலைத் தொடர்புச் சாதனங்கள் பலாத்காரத்தினால் ஆட்சி மாறுவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தையும், ஏற்றுக் கொள்வதையும் எதிர்த்தே பிரச்சாரங்களை மேற்கொள்கின்றது. குறிப்பாக ஒரு வெள்ளையர் கொல்லப்பட்டால் பூதாகாரப்படுத்தி பிரச்சாரத்தையும் மேற்கொள்கின்றன. இங்கு வெள்ளைத் தோல் மீது கொண்ட பாசம் என்றும் கொள்ள வேண்டியுள்ளது. வெள்ளைப் பாசமும், மறைமுகமான பண்ணையார்கள் என்ற ரீதியில் கொள்ளப்படும் அனுதாபங்களும் சுரண்டும் வர்க்கத்தை சேர்ந்தவையாகும்.

1972 இல் 280000 வெள்ளையர்கள் வாழ்ந்தனர். இவர்களில் பலர் மேற்கு தேசங்களுக்கு திரும்பியுள்ளனர். சிம்பாவேயின் 9 மில்லியன் மக்களில், மிகச் சிறுபான்மையினரே 3 இல் 2 பகுதியை (சுமார் 4000 பெரும் பண்ணைகளை) நிலத்தை உரிமையாகக் கொண்டுள்ளனர். வெள்ளையர்களின் சிம்பாவே நாட்டின் கடவுச் சீட்டுக்களை ஒப்படைக்கும்படி முகாபே அறிவித்துள்ளார். சிம்பாவே நீதிமன்றம் நில விடுவிப்பு, சட்டத்திற்கு முரணானது என அறிவித்துள்ளது.

தாராளவாத பொருளாதாரத்தால் ஏற்படும் விழைவுகள் வறிய நாட்டவரை விட்டு விடுவதில்லை. முன்னர் கொலனித்துவ காலத்தில் தமது பழைமையான பொருளாதார முயற்சிகளை விட்டுவிட்டு புதிய பொருளாதார நிலைக்கு மாற்றமடைகின்ற மக்கள் தொடர்ச்சியாக பழைய காலத்தில் இருந்தது போலவே வறுமையில் வாடிக் கொண்டு இருக்கின்றார்கள். தொடர்ந்தும் இன்றைய காலத்தில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், W.B./IMF, ஆகியவை போடுகின்ற கட்டளைகளுக்கு கீழ்படிந்துதான் வறிய நாடுகள் தமது பொருளாதார திட்டங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. இவர்களின் சட்டத்திட்டத்திற்கு பணிந்து நடக்காமல் எந்த நாடும் தற்காலத்தில் தப்பிக்க முடியாது.

சர்வதேச நிறுவனங்களுக்கு சாதகமான சட்டதிட்டங்களைத் தான் வறிய நாடுகள் செயற்படுத்த வேண்டியிருக்கின்றன. அண்மையில் சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் தென் ஆபிரிக்காவில் கூட இந்த நிலைதான் தொடர்கின்றது. அவர்கள் கூட தமது சொந்த மக்களின் நலனின் பால் கொண்ட பொருளாதார திட்டங்களை வகுத்துக் கொள்ளவில்லை. நிறம் மாற்றம் அடைந்துள்ளதுதான் அங்கு ஏற்பட்ட மாற்றம் மாறாக சுரண்டும், பணக்கார வர்க்கம் சுரண்டலை மேற்கொண்டுதான் வருகின்றன. வறிய நாடுகள் எல்லாம் எதிர்நோக்கின்ற பிரச்சனைகளில் ஒன்றாகும். வறிய நிலையைப் போக்க சுய பொருளாதார திட்டத்தில் அமைந்து கொண்ட பொருளாதார திட்டங்களே அடிப்படையான நிபந்தனையாகும். ஆனால் நவகொலனிய நாடுகளில் நலிவடைந்த விவசாயிகளின் வங்கிக் கடனுக்கு தள்ளுபடி செய்வதுபோல், வறிய நவகொலனி நாடுகளின் கடனை உலக வங்கி தள்ளுபடி செய்ய வேண்டும் எனப் பேசப்படுகிறது.

எதிர்காலத்தில் தமிழீழ தேசத்தில் இவ்வகையாக நிலப்பிரச்சனை தோன்றுகின்ற போது எவ்வகையான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பது பற்றி இன்றே ஆய்வினை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. இன்று ஆய்வு நிலைகள், வெளிநாட்டு தத்துவங்களையும் கோட்பாடுகளையும் தெரிந்து வைத்திருப்பவர்கள், எமது தேசம் பற்றி தெரிந்து கொள்ளாத நிலை மாற்றப்பட வேண்டும். சீன மேதை ஒருவர், சீன தேசத்து ஆய்வாளர்களைப் பற்றிக் கூறிய போது கிரேக்க சித்தாந்தத்தைப் பற்றி தெரிந்து கொண்டு உரைப்பதில் கொடுக்கின்ற நேரத்தை சீனத்தின் தத்துவத்தை படித்து உரைப்பதில் கவனம் செலுத்துவதில்லை என்பதை விமர்சித்திருந்தார். இந்தக் கூற்றை ஆழ்ந்து சிந்திக்கத்தான் வேண்டும். போராடுகின்ற தேசத்தின் தத்துவ சிந்தனை நிலையை தெரிந்து கொள்வதன் மூலமே சொந்த நாட்டிற்கான கோட்பாட்டை படைக்க முடியும்.

போராடுகின்ற போதே ஒவ்வொரு தேசமும் சொந்தக் கோட்பாட்டைப் படைத் தல் வேண்டும். இதன் மூலமே எதிர்காலத் தில் எவ்வகையான திட்டங்களை வகுக்க முடியும் என்பது பற்றி போராடுகின்ற சக்திகள் எதிர்காலத் திட்டத்தில் தன்னிறைவு கொள்ள முடியும். இத்துடன் எதிர்காலத்தில் போராட்டச் சக்திகள் உழைக்கும் மக்களுக்கு எதிரான பொருளாதார கொள்கையை மேற்கொள்ளும் போதும், போராட்டச் சக்திகள் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக செயற்படுவதாக கூறிக் கொண்டு பதவியைப் பிடித்தபின்னர் பணக்கார வர்க்கத்தின் நலனில் பால் கொண்ட பொருளாதார திட்டத்தை மேற் கொள்ளும் போது எதிர்த்துப் போராடவும் முடியும்.

— ரமேஷ்

www.tamilarangam.net



# ஆக்கிரமிப்பு யுத்தம் - பொருளாதாரத் தடை வெல்வதற்கான பாதை!

இப்புத்தாயிரம் ஆண்டிலும் எல்லாம் தொடர்கிறது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத் திலும், உலகம் முழுவதிலும் இது நடக்கிறது. நாட்டின் பாராளுமன்ற தேர்தல் முறையை மீறி ஆட்சியதிகாரத்தை கைப்பற் றும் போது, தங்களின் விடுதலை வேண்டி மக்கள் சமூக மாற்றத்துக்காக, தேசிய இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்தி போராடும் போதும், வல்லரசிய உலக பொருளாதார தொழில் ஆயுதக் கொள்கையை ஒரு நாடு ஏற்க மறுக்கும் நிலை யில், நவகொலனிய நாடு சர்வதேச பிராந்திய நிறு வனங்களின் கண்டிப்புக்குள்ளாகும் தருணத்தில் ''தடையை'' (அனைத்து துறைகளிலும்) வல்லர சுகளும் ஆதிக்க அரசுகளும் உலக நிறுவனங் களும் (W.B., IMF.,W.T.O., U.N.) விதிக்கின்றன. நிலவும் வல்லரசிய முதலாளித்துவ சமூக அமைப்பை நிலைநிறுத்தக் கூடிய முறையில் பேச்சு வார்த்தை நடத்தி சமாதானம் செய்து கொள்கின்றன. உலகமயமான சமூக பொருளா தார கலாச்சார முறைக்குள் நாடுகளை மக்களை இணைத்து வல்லரசியம் தனது உலக ஆக்கிரமிப்பு அரசியல் - அதிகாரத்தை நவகொலனிய நாடுகள் - மக்கள் மேல் திணித்து வருகிறது. தங்களின் ஆதிக்க சூழ்ச்சிகளை ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகள் மக்கள் மீது, யுத்தம், தடை, வெளி யேற்றம் என்பதை கடைப்பிடிக்கிறது.

நவகொலனிய சிறீலங்கா அரசு. தமிழீழ மக்கள் மேல் தொடர்ச்சியான பொருளாதார தடையை பிரயோகித்து வருகிறது. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீது ஒரு கொள்கையும், அரசு கட்டுப்பாட்டு பகுதி மீது வேறு கொள்கையும் பின்பற்றி வருகிறது, யாழ் புலிகளின் கட்டுப் பாட்டில் இருந்த போது பொருளாதாரம் (தரை யிலும், கடலிலும்) போக்குவரத்து, மருத்துவம் என எல்லாவற்றிலும் தடைவிதித்து மக்களை வாட்டி வதைத்து சாகடித்தது. போராளிகள் மேல் மக்களுக்கு வெறுப்பை போராட்டத்தின் மீது விரக்தியை இத்தடைகள் மூலம் அரசு உருவாக்கி யது. யாழ் அரசுபடை கட்டுப்பாட்டில் வந்த வுடன் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் அள வுக்கு தடைகளை நீக்கி அரசுடன் மக்களை அய்க்கியப்படுத்த முயன்று வருகிறது. சந்திரிகா அரசு, வன்னிப் பகுதி மக்கள் மீது கடந்த 5 ஆண்டுகளாக மிகக் கொடிய தடையை விதித்து வருகிறது. கிழக்குப் பகுதியின் (புலி கட்டுப் பாட்டு பகுதி) மீதான தடையை விட அதிகமாக வன்னி மீது தடையை போடுகிறது. காரணம் புலி களின் தலைமையகச் செயற்பாடுகள் மையப்பட் டிருப்பதால் ஆகும். புலிகளை காரணம் காட்டி, உணவுப் பொருள்கள், தினசரி பாவனைப் பொருள் கள், உற்பத்திக்கு தேவையான பொருள் கள், மருந்துகள், மருத்துவச் சாதனங்கள், பள்ளிக் கூடங்களுக்கான பொருள்கள், கடலில் மீன் பிடித்தடை என எல்லாவற்றிலும் தடை போடப் பட்டுள்ளது. அல்லது எல்லைப்படுத்தப்பட்ட தடையை விதிக்கிறது. வன்னிப் பகுதிக்கு நான்கு மில்லியன் பணப் புழக்க தேவை இருக்கின்றது. ஆனால் ஒரு நபர் வன்னிக்கு வெளியில் இருந்து உள்ளே 10,000/- மட்டுமே எடுத்துச் செல்ல அனு மதிக்கப்படுகிறார். பணப்புழக்க அளவை கட்டுப் படுத்தும் அளவுக்கு சிறீலங்கா அரசின் 'தடை' வெளிப்படுகிறது.

உலக வங்கி (W.B.) விவசாயக்குளங்களை சீர மைப்பதற்கான கடன்களை கொடுக்க கடந்த ஆண்டில் (99-ல்) அரசு மற்றும் புலிகளின் கட்டுப் பாட்டு பகுதிக்கு ஒரு ஆய்வுக் குழுவை அனுப்பி யது. கடன் அளவை தீர்மானித்தது. நிதியை அரசின் கையில் கொடுத்து விட்டது. சிலகுளங் களின் கட்டுப்பாடு புலிகள் - அரசு என இரண்டு

www.tamilarangam.net



பக்க படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதும் உண்டு. ஆனால் தென் தமிழீழத்தில் புலி கட்டுப்பாட்டுப் பகுதி குளங்களுக்கான நிவாரண உதவியும், பணமும் மின்னேரியா முகாம் அரசு தளபதியின் கண்காணிப்பு அனுமதியுடன்தான் அனுமதிக்கப்படுகிறது. இந்தியரசு 400 மில்லியன் டொலர் ''மனிதாபினமான உதவி?'' சிறீலங்கா அரசுக்கு கொடுத்தது. (இந்தியரசிடம் பஞ்சாபில் தேங்கியுள்ள கோதுமையும், தமிழ்நாட்டில் தேங்கியுள்ள சீனியும் அரிசியும்) அந்தப் பணத்துக்கு இந்தப் பொருள்களை வாங்க வேண்டும் என 'மனிதாபிமான' நிபந்தனை விதித்திருக்கிறது.

இந்தியரசின் மனிதாபிமான உதவி, வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு இல்லை. யுத்தத்தால் நெருக்கடியில் சிக்கியுள்ள அரசுக்கு அரசு படைகளுக்கான உணவுத் தேவைக்கான மனிதாபிமான உதவியாகும். உலக வங்கியின் (W.B. சர்வதேச நிதிக் கொள்ளை) நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் சிக்கியுள்ள சிறீலங்கா அரசு. உலக வங்கி ஒருங்கிணைப்பு குழுவின் (÷ 1.6) பில்லியன் டொலர் நிதியைப் பெற முடியாமல் நிதி நெருக்கடியில் மூழ்கியுள்ளது. உலக வங்கியின் அறிக்கை அரசை கண்டித்து மேலும் திறந்த தனியார்மய கொள்கை பற்றி பேசுகிறது. சுற்றுலாத்துறை கட்டுப்பாடுகளை நீக்கக் கோருகிறது. உலகிலேயே 1000 பேருக்கு 57 பேர் அரசு அமைப்பு வேலைகளில் உள்ள நாடு சிறீலங்கா, இந்த எண்ணிக்கையை பெருமளவில் குறைக்க கோருகிறது. பிரிட்டனின் (DFID) இன் அறிக்கை யுத்தச் செலவு - சமூகநலத் திட்டம் பற்றி பேசுகிறது. அரசு செலவீனங்கள் மானியங்களை குறைத்து, நிறுத்தி கடனை ஈடுகட்டுவது குறித்து ஆலோசனை சொல்கிறது. சிறீலங்கா அரசின் 2000 ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 730 மில்லியன் டொலர் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டது. இப்போது 800 மில்லியன் டொலராக உயர்த்தப்பட்டுள்ளது. 2600 கோடி ரூபாவுக்கு புதிதாக விமானம், ஆயுதம் வாங்கப்பட்டுள்ளது. ஆணையிறவு தோல்விக்குப் பின் அரசு உடனடி அவசரம் இல்லாத வளர்ச்சித் திட்ட செலவுகளை பாதுகாப்பு துறைக்கு திருப்பியுள்ளது. வீட்டுப் பாவனைப் பொருள்களுக்கான வரி 7.5% இல் இருந்து 8 வீதமாகவும், பொருள்கள் சேவைகளுக்கான வரி 9.2% இல் இருந்து 12.5% வீதமாகவும், உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடத்துக்கு 125 பில்லியன், சிகரெட் மதுபானம் மூலம் 1.5 மில்லியன் முக்கியமில்லாத வளர்ச்சி திட்டத்திலிருந்து 6 பில்லியன் நிதியையும், தேசிய பாதுகாப்பு வரியை 5.5% இல் இருந்து 6.5% மாக உயர்த்தியதன் மூலம் 10 பில்லியன் நிதியும் சேர்த்து யுத்த செலவை சமாளிக்க அரசு முடிவெடுத்து செயற்படுத்தி வருகிறது. சிறீலங்கா அரசு தன் கட்டுப்பாட்டு பகுதி மக்களை ''வரி போட்டு'' வதைக்கிறது. புலி கட்டுப்பாட்டு பகுதி மக்களை 'தடை போட்டு' கொல்கிறது. சிறீலங்கா அரசு மீது பிராந்திய நாடுகளோ சர்வதேச உலகமோ வெளிப்படையான தடையை, நிர்ப்பந்தத்தை கொடுக்கவில்லை. ஒரு ஏமாற்று 'தீர்வுப் பொதியை' வைக்குமாறு மட்டுமே அதுவும் ஒரு அழுத்தம் மட்டும் கொடுக்கின்றன.

ஆனால் புலிகள் மீது தடை விதிக்கின்றன. புலிகளின் நிதி மூலத்தை தடுக்கின்றன. ஆயுதக் கொள்வனவை வழியை அடைக்கின்றன. புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழர்களிடம் இருந்து பெறப்படும் நிதி அளவை கணித்துள்ளன. சுவிஸ்ல் உள்ள 30000 தமிழர்களிடம் இருந்து மாதம் ஒன்றுக்கு 1.2 மில்லியன் டொலர் புலிகளால் திரட்டப்படுவதாக குற்றம் சாட்டி சுவிஸ் அரசு, அமெரிக்கா போல் தடை செய்ய வேண்டும் என அரசு அழுத்துகிறது. (அய்நா சபையின், அய்ரோப்பிய பாராளுமன்றத்தின் நிதித் தடைச் சட்டம் சுவிஸ் அரசை கட்டுப்படுத்தாது என்பது கவனிக்கத்தக்கது) பிரிட்டனை புலிகளின் செயற்பாட்டுக்கு தடைவிதிக்க வேண்டும் என மிக அண்மையில் வெளிப்படையாக அரசு கோரியுள்ளது, தாய்லாந்து நாட்டு கப்பல் கட்டும் தளத்தில் புலிகளுக்கு ஒரு நீர்மூழ்கிக் கப்பல் தயாராகி வந்ததையும், அது தொடர்பாக நோர்வேயை வதிவிடமாக கொண்ட தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டதை, அன்டன் பாலசிங்கம் தாய்லாந்து வழியாக பிரயாணம் செய்ததை, தாய்லாந்து ஆயுதச் சந்தை வழியாக புலிகள் ஆயுதம் பெறுவதை பட்டியல் இட்டு காட்டி புலியை தடை செய்ய கோரப்படுகிறது. இந்தியரசு புலிகள் மீதான தடையை மேலும் நீட்டித்துள்ளது.

புலிகள் சீறிலங்கா அரசை எதிர்த்து தொடர்ந்து போராடுவதால், தங்களின் நலனுக்கு முரண்பாடாக புலிகள் யுத்தம் புரிவதை போராடுவதை ஏற்காத நாடுகள் தடைவிதிக்கின்றன. புலிகள்

www.tamilarangam.net



அன்னிய நாட்டு விவகாரங்களில் நேரடியாக தலையிடுகின்ற தவறான அணுகுமுறைகளை, வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடம் (உள்நாட்டில் கூட) நிதி சேகரிப்பு உட்பட கடைப் பிடிக்கும் கொள்கைகள் அணுகுமுறை அராஜகங் களை சுட்டிக்காட்டி புலிகளின் தவறுகளை திருத்த கோருவது, மக்கள் பக்கம் நின்று போரா டுவது, தமது சிறந்த கொள்கை - அணுகுமுறை மூலம் புலிகளை விட மக்களுடன் உணர்வுபூர்வ மாக அய்க்கியப்படுவது சரியானது. ஆனால் சிறீ லங்கா அரசின் தேசிய - சர்வதேசிய ராஜதந்திர முயற்சிகளுக்கு, புலி எதிர்ப்பு நாடுகளின், நிறுவ னங்களின் (மீஎஙூண்) அழுத்த நடவடிக்கை முயற் சிகளுக்கு தமிழீழ சனநாயக சக்திகள் பலியாகக் கூடாது. சிறீலங்கா அரசின், ஆக்கிரமிப்பை படை களின் அத்துமீறல்களையும், புலிகளின் சனநா யக விரோத அத்து மீறல்களையும் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் வழியாக சமப்படுத்தி பார்த்து சிறீ லங்கா அரசையும் - புலிகளையும் ஒரே அணுகு முறையில், பார்வை யில் பாக்கும் பல்கலைக்க ழக மனித வுரிமைக் குழுவின் (UTHR) அறிக்கைகள், அர சியல் பார்வையை நிராகரித்து ''மனித வுரிமை, மனிதாபிமானம், பேச்சுவார்த்தை, சமா தானம்'' குறித்த முதலாளித்துவ வல்லரசிய நாடு களின், அரசுசாரா நிறுவனங்களின் (மீஎஙூ) அர சியல் பேசாத பொருளாதார சீர்திருத்த கொள்கைக்கு, மனிதவுரிமை, சமாதானக் கொள்கைக்கு இரையாகுவதாகும். இதன் எதிர்ப் பக்கம் புலிகள் போராடுகிறார்கள். புலிகள் மட்டும் போராடுகிறார்கள் எனக் கூறி புலிகளின் தவறுகளை தமிழீழ மக்கள் மத்தியில் கூட பேசம றுக்கும், தவிர்க்கும் போக்கானது புலிகளின் புலி ஆதரவு சர்வதேச அழுத்தக் குழுக்களின் மீஎஙூ'ண் கொள்கைகளுக்கு வால்பிடிப்பதாகும். அடிப் டையில் இரண்டு எதிரான போக்குகளும் முதலா ளித்துவ சுரண்டல் உலகக் கொள்கைக்கு மனிதவு ரிமை மனிதாபிமான கண்ணோட்டங்களுக்கு பலியாகுவதில் முடிந்துவிடும் என்பதை நாம் தெரிந்து கொண்டு செயற்பட வேண்டியுள்ளது.

இந்தியா இன்று 'பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச மாநாட்டை' கூட்டுவதற்கு மேற்கத்திய நாடுகளையே அணி திரட்டுகிறது. பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதும் 'பொதுநலவாய (C.W.) அமைப்பில்'' இருந்து வெளியேற்ற இந்தியா முழு அக்கறை காட்டியது. பாகிஸ் தானின் எல்லைப் பயங்கரவாதம் (காசுமீர், பஞ்சாப் போராளிகளை பயன்படுத்துவது) நிறுத் தப்படாதவரை பாகிஸ்தானுடன் எத்தகைய பேச்சு வார்த்தையும் நடத்த மறுத்து வருகிறது, (83 முதல் 90 வரை நேரடியாக இந்தியரசு தமிழீழ போராளிகளை பயன்படுத்தியது) J.R அரசு இந்தியா கடல்தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது என குரல் எழுப்பியது, பாகிஸ் தானில் இராணுவ ஆட்சி மாற்றப்படவேண்டும் சனநாயக தேர்தல் அரசு நிறுவப்பட வேண்டும் என மேற்கத்திய நாடுகள் பல தடைகள் விதித் தன. பாகிஸ்தான், பர்மா இராணுவ ஆட்சிக்கு எதிராக பொருளாதார தடை, ஆயுதத்தடை என அமுல்படுத்தப்படுகின்றன. சர்வதேச நிறுவனங் களில் இருந்து வெளியேற்றப்படுகிறது. அதே வேளை 98-ல் இந்தியாவும், பாகிஸ்தானும் அணு வெடிச் சோதனை நடத்தியவுடன் அணு ஆயுத நாடுகளும் மேற்கு நாடுகளும், உலக வங்கி (W.B.) சர்வதேச நாணய நிதியம் (IMF) அய்நா. (U.N.) என எல்லா ஆதிக்க சக்திகளும் இரண்டு நாடுகள் மேலும் பொருளாதாரம், ஆயுதம், அறி வியல், வணிகம் என எல்லாத் துறைகளிலும் தடைவிதித்தன. இப்போது CTBT, NBT கொள்கை ஒப்பந்தத்தில் கையெழுத்து இட உடன்பட வைக்கும் வகையில் தடைகளை நீக்கியும் வரு கின்றன.

அமெரிக்க - ரசிய வல்லரசுகள் உலகில் பனி யுத்தம் நடத்திய போது பிராந்தியங்களில் வெளிப் படையான யுத்தம் நடந்தது. பாகிஸ்தான் - இந்தியா, வடகொரியா தென்கொரியா, ஈரான் - ஈராக் யுத்தத்தில் மட்டும் 80-88 காலப் பகுதியில் 10 இலட்சம் மக்கள் பலி கொள்ளப்பட்டனர். 91-இல் ஈராக் மீதான அய்நா சபை பெயரில் அமெரிக்காவும் பிரிட்டனும் தலைமை தாங்கி நடத்திய யுத்தம் வல்லரசு நாடுகளும், U.N., WB, IMF போன்றவை ஈராக் மீது 10 ஆண்டுகளாக நடத்தி வரும் 'தடை', ஈராக்கின் குழந்தைகள், பெண்கள் என அனைவரையும் அழித்து வருகி றது. ஆயுதப் பரிசோதனை நிர்ப்பந்தமும், வான்வெளித் தடையும் கூட அமுல்படுத்தப்படு கிறது. ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடும் கண்கா ணிப்பும் ''எண்ணெய்க்கு பதில் உணவு, மருந்து'' என்ற கொள்கை அரங்கேறி வருகிறது. நவகொ லனிய நாடுகளுக்கு இது மிகப் பெரிய முன்னெச் சரிக்கையாகவுள்ளது. ஈராக் கூறுவது போல் ''58

www.tamilarangam.net



மாபெரும் அனுபவங்கள்'' பற்றி நவகொலனிய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறது.

'கொசவோ' தேசிய இனத்தை காட்டி அமெரிக்கா மீஅகூநீ தலைமையில் நடத்திய வான்தாக்குதல் யுத்தம்' யூகோஸ்லாவியாவை அழித்திருக்கிறது தடைகள் தொடர்கின்றன; ஈராக், யூகோ மீது யுத்தம் நடத்திய வல்லரசு நாடுகள் உள்நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்பை செய்ய பல நூறு சதிகளை, எதிர்கட்சி மூலம் சூழ்ச்சிகளை செய்து வருகின்றன. கியூபாமேல் அமெரிக்க CIA இன் சதிகள் இன்று உலகம் முழுவதும் நடத்தப்படுகிறது. ஆப்கானில் ரசியாவுக்கு எதிராக, பெசாவரில் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்ட பின்லேடன் இன்று அமெரிக்காவுக்கு எதிராக திரும்பியுள்ளான்.

பின்லேடனை காட்டி அமெரிக்கா ஆப்கான் - சூடான் மீது நடத்திய ஏவு கணைத் தாக்குதல், பின்லேடனை வெளியேற்ற கோரியும், தலிபான் அரசை எதிர்த்தும் ஆப்கான் மீது தடைகள், ஆசியாவிலே அதிகளவான அகதிகளை உற்பத்தி செய்த ஆப்கான் யுத்தம் தொடர்கிறது; வடகொரிய, சீன ஏவுகனைத் திட்ட வளர்ச்சிக்கு எதிராக அமெரிக்க ஜப்பானிய தென்கொரிய கூட்டணிக் கொள்கை; வடகொரியா மீதான தடைகளால் வடகொரியாவை அடிபணிய வைத்து கொரிய நடுகள் நடத்திய பேச்சுவார்த்தை சோசலிசம் முதலாளித்துவ பாதைக்கு வந்துவிட்டது என்ற மெகா உலக பிரச்சாரம். ஆனால் தென்கொரியாவில் 36,000 அமெரிக்க துருப்புக்கள் நிலை கொண்டிருக்கின்றன. 1972 ஏவுகணை (ABM) ஒப்பந்தத்தை மீறி அமெரிக்கா மீஞூஈகு, மீஈஞூநீ திட்டத்தை உருவாக்கியுள்ளது. இதற்கு எதிராக ரசியா, சீனா இந்தியா ஒன்றுபட வேண்டும் என ரசியா முயல்கிறது.

ரசியப் பிரதமரின் வருகைக்கான முன்னேற்பாடாக இந்தியாவில் 95-ல் புரூலியா மீது ஆயுதங்களை போட்ட ரசிய விமான ஓட்டிகள் 5 பேரையும் இந்தியா விடுதலை செய்துள்ளது. அமெரிக்க சனாதிபதி வருகையின் முன்னேற்பாடாக காசுமீர் 'APHC' தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இந்தளவுக்கு தடைகள், நிர்பந்தங்கள், அழுத்தங்கள் ஊடுருவியுள்ளது. பிஜியிலும், சோலோமன் தீவுகளில் ஏற்பட்ட அரசியல் அதிகார நெருக்கடிகளுக்கு எதிராக ஒஸ்ரேலியா, நியூசிலாந்து, பிரிட்டன் பொதுநல வாய அமைப்பு இவற்றின் தடைகள் ஒரு பக்கம், இந்நாடுகளிலுள்ள தங்கள் நாட்டவர்களை காட்டி நேரடியாக தலையீடுவதும் மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளும் நடந்தன. இந்தியரசு கூட பிஜி மீதான தடை, வெளியேற்றம் பற்றி வெளிப்படையாக பேசியது. சியாரா லியோனில் கீக்ஊ இன் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து தங்கம் ஏற்றுமதி செய்யப்படுவதை அய்நா சபை தடை செய்தது; நாடுகள் மீது மட்டுமல்ல போராடும் இயக்கங்களின் கட்டுப்பாட்டு பகுதி மீதும் உள்நாட்டு அரசும், உலக நாடுகளும் தடைபோட்டு பணிய வைக்க முயல்கின்றன. சோலோமன் தீவில் MEF, IFM மீது கூட நிர்பந்தங்கள் அதிகரித்துள்ளன. பாலஸ்தீன - இஸ்ரேலிய 15 நாள் சமாதான பேச்சுவார்த்தையில் CAMP DAVID ல் அமெரிக்கா இரண்டு தரப்பையும் நிர்ப்பந்தித்தது. இஸ்ரேல் சீனாவுக்கு விற்பனை செய்ய ஒப்புக் கொண்ட 250 பில்லியன் டொலர் பாதுகாப்பு துறை உயர் தொழில்நுட்ப சாதன விற்பனையை வெளிப்படையாக நிறுத்தியது. பாலஸ்தீனம் தன்னிச்சையாக 'தனி அரசு' அறிவித்தால் 30 பில்லியன் டொலர் பாலஸ்தீன அகதிகளுக்கான அமெரிக்க உதவி நிறுத்தப்படும் என அறிவித்தது அமெரிக்கா. அமெரிக்க நிர்ப்பந்தங்களுக்கு இரண்டு தரப்பும் அடிபணிந்தன. ஆனால் சமாதான ஒப்பந்தம் மட்டும் ஏற்படவில்லை, பேச்சுவார்த்தை தொடரும் என்ற அறிவிப்புடன் பேச்சுவார்த்தை முடிந்தது.

வல்லரசு நாடுகளும், நவகொலனிய நாடுகளும் தங்களுக்கு இடையில் தொடர்ந்து மோதிக் கொண்டிருக்கின்றன. தங்களின் பொருளாதார சுரண்டலுக்கும், அரசியல் ஆதிக்கத்துக்கும் போட்டிக்குமாக தொடர்ந்து அமைதியான வழியிலும், யுத்தங்கள் மூலமும் போரிடுகின்றன. நவகொலனி கட்டம் என்பது வல்லரசியங்கள் நிரந்த சமரசம், சமாதானம் செய்து கொண்ட, முரண்பாடுகள் போட்டிகள் தீர்ந்து விட்ட கட்டமல்ல. மிக மிக சாதுரியமான முறையில் நவகொலனிய நாடுகளையும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைத்துக் கொண்டு, சவர்தேச நிறுவனங்கள், பிராந்திய நிறுவனங்கள் மூலம் தங்களை தகவமைத்துக் கொண்டு என்றுமில்லாத வகையில் வல்லரசியம் முட்டி மோதிக் கொண்டிருக்கின்ற கட்டம், மூன்றாவது உலக யுத்தம் ஒன்றை நோக்கி நடைபோட்டு வருகின்ற கட்டம். தங்களுக்கு இடையிலான போட்டியில் மோதலில் யுத்தத்தில் ஒன்றை

www.tamilarangam.net



ஒன்று பயன்படுத்துகிறது. ஆனால் வல்லரசிய எதிர்ப்பு கொண்ட, வல்லரசிய உலக ஒழுங்கை மீறும் மக்கள் போராட்டங்கள் என வரும் போது எல்லா எதிரிகளும் வல்லரசு நாடுகளும் நவகொலனிய அரசுகளும் ஒன்று சேர்கின்றன. அய்நா சபை (U.N.) இதற்கான தலைமைப் பொறுப்பை எடுக்கிறது. 1948 முதல் (U.N.) பல உள்நாட்டு யுத்தங்களில், எல்லை யுத்தங்களில் நேரடியாக ஈடுபட்டுள்ளது. லெபனானில் இருந்து இஸ்ரேல் பின்வாங்க அய்நா படை அந்த இடத்தை நிரப்பு கிறது. இதுதான் வல்லரசியத் தந்திரம் சோமாலியாவில், அங்கோலாவில் பெருந்தோல்விப் பாடங்களை கற்றது அய்நா சமாதான படை. சியாராலியோனில் பணயக் கைதிகளாக பிடிக்கப் பட்ட அய்நா படையை 3 மாதங்களின் பின், திடீர்த் தாக்குதல் நடத்தி மீட்டுள்ளது. இந்தியா அய்நா படையின் 30 நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அய்நா சபையின் தவறு தோல்விகள் பற்றி ஆராய ஒரு ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் இருந்து 1993-ல் பிரிந்து தனியரசான எரித்திரியா இரண்டு நாடுகளுக்கு இடையிலும் எல்லை யுத்தம். அமெரிக்கா உட்பட வல்லரசுகள் இரண்டு நாட்டுக்கும் ஆயுத ஏற்றுமதி தடையை விதித்தன. ஆபிரிக்க நாடுகளின் பாதுகாப்பு ஒன்றியம் அல்ஜீரியாவில் வைத்து பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்தது. புருண்டி, கொங்கோ, ரூவாண்டா அல்ஜீரியாவில் உள்நாட்டு யுத்தங்கள், எல்லை யுத்தங்கள். நெல்சல் மண்டேலா வல்லரசுகளின் உலக நிறுவனங்களின் மதிப்புமிக்க நடுவராக பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகிறார். யாசீர் அரபாத் ஆசிய நாடுகளில் இத்தகைய முயற்சிகளில் இறங்கியதும் கவனிக்கத்தக்கது. குறிப்பாக, தமிழீழப் பிரச்சனையில் நடுநிலை வகிக்க வந்தார். ஆனால் பாலஸ்தீனம் கொந்தளிக்கிறது. திக்குமுக்காடுகிறார்.

உலகளவில் தேசிய இன சுதந்திரத்துக்காக, மக்களின் சமூக பொருளாதார பண் பாட்டு விடுதலைக்காக போராடும் மக்கள், இயக்கங்கள் மேல், அந்நாட்டு அரசுகளும் வல்லரசு நாடுகளும் பிராந்திய - சர்வதேச நிறுவனங்களும் ஒடுக்குமுறை யுத்தத்தையும் தடையையும் விதிக்கின்றன. நவகொலனிய நாடுகள் மீது வல்லரசு நாடுகளும் உலக நிறுவனங்களும் தடையை ஆக்கிரமிப்பு யுத்தத்தை, நிறுவன வெளியேற்றத்தை மேற்கொள்கின்றன. இத்தகைய யுத்தம், தடை, வெளியேற்றம் இவற்றின் நெருக்குதல்களை காரணம் காட்டி தேசிய இன விடுதலைப் போராட்ட இயக்கங்கள் சில உள்நாட்டு அரசு எதிர்ப்பு நிலைப்பாட்டுடன் தங்களை நிறுத்திக் கொள்கின்றன. பிராந்திய விரிவாதிக்க எதிர்ப்பு, ஒட்டுமொத்த வல்லரசு எதிர்ப்பு என்ற நிலைப் பாட்டை முன் வைக்க மறுக்கின்றன. பிராந்திய சர்வதேச நாடுகளுக்கு இடையிலான முரண் பாட்டை பயன்படுத்துவது என்ற பெயரில் ஒன்றில் அண்டை நாடுகளின் அல்லது வல்லரசு நாடுகளின் கைக் கருவிகளாக மாறிப் போகின்றன; அவ்வாறு ஒரு அன்னிய நாட்டு சார்பு இயக்கங்களாக சில மாறுகின்றன; அல்லது நடந்து வரும் சர்வதேச மாற்றங்களுக்குட்பட்டு உள்நாட்டில் நேரடியாக இராணுவ ரீதியில் தலையீடும் நாடுகளை எதிர்ப்பது என்ற நிலைப் பாட்டில் அதற்கு எதிரான எல்லா அன்னிய நாடுகளையும் உரிய காலத்தில் பயன்படுத்தும் இயக்கங்களும் உள்ளன. இவ்வியக்கங்கள் எல்லாம் இறுதியில் வல்லரசிய உலக முறைக்கு உட்பட்டு இயங்குகின்றன. நவகொலனிய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை, நவகொலனிய அரசுக்கும் - வல்லரசுகளுக்கும் இடையிலான முரண்பாட்டை, வல்லரசு நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டை, இம்முரண்பாடுகளில் அவ்வவ் அரசுகள் இயக்கும் அரசியல், இராணுவ, பொருளாதார, சமாதான, மனிதவுரிமை, ''நிறுவன அழுத்தக்குழு'' கொள்கைகளுக்கு உதவிகளுக்கு மேற்கண்ட இயக்கங்கள் பலியாகின்றன. அல்லது நேரடியாக அரசுகளின் தலையீட்டுக் கொள்கைக்கு உதவிகளுக்கு பலியாகின்றன. இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான்; மறுபக்கம் அன்னிய நாடுகள் தேசிய இன விடுதலை இயக்கங்களை பயன்படுத்துவதை பார்த்து அத்தேசிய இன மக்களின் அரசியல் உரிமைகளை நிராகரிக்கும் போக்கும் வெளிப் படுகிறது. இவர்கள் போராட்ட பகுதி மக்களிடம் இருந்தே எல்லாவகையிலும் அன்னியப்பட்டு வருகின்றனர்.

தமிழீழ மக்களின் உள்நாட்டுப் பலத்தில், வளத்தில் தங்கி நின்று, அதை வளர்க்கும் போராட்டத்துடாக தேசிய விடுதலைப் போராட்டம் வளர வேண்டும். எந்த அன்னியப்

www.tamilarangam.net



படையும் உள்ளே நுழைவதை அனுமதிக்காத முன்னோக்கிய அரசியல் தயாரிப்பு அடிப்படை யானது.

பூமாலை போட்டு வரவேற்றுவிட்டு, பின் யுத்தம் புரியும் அரசியல் மாறவேண்டும். சிறீ லங்கா அரசின் தடைகளை, ஒடுக்குமுறைகளை தாண்டி மக்கள் போராட்டம் முன்னேறும் போது அன்னியப் படைகள் அத்துமீறி நுழைந் தால், அன்னியத் தடைகள் வந்தால் எதிர் கொள்வதற் கான பொருளாதார, இராணுவ சுயசார்புக் கொள்கையில் தயாரிப்பில் தெளிவாக இருக்க வேண்டும். தமிழீழ தேசிய சுதந்திரம், தமிழீழ மக்களின் சமூக விடுதலை புதிய சனநாயகப் புரட்சி வெற்றி பெற இது நிபந்தனையானது. நீடித்த யுத்தம், தடை, அன்னிய ஆக்கிரமிப்பு இவற்றுக்கு அஞ்சி, ராஜதந்திரம் என்ற பெயரில் எதிரிகளுடன், முதலாளித்துவ சமூக அமைப் புடன் கொள்கைச் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. இதுவரைகால ஒடுக்கமுறை யுத்தம், தடை இவற்றுக்கு எதிராகப் போராடிய போராளி களுக்கும், பலியான மக்களுக்கும் துரோகம் செய்யக் கூடாது. அரசியல் இராணுவ பொருளா தார பண்பாட்டு அம்சங்கள் அனைத்திலும் நீண்ட கால மக்கள் யுத்தத்தின் தெளிவை உறுதியை பெற வேண்டிய கால கட்டம் இது. இராணுவத் துறையில் மட்டும் நீண்டகால மக்கள் யுத்தம் பற்றிப் பார்க்கக் கூடாது. கிராமமே உலகமாகி வரும் சூழ்நிலைமையில் உலகமயமான பொரு ளாதார, அரசியல், பண்பாட்டு, சங்கிலியில் ஒவ்வொரு நாடும் இறுக்கமாக இணைக்கப்பட்டு வருகையில் உள்நாட்டு அரசுகளின், வல்லரசு களின் அணுகுண்டு, ஏவுகணை யுத்த வெறியை, தடைபோட்டு பணிய வைக்கும் சதியை, உலக எதிரியை, தோற்கடிப்பதற்கான ஒரே பாதை நீண்டகால மக்கள் யுத்தப் பாதைதான், மக்கள் யுத்த முறைதான் ஒரே வழி.

— தமிழரசன்

# ‘சிறெல உறுமய’ கட்சியின் ஓ.ங.க.-இன் அரசியல் நவீன சிங்களத் தேசிய வாதமா? நவீன சிங்கள பௌத்த தேசிய வெறியா?

1995-இல் உருவான ‘‘சிங்கள வீர விதான’’, 1997-இல் தோன்றி ‘‘பயங் கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம்’’ (NMAT) 1998-இல் தேசிய செயற் திட்டம் (NPAT), மற்றும் ‘‘தேசிய சங்க சபை’’ இம்மூன்று அமைப்புக்களின் கருத்தியல், செயற் பாட்டு ஒன்றிணைப்பக 2000 May-இல் ‘‘சிறெல உறுமய’’ (சிங்களக் கட்சி) நேரடியாக வெளிப்படையாக அரசியல் கட்சியாக வெளி வந்துள்ளது, ‘சிறெல உறுமய’வின் தேசிய அமைப்பாளர். ஓங்கஇன் முன்னாள் முக்கிய நப ரான சம்பிக்க ரணவக்க, கட்சித் தலைவர் 1985 திம்பு பேச்சு வார்த்தையில் UNP சார்பாக கலந்து கொண்டவரும், சனாதிபதி சட்டத் தரணியுமான எஸ்.எல். குணசேகரா (தீர்வுப் பொதியும் எமனின் பொதியும் என்ற நூலை எழுதியுள்ளார்). கட்சி உப தலைவர். மேயர் ஜெனரல் திலக்விரணகம, கட்சி செயலாளர் திலக்கருணரத்ன.

வேறு சில சிங்கள அமைப்புக்களும் ‘சிறெல உறுமய’ கட்சியுடன் இணைந்துள்ளன. அல்லது நெருங்கிய தொடர்பு வைத்துள்ளன. ‘‘சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய’, ‘‘ஜாதிக்கசித னய’’, ‘‘எக்சத்பிக்கு பெரமுன’’, ‘‘மகாசங்கம்’’, ‘‘தேசப் பிரேமி பிக்கு பெரமுன!

இவ்ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பயங்கரவாத ஒழிப்பு தேசிய இயக்க கோரிக்கை என சிங்கள வீரவிதான, தேசிய மகா சங்கம். பயங்கரவாத எதிர்ப்பு தேசிய இயக்கம் தேசிய ஒருங்கிணைப்பு குழு 7 முடிவுகளை வெளியிட்டன. அவற்றில் முக்கியமான மூன்று முடிவுகள் என சம்மிக்க ரண

www.tamilarangam.net



வக்க தெரிவிப்பது.

1. அரசு போர் நிறுத்தத்தை ஒரு கட்டத்தில் செய்தால் அதனை ஏற்க்க வேண்டாம் என படை யினருக்கு கட்டளையிடுவது.

2. அரசாங்கம் பாராளுமன்றத்துக்கோ, நீதி மன்றத்துக்கு கட்டுப்படாமல், சனாதிபதி வேறு வழிமுறைகளில் அரசியல் யாப்பை முன்வைத்து மாற்றி நடைமுறைப்படுத்த முயன்றால், 'மகா சங்கம் மூலம்' கட்டளை பிறபித்து தலதா மாளி கையில் மகா சங்கத்தை கூட்டி அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கி நடைமுறைக்கு கொண்டு வருவது.

3. அரசியல் முரண்பாடுகளை மறந்து நாட்டை யுத்த தயாரிப்புடன் எந்நேரமும் தயாராக வைத்துக் கொள்வது, முன்னாளில் அரசாட்சி என்பது ''அரசு, மகாசங்கம், மக்கள்'' என்ற திரிபீடக முறையில் காணப்பட்டது. இனியும் அந்த முறை தேவைப்படுகிறது.

மூன்று நிகாயவின், மகாநாயக்கர்களும், ஏனைய அமைப்புக்களும் இந்த முக்கிய முடிவு களை எடுத்தது. அவர்களின் அரசியல் பொறுப்பை காட்டுகிறது என்றார்.

இந்த இன, மதவாத அமைப்புக்கள், கட்சிகள் தமிழீழ மக்களின் போராட்டத்தை தமிழ் இன வாதப் போராட்டம், புலிகளின் போர், பயங்கர வாதம் என பிரகடனப்படுத்துகின்றனர். தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க, அவர்களின் சுநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். தமிழர்களின் வடக்கு, கிழக்கு பாரம்பரிய பிரதேசத்தை தமிழர்களே அரசு அமைத்து தங்களைத் தாங்கள் ஆள்வதை எதிர்ப்பதுடன் முழு நாட்டையும் சிங்களவர்க ளையும் புலிகள் ஆள முயல்வதாக பிரச்சாரம் செய்து, சிங்கள மக்களை பயமுறுத்துகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக யுத்தத்தை நிறுத்தி அர சியல் தீர்வு காண்பதை எதிர்ப்பதுடன் பொதுசன முன்னணி அரசு, முன்வைக்கின்ற அதிகாரப் பரவல் திட்டத்தையும், SLFP, UNP கட்சிகள் ஏற்றுக் கொள்கின்ற குறைந்தபட்ச அரசியல் யாப்புச் சீர்தி ருத்தத்தையும் கூட எதிர்க்கின்றன. நாடு பிளவு பட்டு விடும். பிரித்து கொடுப்பதாக மாறிவிடும் என சிங்கள மக்களை ஏமாற்றுகின்றன. இனப்பி ரச்சனையை, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஒரு அரசியல் தீர்வுப் பொதியை, அதற்கான அ முத்தங்களை கொடுக்கும் உலக நாடுகள் மீது தீவிர எதிர்ப்புப் பிரச்சாரம் ஆர்ப்பாட்ட நடவடிக் கைகளை மேற் கொள்கின்றன.

சந்திரிகா அரசு பாராளுமன்றத்தில் முன்வைத்து விவாதிக்க முன்வந்த ஒரு ''மோசடி யான அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை'' கூட எதிர்த்து இன, மத வெறியை தூண்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தின. நோர்வே நாடு புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் மூன்றா வது தரப்பாக செயற்பட வந்ததை எதிர்த்து கொடி எரிப்பு முதல், தூதரக குண்டு வீச்சு வரை வெளிப்படுத்தின; திடீர் ஆயுத எழுச்சி இயக்க மான, இடதுசாரி என்று அழைக்கப்படுகின்ற JVP கூட இந்த இன மத வெறிப் பாதையில் ஊன்றி நிற்கிறது என்பதை அண்மைய சம்பவங்கள் ஒஙகஇன் ஆர்ப்பாட்டங்கள் தெளிவாக காட்டி இருக்கிறது.

'சிறெல உறுமய' கட்சி நவீன சிங்கள இனத்தை, நவீன சிங்களத் தேசியத்தை கட்டிய மைத்து வருவதாக கூறுகிறது. JVP கூட இந்த சிங்களத் தேசியத்தில் கொடி கட்டிப் பறக்கிறது. சிறீலங்காவில் நவீன சிங்களத் தேசியம் வளர்ந்து வருவதாக இந்த இன, மத வெறியர்கள் மட்டு மல்ல. சிறீலங்காவில் உள்ள புத்திஜீவிகளில் ஒரு பிரிவு கூட வெளிப்படுத்தி வருகிறது. ''நவீன சிங்களத் தேசியவாதம் நவீன தேசிய வாதம்'' என எழுதி நவீன தேசிய வாதத்துக்கும்'', ''நவீன தேசிய இன மத வெறிக்கும்'' உள்ள வேறு பாட்டை மறைத்து வருகின்றனர். தமிழீழ தேசிய வாதத்துக்கும், சிங்களத் தேசிய இனமத வெறிக்கும் இடையில் முடிச்சு போடுகின்றனர், சமப்படுத்த முயல்கின்றனர்.

உண்மையில் சிங்கள மக்களின், சிறீலங் காவின் தேசிய வாதம், சிறீலங்கா அரசுக்கும் ஆளும் வர்க்கத்துக்கும், ஏகாதிபத்தியங்க ளுக்கும், பிராந்திய விரிவாதிக்கத்துக்கும் எதி ராக முன்னிறுத்தப்பட வேண்டியது, சிங்கள மக்களை சிறீலங்காவில் உள்ள தமிழ், முசுலீம் மக்களை சிறீலங்கா தேசிய வாதத்தின் கீழ் அணி திரட்டப்படுவதற்கு பதிலாக சிங்கள மக்களை மட்டும் அதுவும் பௌத்த சிங்களவர்களை மட்டும் அணிதிரட்டி, தமிழ், முசுலீம் மக்களுக்கு எதிராக நிறுத்தும், தனிச் சிங்கள பௌத்த தேசிய வாதம் என்பது, ஆட்சியை கைப்பற்றுவதற்கான சிங்கள பௌத்த இன மதவெறி தேசிய வாமே யாகும், ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாத, முதலா ளித்துவ நிலவுடமை ஆளும் வர்க்க எதிர்ப்பு அற்ற தேசிய வாதத்தின் இறுதி இலக்கு தேசிய வெறியாகும். குறிப்பான சூழ்நிலைமைகள் வர லாற்று பின்னணிகளை பொறுத்து இந்தப்

www.tamilarangam.net



பிற்போக்கு தேசியவாதம் மதவெறியை இன மொழி வெறியை, பிரதேச வெறியை சாதி வெறியை தனது தேசிய வாதத்தின் உயிராக வெளிப்படுத்துகிறது. தொழிலாளி வர்க்க புரட்சிகர தேசிய வாதம், தேசபக்த போராட்டம் இதற்கு நேர் எதிரானது. மதங்களை, இனங்களை, சாதிகளை, மொழியை பிரதேசங்களை சமப்படுத்தி பார்க்கிறது. இத்தகைய சமத்துவத்தை குலைக்கின்ற, ஆதிக்கம் செய்கின்ற ஆக்கிரமிப்பு நடத்துகின்ற முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கத்தை (தனது சொந்த தேசிய இனம் என்றாலும்) அரசை, அன்னிய நாட்டு சதிகளை, ஏகாதிபத்தியங்களை எதிர்த்து போராடுகிறது தேசியத்தையும் சர்வ தேசியத்தைம் முரண்பாடு இன்றி சமப்படுத்தி இணைக்கிறது. ஆனால் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கை நவகொலனியத்தின் உட்கொலனியக் கொள்கையானது, நாடுகளை நவீன தேசங்களை மக்களை சுரண்டி அடக்கி, ஆக்கிரமித்து தேசிய வெறியை நிலைநாட்டிக் கொள்கிறது.

சிறெல உறுமயக் கட்சிம், சிங்கள பௌத்த ஆதிக்க சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள J.V.P. போன்ற கட்சிகளும் அமைப்புகளும் நவீன தேசியத்தை, சிங்களத் தேசியத்தை உருவாக்கவில்லை. நவீன சிங்கள பௌத்த தேசிய வெறி கொண்ட கருத்தியலை இயக்கத்தை கட்டியமைத்து வருகிறார்கள், இந்த நவீன தேசிய வெறியை நவீன தேசிய வாதமாக (சிறீலங்கா, தமிழீழம்) எந்த தேசக்பத சனநாயக சக்திகளும் புரிந்து கொள்வோ, மறுவாசிப்பு - மறுபதிப்பு செய்ய முயலக் கூடாது. நவீன தேசிய வெறியை அம்பலப்படுத்த வேண்டும். புரட்சிகர சிறீலங்கா தேசிய வாதத்ததை முன்னிறுத்த வேண்டும்.

## தேசிய வாதத்தின் பெயரில் மொழி, இன, மதத் தேசிய வெறி

கொலனிய ஆட்சிக் காலத்தில் 'அநகாரிக தர்மபால' தொடக்கி வைத்த சிங்கள பௌத்த தேசிய வாதம். இன்று அதன் அடிப்படைச் சித்தாந்தத்தினை மேலும் வளர்த்தெடுக்கப்பட்டு நவீன சிங்கள தேசிய வாதமாக வெளிவருகிறது. சிங்கள தேசிய வாதத்தின் (தேசிய வெறித் தத்துவத்தின்) தந்தை அநகாரிக தர்மபால ஆகும். தர்மபால முன்னிறுத்திய தேசியத்தின் அடிப்படை என்பதே கொலனிய ஏகாதிபத்திய எதிர்ப்பற்றது; அன்று வளர்ந்து வந்த சிங்கள வணிக முதலாளிகளின் நலனின் இருந்து வெளிப்பட்டது. அன்று சிங்கள முதலாளிகளின் வளர்ச்சிக்கு தடையாக போட்டியாக இருந்தவர்கள் இந்திய - பாகிஸ்தானிய வர்த்தர்களும், முசுலீம் வணிகர்களும். இதனால்தான் கொலனிய காலத்திலேயே முசுலீம்களுக்கு எதிரான கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்திய எதிர்ப்பும் அவ்வப்போது JVP உட்பட இன்றுவரை ஆளும் வர்க்க பிரிவுக்குள் கூட வெளிப்படுகிறது. சிங்கள முதலாளி வர்க்கம் முன்னிறுத்திய தேசியம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாததாகவும், உள்நாட்டு முசுலீம், தமிழ் முதலாளிகளுடனான எதிர்ப்பின் மேலும் கட்டியமைக்கப்பட்டது. இதனால்தான் அநகாரிக தர்மபாலவின் தேசிய தத்துவ அடிப்படை மூன்று முக்கிய கூறுகளை மையப்படுத்தியது.

அ. சிங்களவர்கள் ஆரியர்கள், இனக் கலப்பற்றவ்கள், தூய்மையானவர்கள் தமிழர்கள் திராவிட இன வழி வந்தவர்கள் என்பது.

ஆ. சிங்களவர்களின் தோற்றத்தை விஜயனின் வருகையுடன் இணைத்து பொருத்துவது.

இ. சிங்களவருக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவை வளர்ப்பது. பௌத்தத்தை சிங்களவர்கள் மட்டுமே காப்பாற்ற முடியும் என்பதும், பௌத்தர் அல்லாத சிங்களவரை பிறத்தியார் என அணுகுவதும்.

அன்று கிறிஸ்தவ தேவலாய எதிர்ப்பை முன்னிறுத்திய தர்மபால - ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னிறுத்தவில்லை. சிங்களவர்களின் பொற்காலத்தை அய்ரோப்பியர்கள், முசுலீம்கள், இந்தியர்கள் அழித்தார்கள் எனக் கூறினாலும் முசுலீம்களும் இந்தியர்களுமே குறி இலக்காக முன்னிறுத்தப்பட்டனர். இலங்கைத் தீவில் சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர் முசுலீம்களும், தமிழர்களும் வந்து குடியேறியவர்கள் என்ற கருத்தியலை திடமாக முன்வத்தது. மலையகத் தமிழர்களின் வருகையை காட்டி பாராம்பரியமாக வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு தமிழர்களையும் வந்தேறிகள் என ஜனரஞ்சக அரசியலாக்கினர்.

இன்னொரு இனவாத தத்துவ வாதியான ஆரிய குணசேகரவின் கருத்தியலில்.

தமிழர்கள் - தோட்டங்களில் வேலை செய்ய வந்தவர்கள்.

- வீதிகளை சுத்தம் செய்ய வந்தவர்கள்.

www.tamilarangam.net



- மனிதக் கழிவுகளை சுத்தம் செய்ய வந்தவர்கள் கொலனிய வாதிகளால் இறக்குமதி செய்யப்பட்ட கூலி வழித் தோன்றல் கள் தமிழர்கள். இதனால் இலங்கையில் தமிழர்களுக்கு பாரம்பரிய பூமி கிடையாது என்கிறார். 2500 ஆண்டு இலங்கை வரலாறு என்பதே சிங்களவர் ஆட்சி செய்த ஒற்றையாட்சி வரலாறு என்கிறார்.

சிங்களத் தேசியக் கருத்தாக்கம் இந்த அடிப்படையிலேயே வளர்க்கப்பட்டது. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிகளும், சிங்கள தேசிய வெறிக் கருத்தாக்கத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஊக்குவித்தது.

1910 ஆண்டில் செல்வந்தவர்களுக்கும், படித்தவர்களுக்கும் மட்டும் வழங்கிய வாக்குரிமை முறையானது மொத்தசனத் தொகையில் 11% ஆக இருந்த தமிழர்களுக்கு 42% ஆன வாக்குரிமையை வழங்கியது. கொலனிய ஆட்சியில் இருந்து அதிகார மாற்றம் பெற்ற நவகொலனிய இலங்கையில் முதல் பாராளுமன்றமே படிப்பறிவு இல்லாத ஏழை மலையகத் தமிழர்களின் வாக்குரிமையை குடியுரிமையை பறித்தது கவனிக்கத் தக்கது; கொலனிய காலத்தில் தேசியத்தை முன்தள்ளிய சிங்கள முதலாளித்துவ தலைமை அதிகார மாற்றத்துடன் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு பதில் பல ஏகாதிபத்தியங்களுடன் தன்னை கூட்டிணைத்துக் கொண்டது. ஆனால், சிங்கள பௌத்த சித்தாந்த அடிப்படையை, தேசிய வெறியை அரசு அதிகாரத்தின் துணை மூலம் தமிழ், முசுலீம் சிறுபான்மை இனங்கள் மீது கட்டவிழ்த்து விட்டு வந்தது. ஆளும் வர்க்கங்கள் தங்களின் ஏகாதிபத்திய கூட்டுக் கொள்கையை சுரண்டலை மறைக்கவும், அரசு அதிகாரத்தை நிலைநிறுத்தவும் சிவில் சமூகத்தில் இன, மத ஆதிக்க பெருமிதக் கோட்பாடுகளை திட்டமிட்டு பிரச்சாரப்படுத்தி வந்தன. இதையே தேசிய வாதமாகவும், தேசியக் கலாச்சாரமாகவும் முன்னிறுத்தின. அன்றைய உலக நிலைமைக்கு, தகுந்த முறையில் SLFP கொண்டு வந்த தேசிய மயமாக்கல் பொருளாதாரக் கொள்கையும் இதற்கு பலம் சேர்த்தது. அதேவேளை சிறுபான்மை மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையும் சமகாலத்தில் அமுல்படுத்தி வந்தது அரசு. 1927-இல் சமஷ்டி அமைப்புகளை பற்றி முன் மொழிந்த S.W.R.D. 1956-இல் தனிச்சிங்களச் சட்டத்தை கொண்டு வந்தார். இலங்கை ஒரு பல் இன, பல் கலாச்சார நாடு என்பதை மறுக்கும் தத்துவ பிரச்சாரத்தை இனவாதப் பேராசிரியர் தென்னக்கோன் விமலானந்த போன்றவர்கள் முன்னின்று நடத்தினர்.

J.V.P. போன்ற சோசலிசம் பற்றி பேசிய ஆயுத எழுச்சிச் சிங்கள தீவிர இயக்கங்கள் கூட சிங்கள பௌத்த சித்தாந்தத்தின் தேசிய வெறிக் கொள்கையின் அடிப்படையை விட்டு வெளியே வரவில்லை; 70-களில் J.V.P.-இன் கொள்கைப் பிரச்சாரத்தில் மலையகத் தமிழ் மக்களை இந்திய அரசின் கையாட்களாக, விரிவாதிக்க ஊக்கிகளாக பார்த்தது. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மாகாண அதிகார பரவல் திட்டத்தைக் கூட எதிர்த்து ''தாய்நாட்டை பாதுகாப்போம்'' என்ற சுலோகத்துடன் ஆயுதக் கிளர்ச்சியை தொடக்கினர். 2000-இல் சந்திரிகா அரசு முன்வைத்த பிராந்திய அதிகாரப் பரவல் திட்டத்தையும் முழு மூச்சாக சிங்கள இன, மதவெறி அமைப்புக்கள் போல் எதிர்த்து வருகிறார்கள். J.V.P. சோசலிசப் புரட்சிக்காக சிங்களத் தேசிய வாதத்தை (தேசிய வெறியை) பயன்படுத்தியதாக ஒரு ஏமாற்றுப் பிரச்சாரமும் மேற்கொள்ளப்படுகிறது; தேசிய வாதத்தை எந்தப் புரட்சிகர சுலோகத்தின் முன் பயன்படுத்துகிறார்கள் என்பதல்ல பிரச்சனை. மற்றைய தேசிய இனங்களின், சிறுபான்மை மக்களின் அரசியல் அதிகார உரிமைகளை அங்கீகரிக்கிறார்களா இல்லையா என்பதும், மனித சமூக வளர்ச்சியை முன்நோக்கி தள்ளுகிறார்களா இல்லையா என்பதே மையமான பிரச்சனை.

நளின் டி சில்வா போன்ற தீவிர மார்க்ஸிய கட்சி அரசியல் பீட உறுப்பினர்கள் கூட இன்று மார்க்ஸிய அரசியலை விமர்சிப்பதுடன் முதலாளித்துவமும் வேண்டாம். சோசலிசமும் வேண்டாம் சிங்கள பௌத்த அடிப்படை தத்துவத்தை முன்னிறுத்தி நவீன தேசிய வெறிக் கருத்தியலை முன்தள்ளுகின்றனர். சிங்களத் தேசிய வாதத்தை மீளொழுங்கு செய்த தத்துவத் தலைவர்களில் நளின்.டி.சில்வா ஒருவர். மற்றவர் L.S.S.P. ட்ரொஸ்கிய கட்சியின் முன்னாள் மத்திய குழு உறுப்பினரான குணதாச அமரசேகர இவர்களே நவீன சிங்கள தேசியத்தின் (நவீன சிங்கள பௌத்த தேசி வெறியின்) சித்தாந்த தலைவர்கள். குணதாச அமரசேகர ''அநகாரிக தர்மபால ஒரு மார்க்ஸ்ட்டா'' என்ற கட்டுரை மூலம் தர்மபாலவின் சிங்கள பௌத்த தேசிய வெறி சித்தாந்தத்தை புதிய கட்டத்துக்கு வளர்த்து நவீன சிங்கள தேசிய வெறிக் கருத்தியலை படைத்துள்ளார்.

சிங்களவர்கள் பௌத்த சிங்களவர்கள்

www.tamilarangam.net



என்றும், நாட்டின் உண்மையான மக்கள் அவர்களே எனவும், ஏனைய எல்லாரும் இரண்டாம் தர பிரஜைகள், இதை ஏற்காதவர்கள் இனத்துரோகிகள், சம அந்தஸ்து கோருகின்ற தமிழர்கள் இனவாதிகள் என்கின்றனர்.

1970 - 80-க்கு இடைப்பட்ட காலத்தில் மலையக மக்களின் பிரஜாவுரிமைக்கு எதிராக பிரச்சாரம், அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டவரும், 1977, 79, 81, 83 தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளில் நேரடியாக பங்கு பற்றிய, சிங்களத் தேசிய வெறியை முன்னிறுத்திய களுவட்டவாகே சிறில் மத்தியூ இன் 1976-இன் வாக்குமூலம் ''சிங்கள மக்கள் முன்னால் உள்ள ஒரே ஒரு தீர்வு இதுதான், சிங்களவர்களுக்கு எதிரான சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த சமஷ்டிவாதிகளையும், மலைநாட்டு தமிழர்களையும் நேரடியாக மனப்பூர்வமாக எதிர்க்கும் கட்சி எது என அறிந்து அதன் கீழ் அணி திரள்வதுதான்.''

இன்று எதார்த்தத்தில் 'சிறெல உறுமுய' கட்சி இந்த சிங்கள ஆதிக்க வெறியைத்தான் நவீன சிங்கள இனக் கட்டமைப்பு, நவீன தேசியம் என்ற பெயரில் முன்னிறுத்துகிறது. அநகாரிக தர்மபால காலத்தில் இருந்து இன்றுவரை சிங்களத் தேசியம் பௌத்த மத வாதத்தை தன்னுடன் கோட்பாட்டு ரீதியாக இணைத்து வெளிப்படுத்துவதால் சிங்களபௌத்த தேசிய வெறியின் (சிங்கள தேசிய வாதத்தின்) ஆன்மீகத் தலைவர்களாக பிக்குகள் இருந்து வருகிறார்கள். மாதுலுவாவே சோபித, பெனகமுவே நாலக்க நவீன தேசிய வெறியின் பிரதான பிரச்சாரர்களாக இருக்கிறார்கள். சிறீலங்காவின் புதிய பிரதமர் விக்கிரமநாயக்க மல்வத்த, அஸ்கிரிய பௌத்த பீடங்களுக்கு சென்றதுடன், தீர்வுப் பொதி பற்றி 'பௌத்தமகா' சங்கத்துடன் பேசப்படும் என்றார். சந்திரிகாவின் சனநாயகமும், புலிகளின் பயங்கர வாதமும் கைகோர்த்துச் செல்ல முடியாது. தமிழ் பயங்கர வாதத்தை யுத்தம் மூலமே அழிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

1976-இல் தமிழரசுக் கட்சி, தமிழ்க் கொங்கிரஸ், இலங்கை தோட்டத் தொழிலாளர் கொங்கிரஸ் இணைந்து வட்டுக் கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) உருவானதை, தமிழீழக் கோரிக்கையுடன் தமிழ்த் தேசியவாதம் வெளிவந்ததை சிலர் 'சிறெல உறுமய' கட்சியின் தோற்றத்துடன் ஒப்பிடுகின்றவர். 80-களின் ஆயுதம் தாங்கிய தமிழீழத் தேசியவாதம் தமிழ் அரசியலின் மேலாண்மைக்கு வந்ததையும், நவீன சிங்கள தேசியத்தையும் ஒப்பிடுகின்றனர். புலிகளின் தேசிய வாத யுத்தம் (தேசிய விடுதலை யுத்தம் என்பதை ஏற்பது இல்லை) சிறீலங்காவில் சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள எதிர்விளைவு நவீன தேசிய வாதம் என்கின்றனர்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை இன அழிப்பு, சமூக வாழ்வில் இனப்பாரபட்சம் இவற்றை எதிர்த்து பாராளுமன்றத்திலும், அமைதியான வழிமுறைகளிலும் தமிழ்த் தரப்பு போராடி வந்தது. சிறீலங்கா அரசும், ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும், இன மத அமைப்புகளும் அமைதி வழியான சனநாயகக் கோரிக்கைகளை ஏற்க்க மறுத்தன. பதிலாக தமிழ் இன அழிப்பையும் சிங்களக் குடியேற்றங்களையும செய்தனர். இன ஒடுக்குமுறை உச்சக் கட்டத்திலேயே தமிழ் மக்கள் தங்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராட தனியரசு அமைக்க, பிரிந்து செல்ல ஆயுதந் தாங்கிப் போராட தொடங்கினர். தேசிய இன அழிப்பு என வரும் போது தேசிய இனத்தின் ஒவ்வொரு வர்க்கப் பிரிவும் தன் நலன் சார்ந்த முறையில் தேசியக் கோரிக்கை முன்வைத்து போராடுவது தவிர்க்க இயலாத வரலாற்று விளைவு தமிழ்த் தேசியப் போராட்டத்தை அகிம்சையானாலும், ஆயுத வழி என்றாலும் சிறீலங்கா அரசு நசுகியே வந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் யுத்தம் என்ற அளவுக்கு வளர்ந்து வெற்றி நோக்கி நகர்கிறது. யுத்தம் என்றால் யுத்தம் எனப் பேசிய UNP ஆட்சியாலும் போராட்டத்தை நசுக்கிவிட முடியவில்லை. சமாதானத்திற்கான யுத்தம் என தந்திரமாகப் பேசிய SLFP கூட்டணி அரசாலும் போராட்டத்தை திசை திருப்பவோ, நசுக்கிவிடவோ முடியவில்லை. சிங்கள பௌத்த மத வெறிப் போக்குடன் சமரசப்பட்டு ஆட்சி நடத்தி வந்த இரண்டு இனவாத அரசியல் கட்சிகளும் சிறீலங்கா மக்கள் மத்தியில் தமிழீழப் போராட்டத்தை நசுக்க முடியாத கையறு நிலைக்கு வந்துவிட்டன. ஆனால் சிங்கள முதலாளி வர்க்கமும், ஏகாதிபத்தியங்களும் தமிழின ஒடுக்குமுறை யுத்தத்துக்கு தலைமை தாங்கி தொடர்ந்து நடத்துவதற்கு சிங்கள சிவில் சமூகத்தை நவீன சிங்களத் தேசியவாதம் என்ற பெயரில் ஆனால் அதே பழைய சிங்கள பௌத்த ஆதிக்க கருத்தியலுடன், SLFP, UNPஇன் பலயீனங்களை விமர்சித்தபடி ஒரு உறுதியான மூர்க்கமான சிங்கள பௌத்த அரசியல் தலைமையை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. கடந்த 15 ஆண்டுகால

www.tamilarangam.net



விடுதலை யுத்தம், இன மத வெறியை உயிராதார மாக கொண்டுள்ள சிறீலங்கா ஆளும் வர்க்கத்தை இந்தப் புதிய நிலைமைக்கு தள்ளியுள்ளது.

இதனால்தான் 'சிறெல உறுமய' கட்சி டீ.தி.ணீ. போன்ற கட்சிகள் SLFP, UNP கட்சிகளின் அரசியல் தீர்வு முயற்சிகளை கூட எதிர்ப்பதுடன் தமிழீழ மக்களின் எந்த அரசியல் கோரிக்கைகளையும் நிராகரிக்கின்றன. தமிழீழப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக அணுகுகிறது. (அமெரிக்காவைப் போல) SLFP, UNPயும் புலிப் பயங்கரவாதம் என்றால் இவர்கள் தமிழ்ப் பயங் கரவாதம் என்கின்றனர். இந்த நவீன சிங்கள பௌத்த தேசிய வெறி, நவீன தேசிய வாதம் எனக் கூறியபடி சிங்கள மக்களின் வறுமைக்கும், வேலையின்மைக்கும் நீண்ட யுத்த இழப்புக்கும் காரணம் ஏகாதிபத்திய சார்பு சிங்கள முதலாளி வர்க்கமும், அரசும் என்பதை மறைத்து, தமிழீழ மக்களின் விடுதலை யுத்தத்தை காரணமாக காட்டுகிறது. 'சிறீலங்கா அரசு எதிர்ப்பற்ற (ஆளும் வர்க்க கட்சி எதிர்ப்பல்ல) ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாத இந்த நவீன சிங்கள இன தேசிய வெறியர்கள், சிங்கள தேசிய வாதிகள் அல்ல, இவர்கள் முன்னிறுத்தும் சித்தாந்த அரசியலும் தேசியவாத அரசியல் அல்ல, சிங்கள இனமதவா தத்தை மேலும் நவீன முறையில் சிவில் சமூக மய மாக்கி, சிங்கள மக்களை மேலும் இராணுவ மய மாக்கி தமிழர்களுக்கு எதிரான, தமிழீழத்துக்கு எதிரான தேசிய வெறி யுத்தத்தை தொடர்வதற் கான தயாரிப்புக்கள் இது. இன்னமும் 6 ஆண்டு களில் அரசு அதிகாரத்தை கைப்பற்றுவோம் என சம்பிக்க ரணவக்க கூறுகிறார். ஆனால் SLFP, UNP அரசியல் கட்சிகளின் இலஞ்சம், ஊழல் திறமை யற்ற நிர்வாகத்தை குற்றம் சாட்டி சிங்கள மக்களின் நண்பர்களாக காட்டுகிறார்கள். பயங் கரவாதத்தை தோற்கடிக்க முடியாமல் (தமிழீழ போராட்டத்தை) இருக்கும் அரசியல் இராணுவக் காரணங்களை பட்டியல் இடும் இவர்கள். அண்மை தோல்விகளுக்காக இராணுவ நிதிமன் றத்தில் சந்திரிகா - ரணில் - ரத்வத்த நிறுத்தப்பட வேண்டும் என்கிறார்கள். இராணுவத் தலை மைக்குள் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பானது. சிறெல கட்சியின், நவீன தேசிய வாதத்தை (வெறியை) முன்னிறுத்தும் கட்சிகளின் ஆதர வுடன் சிறீலங்காவில் இராணுவ ஆட்சிக் கைப்பற்றல் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்ல.

தமிழீழ மக்களின் குறைந்த பட்ச அரசியல் கோரிக்கைகளைக் கூட (திம்புக் கோரிக்கை) அங்கீகரிக்க மறுக்கும் SLFP, UNP கட்சிகளின் அர சுக்கு எதிராக தொடர்ந்து போரிட வேண்டிய நிலையிலுள்ள புலிகளும், தமிழீழ மக்களும், SLFP, UNP கட்சிகளின் எலும்புத் துண்டு அதி காரப் பரவல், அரசியல் யாப்புச் சீர்திருத்த தீர்வைக் கூட எதிர்த்துவரும் நவீன சிங்கள தேசி யவாத (வெறித்) தலைமைகள் ஆட்சியை கைப்பற்றினாலும் தொடர்ந்து போராடுவது எந்த வகையிலும் நியாயமற்ற போராட்டமாக இருக் காது. ஆனால் புலிகள் சிங்கள அப்பாவி மக்கள் மீதான, மத நிறுவனங்கள் மீதான தாக்குதலை திட்டமிட்டு நிறுத்தியாக வேண்டும். சிறீலங் காவில் இராணுவ ரீதியான தாக்குதல்கள் அர சியல் இராணுவத் தலைவர்களை குறி வைப்பதில் சிங்கள அப்பாவி மக்கள் பலியாக்கப்படுவதை தவிர்க்க வேண்டும். குடியேற்ற திட்டங்களில் உள்ள இராணுவ முகாம் தாக்குதல்களில் சிங்கள அப்பாவி மக்களுக்கு நம்பிக்கையளிப்பதாக இருக்க வேண்டும். சிங்கள மக்கள் தங்களின் விரோதிகள் அழிக்கப்படுவதாக உணர வேண்டும். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரி மையை ஏற்றுக் கொள்ளும். சிறீலங்காவில் உள்ள அரசியல் கட்சிகள், போராட்டங்கள் சிறீலங் காவில் வளர்வதற்கு எல்லா வகையிலும் புலிகள் உட்பட போராளிகள் உதவ வேண்டும். சிறீலங்கா அரசை, நவீன சிங்கள தேசிய வெறியை தோற்க டிக்க தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை வெல்ல இதுதான் சரியான பாதை. புலிகள் இதைச் செய்யத் தவறினால் தேசிய விடுதலை யுத்தம். தேசிய வெறி யுத்தமாக மாறும் அபாயம் உள்ளது.

— நசீர்

www.tamilarangam.net



# இனவாதிகளின் அரசியல் தீர்வுப் பொதியை தூக்கி எறிவோம் / தேசபக்தர்கள் கூட்டிணைவோம்

நவகொலனிய இலங்கையின் வரலாற்றில் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண இரண்டு இனவாத சிங்கள ஆளும் வர்க்க அரசியல் கட்சிகள் (SLFP, UNP) கூடிப் பேசி ஒரு தீர்வுப் பொதியை முன் வைக்க வந்தது முதல் முறையாகும், அரசை வழிநடத்தும் ஒரு கட்சி நடத்தும் பேச்சு வார்த்தையை, தமிழர் தரப்புடன் மேற்கொள்கின்ற ஒப்பந்தத்தை எதிர்ப்பதும் எரிப்பதும் மற்றைய இனவாதக் கட்சியின் அரசியலாக இருந்து வந்துள்ளது. 1956 பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து J.R. கண்டியாத்திரை செய்து UNP எதிர்த்தது. 1965 செல்வா - டட்லி ஒப்பந்தத்தை SLFP யும் எதிர்த்து ஒப்பந்த மை காயும்முன் ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது. 1987 ஒப்பந்தத்தை SLFP, UNPகுள் ஒரு பகுதியும் எதிர்த்தன. இன்று ஒரு தீர்வுப் பொதியையும், இடைக்கால நிர்வாக சபையையும் முன்வைத்து தமிழீழ தேசிய விடுதலைப் போரை நசுக்க, திசை திருப்ப இரண்டு இனவாத கட்சிகளும் ஒரு பொது வழியை 5 மாத கால இழுபறி பேச்சு வார்த்தைக்கு பின் இவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றிய முரண்பாடுகளுடன் வெளியிட்டன.

இறுதியில் 'தேர்தல் அரசியலுக்காகவும்' இன மதவெறி பீடங்களின் அழுத்தத்தாலும், கூட்டுத் தீர்வுப் பொதி, அரசியல் சாசன சீரமைப்பு முயற்சியை UNP, SLFPயும் முறித்துக் கொண்டன. க்மீகஇன் ரணில் சிங்கப்பூரில் புலிகளின் பிரதிநிதியுடன் பேசினார், SLFPஇன் சந்திரிகா இலண்டனில் புலிகளின் பிரதிநிதியுடன் பேசினாள் என மாறி மாறி குற்றம் சுமத்துகின்றன.

இனப் பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வுப் பொதியை முன் தள்ளி, புலிகளையும் உள்ளிழுத்து தேசிய விடுதலைப் போரை திசைமாற்ற சந்திரிகா அரசு 5 வருடங்களாக முயற்சி செய்து வருகிறது. சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் இன ஒடுக்குமுறை யுத்தத்தை கூர்மைப்படுத்திய அரசு தனது யுத்த நெருக்குதல் மூலம் புலிகளை பலயீனப்படுத்தி வழிக்கு கொண்டு வரமுடியவில்லை, மாறாக தனது யுத்த வெறி கொள்கைக்கு காரணம் புலிப் பயங்கரவாதம் / தமிழ்ப் பயங்கரவாதம் என அரசு கூறிய போதும் உள்நாட்டிலும், உலகளவிலும் இது எடுபடவில்லை. அரசின் யுத்தவெறியை நியாயம் கற்பிக்கக் கூடிய முறையில் இனப் பிரச்சனைக்கு ஒரு தீர்வுப் பொதியை முன் வைத்து பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் அரசியல் சாசன சீர்திருத்தத்தை ஏற்படுத்தி, அரசியல் தீர்வுக்கு தயாரில்லாத போர்வெறியர்களாக புலிகளை காட்டி, தமிழ்இன அழிப்பு யுத்தத்தை நடத்த உள்நாட்டு, உலக ஆதரவை தன்பக்கம் திருப்ப சமாதான தேவதையாக மாற விரும்பியது சந்திரிகா அரசு. அடுத்த பாராளுமன்ற தேர்தலிலும் அதிகாரத்தை பிடிக்க அத்திவாரம் போடுகிறது. புலிகளின் ஓயாத அலை 3 இன் வெற்றி, சிறீலங்கா அரசை மிகப் பெரிய நெருக்கடிக்கு தள்ளியது, மக்கள் பாதுகாப்பு விதியை அமுல்படுத்தும் அளவுக்கு சென்றது. எல்லையற்ற தணிக்கை முறையை ஊடகங்கள் மேல் திணித்து. அவசரகால இராணுவ உதவியை அன்னிய நாடுகளிடம் கோரியது. உள்நாட்டிலும், உலகளவிலும் முன்னர் சந்திரிகா அரசு எதிர்பார்த்ததற்கு எதிர்மாறான விளைவுகள் ஏற்பட்டது.

அரசு, யுத்தத்தில் மேலும் தோல்வியடையாமல் இருக்க வேண்டின் இராணுவப் பலயீனங்களைப் சரிப்படுத்துவதுடன், பலப் படுத்துவதுடன், புலிகளை தற்காலிகமாக வேனும் அரசியல் அதிகாரப் பேச்சு வார்த்தையின் பக்கம் திருப்ப வேண்டும் புலிகள் முன் தமிழ் மக்கள் முன் ஒரு தீர்வுப் பொதியை வெளியிட முன்னதாக அரசின் பொதியை எதிர் கட்சியும், அரசியல் இயக்கங்களும் ஏற்றுக் கொண்டால், தமிழ்க் கட்சிகளோ, புலிகளோ ஏற்றுக் கொள்ளா

www.tamilarangam.net



விட்டாலும், பாராளுமன்றத்தில் தீர்வுப் பொதியை முன் வைத்து பெரும்பான்மை ஆதரவுடன் அரசியல் சட்டமாக்கி விட்டால் இதனை பயன்படுத்தி தீர்வுப் பொதியை ஏற்றுக் கொள்ளாதவர்களை பயங்கரவாதிகளாக, போர்வெறியர்களாக சித்தரித்து யுத்தத்தின் மூலம் நசுக்க முடியும். சனாதிபதி தேர்தலில் வென்ற சந்திரிகா, பாராளுமன்ற தேர்தலிலும் வெல்ல முடியும் என நம்புகிறார். சிறீலங்கா அரசுக்கு பின்னால் நிற்கின்ற தமிழீழப் போராட்டத்தை நசுக்கவும், புலிகளை வீழ்த்தவும் விரும்புகின்ற SLFP UNP பின்னால் உள்ள அன்னிய நாடுகளின் ராஜதந்திரமும் இதுதான்.

எனவேதான் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு ‘அரசியல் தீர்வுப் பொதியும்’ ‘இடைக்கால நிர்வாக சபை’ திட்டமும் வெளிவர முயற்சித்தன. சனநாயக நீரோட்டத்தில் இல்லாத புலிகளுடன் ‘தீர்வுப் பொதி’ ‘இடைக்கால சபை’ பற்றி பேச வேண்டியதில்லை என அடம்பிடித்த அம்மையார் அரசு, இறுதியில் நோர்வே தூதர்கள் வழியாக புலிகளுக்கு தீர்வுப் பொதியை பார்வைக்கு அனுப்ப முன் வந்தது. புலிகளோ இந்த இனவாதக் கட்சிகளின் இரண்டு முடிவுகளையும் பார்வையிட முன்னரே நிராகரித்துவிட்டனர்.

சந்திரிகா அரசோ, தீர்வுப் பொதி பற்றி பகிரங்க விவாதம் நடத்த தயார் என்கிறார். இப்பொதியை TULF கூட முரண்படுகிறது. மற்றைய தமிழ்க் கட்சிகள் அரசுடன் பேசுகிறார்கள். வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கு காணி அதிகாரம் வேண்டும், வடக்கு கிழக்கு பிராந்திய நிரந்தர இணைப்பு, ஒற்றை ஆட்சி என்பதற்கு பதில் கூட்டாட்சி - சமஷ்டி என மாற்றப்பட வேண்டும் எனக் கோருகிறது.

அரசின், சிங்கள ஆளும் வர்க்க கட்சிகளின் இந்த தீர்வுப் பொதியானது 1985-ல் இந்தியரசு முன்னிலையில் நடந்த திம்புப் பேச்சு வார்த்தைகளில் தமிழ்ப் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட அடிப்படைக் கோரிக்கைகளை கூட தீர்ப்பதாக இல்லை, 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் திம்புக் கோரிக்கைகளை உள்ளடக்கத் தவறியதால் ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டதுடன், இடைக்கால நிர்வாக சபையும் புறக்கணிக்கப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போர் நடந்தது. 13 வருடங்களின் பின் அதே மாகாண சபைத் திட்டத்தை, பிராந்தியங்களின் திட்டமாக மாற்றி தீர்வுப் பொதி வைக்கப்பட்டுள்ளது. திம்புக் கோரிக்கைகளின் நான்கு அம்சங்களில் எதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. 17 ஆண்டுகளாக போராடி வரும் புலிகள் பொதியை படித்து பார்க்காது நிராகரித்தது கூட நியாயமானதே.

சிறீலங்கா அரசின், இனவாத ஆளும் கட்சிகளின் தீர்வுப் பொதியை தூக்கி எறியும், நிராகரிக்கும் தமிழீழப் போராளிகள் பேச்சு வார்த்தைக்கு, அரசியல் தீர்வுக்கு அடிப்படையாக முன்னிறுத்தும் அரசியல் கோரிக்கைகள், அதிகார வடிவம் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டை போராளிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். உலக மக்கள் முன் வைக்க வேண்டும்.

திம்புக் கோரிக்கைகளை பேச்சு வார்த்தைக்கு, தீர்வுப் பொதிக்கு அடிப்படையாக புலிகளும், தமிழீழ தேசபக்த புரட்சிகர சக்திகளும் முன்னிறுத்துகிறார்கள். புலிகளே யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே பேச்சு வார்த்தைக்கு முன் நிபந்தனையாக யாழில் உள்ள இராணுவம் பின் வாங்க - வெளியேற வேண்டும் என்கிறார்கள், இராணுவம் முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்ற முன் நிபந்தனைக்கும் இறங்கலாம் புலிகள் (90 முதல் 95 வரை போல்) மையமான கேள்வி என்னவெனில் புலிகளின் கைகளில், தமிழர்கள் வாழும் பகுதி கட்டுப்பாட்டுள் வருவதோ, ஒப்படைக்கப்படுவதோ அல்ல, தமிழீழ மக்களின் எத்தகைய அரசியல் கோரிக்கைகள் தீர்க்கப்படுகிறது. தமிழீழ மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு உரிமைகள் எத்தகைய அதிகார அலகு முறையூடாக தீர்க்கப்படப் போகிறது என்பதே மையமான பிரச்சனை.

திம்புக் கோரிக்கையின் அரசியல் அம்சங்களை அங்கீகரித்துவிட்டு, ஒரு பிராந்திய கூட்டாட்சி முறையை, சுயாட்சி முறையை அதிகார வடிவமாக முன்வைத்தால் நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? இங்கேதான் நாம் தெளிவு பெற வேண்டியுள்ளது.

புலிகள் 1990 யூன் யூலை ‘புலிகளின் குரலில்’ ‘தமிழ் மக்களுக்கு உரிய சுயாட்சியும் **(genuine autonomy)** சட்ட ரீதியான முறையான பாதுகாப்பும் வழங்கப்படுமானால் அது குறித்து

www.tamilarangam.net



புலிகள் இயக்கம் உடனடியாக முடிவு செய்யும்'' என தெளிவுபடுத்தியது, கடந்த பத்தாண்டு கால யுத்த வளர்ச்சியில் புலிகள் தங்களின் அரசியல் அதிகார கொள்கை முடிவில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது தெரியவில்லை. அண்மையில் அன்டன் பாலசிங்கம் ''ஒற்றையாட்சி அரசு அமைப்பு சட்டத்தை மாற்றி கூட்டாட்சி அமைப்புக்கு சிறீலங்கா அரசு உடன்படுமானால் போரை விட்டு விட்டு அதை நாங்கள் ஏற்க தயாரா கவுள்ளோம்'' என அண்மைய பேட்டியில் கூறி யுள்ளார்.

இன்று உலகளவில் தேசிய இன விடுதலை போராட்டம் நடக்கின்ற ஒவ்வொரு நாடுக ளிலும் கூட்டாட்சி, சுயாட்சி, உரிய மதிப்பு மிகு சுயாட்சி (Genuine autonomy) அதிக சுயாட்சி, விசேட சுயாட்சி என பரவலாக விவாதிக்கப்படு கிறது. காஷ்மீரில் எந்தவித சுயாட்சி வேண்டும் என கருத்தரங்குகளே நடத்தப்படுகி றது. இந்த சுயாட்சி முறைகள் எல்லாம் கூட்டாட்சிக் கொள்கை முறைக்கு உட்பட்ட வைதான் இந்த ஒவ்வொரு சுயாட்சி முறைக ளுக்கும் தனித்தனியான அதிகார உரிமை முறைகள் இருக்கின்றன.

ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரி மையை தன்னைத் தானே ஆளுகின்ற உரிமைய அங்கீகரிக்காமல் நிலவுகின்ற முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசியல் அரசமைப்புக்குள், நவ கொலனிய முறைக்குள் தேசிய விடுதலைப் போராட்டத்தை அமுக்கி அழித்து விடும் வேலையை இந்த சுயாட்சி முறைகள் இன்று நடத்தி வருகின்றன.

☞ பாதுகாப்பு, வெளியுறவு, நிதி வெளியீடு தவிர மற்றைய அனைத்தும் மாநில அரசு கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும்.

☞ மாநில அரசை, மைய அரசு கலைக்க முடியாத நிலையும், மாநிலத் தேர்தல்களை மாநில அரசே நடத்தும், மாநிலத்தை ஆளும் அதிகாரிகள் கூட மைய அரசால் தீர்மானிக்க முடியாத உரிமை இருக்க வேண்டும்.

☞ மாநிலத்தின் சிவில் மற்றும் கிரிமினல் வழக்கு களின் மேல்முறையீடு கூட மைய உச்சநீதி மன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய தில்லை.

☞ மைய அரசின் பாராளுமன்றம், மாநில சட்டங் களை மாற்றியமைக்க முடியாது இருக்கும் உரிமை வேண்டும். மாநில முதல்வர் மாநில, பிர தமர் என அழைக்கப்படுவது.

☞ குர்திஷ், காஷ்மீர் தேசிய இனங்கள் (POK, IOK) ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பிளவுபடுத்தப் பட்டிருப்பதால், மற்றைய நாடுகளால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ள தேசிய இனப் பகுதிகள் தனியாக இணைக்கப்பட்டு இப்பிரதேசங்கள் (அரசுகள் அல்ல) தனியாக இராணுவம், வெளியுறவுத் துறை, தொலைத் தொடர்பு, உரிமைகள் பெற்றி ருப்பதை இந்த தனிப் பிரதேசத்தை ஆக்கிரமித்த நாடுகள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந்தளவுக்கு 'சுயாட்சி' என்ற அளவு கோலுக்குள் அதிகார அலகு முறைகள், உரி மைகள் பற்றிப் பேசப்படுகிறது. விவாதிக்கப்படு கிறது. தேசிய இன அரசியல் இயக்கங்களால் முன்னிறுத்தப்படுகிறது.

சிறீலங்கா அரசுக்குள் சேர்ந்து வாழ முடியாது. பிரிவினைதான் ஒரேவழி என்ற நிலைப்பாட்டில் இருந்து 'தனித்தமிழீழம்' அடைய விடுதலை யுத்தம் புரிந்து வரும்புலிகள், தமிழீழக் கோரிக் கையை கைவிட்டவர்களை துரோகிகளாக்கி மரண தண்டனை விதித்த புலிகளின் தலைமைத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கைவிடக் கூடாது. வாக்கெடுப்பு அற்ற முறையில் வடக்கு கிழக்கு இணைத்தல் கோரிக்கையை கைவிடக் கூடாது. மாநில அரசின் அதிகாரங்கள் என்ற முறையில் மேற்கண்ட வற்றில் முதல் நான்கு அம்ச உரிமைகள் அதிகா ரங்கள் கொண்டதாக தமிழீழ மாநில அரசு அமைய வேண்டும். தனித் தமிழீழம் என்ற இலட் சியத்துக்காக இரத்தம் சிந்திய மாவீரர்களுக்கும், போராளிகளுக்கும், மக்களுக்கும் அவர்களின் இலட்சிய கனவுகளும் நிறைவேற்றப்பட வேண்டும், தமிழீழ விடுதலைக்காக தமிழீழ தேச பக்த சக்திகள், தமிழீழ மக்களின், தேசத்தின் நலனில் இருந்து அரசியல் அதிகார கோரிக்கை கொண்ட தெளிவான அரசியல் தீர்வுப் பொதியை முன்வைக்க வேண்டியது உடனடிக்கடமையாகிறது. குறைந்த பட்ச கொள்கை அடிப்படையில் ஆவது தேசபக்த சக்திகள் ஒரு பொது முன்னணியை உரு வாக்க வேண்டும். சிறீலங்கா இனவாத மதவாத கட்சிகளின் தீர்வுப் பொதிக்கு மாற்றாக தமிழீழ தேசபக்த கட்சிகள் தமது தீர்வுப் பொதியை முன் வைக்க வேண்டும்.

— சுரேஷ்

www.tamilarangam.net



# புலிகளிடம் மீண்டும் புலிக்குணம்?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கறைபடிந்த அத்தியாயங்களாகிய காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் போன்ற துரதிருஷ்டமான நிகழ்வுகள் இடம்பெற்று 10 ஆண்டு கள் நிறைவடையும் இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பான தங்கள் நிலைப்பாட்டில் இன்னும் மாறவில்லை. முஸ்லிம்கள் மீது வன்முறைகளை பிரயோகிக்க மீண்டும் தயாராகி விட்டார்களோ எனச் சந்தேகம் கொள்ளும் வகையில் கிண்ணியாவில் ஒரு சம்பவம் இடம் பெற்றிருக்கின்றது.

கிண்ணியா வாசியொருவரின் மோட்டார் சைக்கிளை புலிகள் அபகரிக்க முயன்று அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவே வன்மமான முறையில் புலிகள் அவரை கொலை செய்திருக்கின்றார்கள். இச்சம்பவத்தின் உடன் எதிரொலியாகவும் இதே போன்று கிண்ணியாவில் இடம்பெற்று வரும் மோட்டார் சைக்கிள் அபகரிப்பு, கப்பம் கோரல் நடவடிக்கை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கிண்ணியா மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள். புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை, அபகரிப்பு நடவடிக்கை வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள், மத்தியில் மீண்டும் அச்சத்தினையும் அதேபோன்று புலிகள் முஸ்லிம்களின் நிரந்தர விரோதிகளா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் மீது விடுதலைக் குழுக்கள் மேற்கொண்ட அநீதிகள் மறக்கப்பட்டு இயல்பான வாழ்க்கை முறைகள் மிக அன்னியோன்யமாக இடம் பெற்று வருகின்றது. 1990-ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கசப்பான நிகழ்வுகளின் அச்சநிலை முற்றாக தணிக்கப்பட்டு தமிழ், முஸ்லிம் உறவு ஸ்தீரமடைந்து அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகள் ஒருவரில் ஒருவர் தங்க நின்றதாகவே இடம் பெற்று வருகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் [illegible] கத்தில் ஈடுபடுவதும் அதேபோன்று முஸ்லிம் பிரதேசங்களில் தமிழர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதும் தமிழ்க் கிராமங்களின் ஊடாக முஸ்லிம்கள் அச்சமற்று பிரயாணத்தில் ஈடுபடுவதும் இன்னும் சில பிரதேசங்களில் மீன்பிடி, விவசாய முயற்சிகள் இருதரப்பினராலும் பரஸ்பர நல்லுறவுடனும் நடைபெறுகின்றது.

இந்நிலையில் புலிகளின் இந்நடவடிக்கை இரு சமூகங்களுக்கிடையில் மீண்டும் விரிசலை தோற்றுவித்து விடக்கூடாது. ஒற்றுமையுடனான வாழ்க்கை என்றும் தொடரவேண்டும். தமிழ் முஸ்லிம் ஐக்கியத்திற்கு ஆப்பு வைக்கும் செயலில் புலிகள் ஈடுபடக்கூடாது அவ்வாறு ஈடுபடுவர்களானால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது மேலாட்சி செலுத்தும் சிங்களப் பேரினவாதம் இராணுவ ரீதியான நகர்வுகள் எதிர்பாராத பலனை ஈட்டித் தராத நிலையில் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை குலைத்து இரு சமூகங்களையும் மோதவிடும் தந்திரமாக இப்படுகொலையைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை தொடுத்து அதனை புலிகள் மீது சாட்டி விடவும், தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு முஸ்லிம்கள், மீது சாட்டிவிடவும், சந்தர்ப் பம் உண்டு. பேரினவாதிகள் இதற்காக அரச படைகளையும், முஸ்லிம் ஊர்காவல் படைகளையும் பயன்படுத்தக் கூடும். இலங்கை இன்னொரு பாராளுமன்றத் தேர்தலை எதிர் கொண்டிருக்கையில் இடம் பெற்றிருக்கும் இப்படுகொலையை வைத்து ஈழப் போராட்டம், இன விடுதலை போன்ற பதங்கள் மூலதனமாக்கி அரசியல் வியாபாரம் நடாத்தக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் இரு சமூகங்களையும் மோத விட்டு தமது அரசியல் இலாபங்களை அடைந்து கொள்ள முயற்சிக்கலாம்.

எனவே விடுதலைப் புலிகள், இயக்கமானது அன்னிய அரசுகளின் உதவியுடன் பேரினவாத அரசு விடுதலை போரை நசுக்கிவிட முனைகையில் முஸ்லிம் மக்களையும் தம்முடன் இணைந்து போராடுமாறு அழைப்பு விடுத்திருக்கும் இந்நேரம் (இராணுவ ரீதியான இவ்வ

www.tamilarangam.net



ழைப்பு மீள் பரிசீலிக்கப்பட வேண்டும். இவ்விடம் இது பற்றி ஆராயவில்லை) முரண்பான விதத்தில் முஸ்லீம் நபர் மீது தாக்குதல் மேற்கொண்டிருப்பது புதிராகவே உள்ளது. ஆயினும், புலிகள் தமிழ் முஸ்லீம் உறவை இருண்ட யுகத்தினுள் மீண்டும் தள்ள முயற்சிக்கக் கூடாது.

அதேபோல் இப்படுகொலையை மட்டும் கருத்திற்கொண்டு முஸ்லீம் சமூகம் தமிழ் மக்களை தவறான முறையில் நோக்கக் கூடாது. புலிகளின் செயலுக்கு ஆர்ப்பாட்டம் மூலம் எதிர்ப்பை தெரிவித்திருக்கும் கிண்ணியா முஸ்லீம்கள் தொடர்ந்தும் அமைதியை நிலைநாட்ட வேண்டும். தவறான புரிதல்களுடன் வீணான செயல் எதனிலும் ஈடுபடக் கூடாது. அமைதியை யும் பொறுமையையும் கைக்கொள்ள வேண்டும். அதற்கான உத்தரவாதத்தை புலிகள் இயக்கம் வழங்க வேண்டும்.

— ஸிபானிஷா

நன்றி - சரிநிகர்

# அகதியின் மகன் அகதியாகலாம் கைதியாக முடியுமா?...

‘‘ஏப்ரல் 7-ஆம் தேதி இரவு மண்டபம்
ஈழ அகதிகள் முகாமையொட்டிய
தமிழ்நாடு தங்கும் விடுதியில்
ஒரு ஆணும் இரு பெண்களும்
ஆறு மாதக் குழந்தையும்
உள்ளிட்ட ஈழத்தமிழ்க் குடும்பமொன்று
நஞ்சு குடித்துத்
தற்கொலை செய்து கொண்டது.’’

‘‘சில நாட்களுக்கு முன்
இதே விடுதியில்
நான்கு அகதிகள்
தீக்குளித்து இறந்தனர்.’’

இங்கும்
பிணங்கள் பேசின.

‘‘எங்கள் உடல்களை எரியூட்ட
3000 ரூபாய் வைத்துள்ளோம்.
நகைகளை
முகாமிலுள்ள அகதிகளிடம்
கொடுத்து விடுங்கள்.
நாங்கள் அகதிகள்.
இந்தியா வந்து
கஷ்டப்பட்டதால்
தற்கொலை செய்து கொள்கிறோம்.’’

பிணங்களை
அடையாளம் காண
இங்கே
மரபணுச்சோதனை தேவையில்லை.

அவர்களுடைய அடையாளம்
தெரிகிறது.
அவர்கள்
மரணத்திற்குப் பின்னும்
மானத்தை
இழக்க விரும்பாதவர்கள்.
பணம் வைக்கவில்லையென்றால்
தங்கள் பிணத்தை
கவுரவமாக எரியூட்டமாட்டார்களோ
என்று நம்மைச்
சந்தேகிப்பவர்கள்.

உயில் எழுதி வைக்காவிட்டால்
நகைகளைக் களவாடக் கூடும்
என்று நம்மை
மதிப்பிட்டிருப்பவர்கள்.
எம் சாவுக்கு நீங்களே காரணம்
என்று குற்றம் சாட்டத் தயங்கித்
தம் நிலையையே
காரணம் சொல்லுமளவு

www.tamilarangam.net



நாகரீகமானவர்கள்.

நீங்கள்?

''அகதிகள் தற்கொலை''
என்ற செய்தியின் மீது
உங்கள்
இரக்கம் நிறைந்த கண்கள்
நின்று கலங்கினவா?
முலைக்காம்பில் நஞ்சுதடவி
பிள்ளைக்குப் பாலூட்டிய
அந்தத்தாயின்
பாசத்தை அறிவீர்களா?

ஆறுமாதப் பிள்ளையின்
எதிர்கால நலனை முன்னிட்டு
அவனைக் கொலை செய்த
தந்தையின் அக்கறையை அறிவீர்களா?

சொந்த மண்ணின் நினைவைக்
கனவைப் போலத் துடைத்தெறிவதன்
வலியை அறிவீர்களா?

அதிதி (விருந்தினன்) கிளிண்டன்
ஐந்து நாட்கள் தங்கிய செலவு
அகதிகளுக்கு
ஆயுள் முழுதும் சோறுபோடக் காணும்
என்ற அக்கிரமத்தை அறிவீர்களா?
அகதிகள் முகாமில் பிறந்து
அகதி முகாமில் வளர்ந்து
முகாமின் மதிற்சுவரைத்
தாண்ட அனுமதிக்கப்படாத
ஈழத்தமிழ் இளைஞனை
அகதி என்பீர்களா
கைதி என்பீர்களா?

அகதியின் மகன்
அகதியாகலாம்
கைதியாக முடியுமா?

நன்றி:
மே 2000, புதிய கலாச்சாரம்

# தமிழீழ புதிய சனநாயகக் கட்சியின் (NDPT) அரசியல் தீர்வுப் பொதி

தமிழீழ புரட்சிகர தேசபக்தர்களே/
சனநாயக சக்திகளே! மக்களே!

25 வருட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் 15 வருட தேசிய விடுதலை யுத்தத்தில் தமிழீழ விடுதலைக்காக தமிழீழ மக்களும், பேராளிகளும் செய்த தியாகங்கள் எண்ணில் அடங்காது. தமிழீழ புதிய சனநாயக அரசு அமைப்பதே எமது இறுதி இலட்சியம். தமிழீழ தேசிய விடுதலை யுத்தம் தொடங்கியதில் இருந்து இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வா? இராணுவத் தீர்வா ? என்ற விவாதம் நடந்து வ ருகிறது. ஆரம்பத்தில் ''யுத்தம் என்றால் யுத்தம்'', ''சமாதானம் என்றால் சமாதானம்'' என முழங்கி தமிழ் இன ஒடுக்கு முறை யுத்தத்துக்கு *U.N.P.* தலைமை தாங்கியது. 1985-ல் இந்திய அரசு முன்னிலையில் பேராளிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடந்தது. எல்லா இயக்கங்களும் 'திம்புக் கோரிக்கையில்' உறுதியாக இருந்ததால் சிறீலங்கா அரசின் முகம் கிழிந்தது. இந்திய அரசின் நெருக்குதல் தளர்ந்தது. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழீழப் போராட்டத்தில் போராளி இயக்கங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒப்பந்தத்தை அமுல்படுத்த கண்காணிக்க வந்த இந்தியப் படைகளுக்கும் - புலிகளுக்கும் இடையில் நடந்த யுத்தம் கூட தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தமாக மாறியது. 1987 முதல் இன்றுவரை புலிகளே தேசிய விடுதலைப் போராட்டத்தின் யுத்தத்தின் தீர்மானகரமான சக்தி

www.tamilarangam.net



யாக இருக்கிறார்கள்.

1991-ல் பிறேமதாச அரசுடன், 95-ல் சந்திரிகா அரசுடன் புலிகள் யுத்த நிறுத்தம் செய்து அரசியல் பேச்சு வார்த்தை நடத்திய போதும் புலிகளின் கோரிக்கைகள் ஏற்கப் படாததால், தேசிய விடுதலை யுத்தம் தொடர்ந்து நடக்கிறது. 98-ல்தான் புலிகள் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக மீண்டும் திம்புக் கோரிக்கையை முன்னிறுத்தினர். அன்று புலிகள் யாழ் கட்டுப்பாட்டு பகுதியை இழந்திருந்தனர். இன்று ஓயாத அலை 3 மூலம் தமது வன்னிக் கட்டுப்பாட்டு பகுதியை விஸ்தரித்துள்ளனர்.

சந்திரிகா அரசு 97-ல் முன்வைத்த மாகாண சபை திட்டமோ, 2000-ல் *UNP, SLFP* உரையாடிய பிராந்திய திட்டமோ எந்தத் தீர்வுப் பொதியும் தமிழீழ மக்களின் அடிப்படை கோரிக்கைகளை தீர்ப்பதாக இல்லை. சிறீலங்கா அரசின் சமாதான(?) ஆக்கிரமிப்பு யுத்தமே தொடர்கிறது. சிறீலங்காவின் பொருளாதாரம் எதிர்கொள்ளும் நெருக்கடியும் சிறீலங்கா அரசுக்கு கடன் வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் சந்திரிகா அரசை பேச்சு வார்த்தைக்கு அரசியல் தீர்வுக்கு நிர்பந்திக்கின்றன. ஏகாதிபத்தியங்களும், இந்தியரசும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்ப எத்தனிக்கின்றன. புலிகளும் மூன்றாவது தரப்பு முன்னிலையில் பேச்சு வார்த்தைக்கு தயாராகியுள்ளனர். புலிகள் எடுக்கின்ற முடிவு போராட்டத்தில் மீண்டும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும், இயக்கமும் மிக மிக பலயீனமான நிலையில் இருக்கிறோம். நமது அரசியல் கோரிக்கைகளின் பலமும், நடைமுறைச் செயற்பாடும் மட்டுமே எதிர்காலத்தில் போராட்டத்தின் திசை வழியை தீர்மானிக்கவல்லது. நாம் பேச்சு வார்த்தைகளை, அரசியல் தீர்வை, சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அல்ல என்பது தமிழீழ மக்களுக்கு — உலக மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். நமது அரசியல் கோரிக்கைகள் மக்களின் கோரிக்கைகளாக மாற வேண்டும். இதுவரை காலம் சிந்திய இரத்தத்துக்கும், செய்த தியாகங்களுக்கும் உயர்ந்த பட்ச பலனை பெறுவதாக பேச்சு வார்த்தைக்கான அடிப்படைகள் இருக்க வேண்டும் புலிகள் தொடர்ந்து போர் புரிந்தாலும், அதிகாரப் பங்கீட்டில் சமரசப்பட்டாலும் தமிழீழ மக்களின் புதிய சனநாயகப் போராட்டம் தொடர்ந்து பலப்படக்கூடிய முறையில் நமது கோரிக்கைகள், மக்கள் நலன், தேசநலன் சார்ந்திருக்க வேண்டும். எதிரிகளை, அன்னியப்படுத்தவும்,போராளிகளை மக்களை அய்க்கியப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

☞ திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

☞ வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முசுலீம் மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்த வேண்டும், கிழக்குத் தமிழீழத்தில் முசுலீம் மக்களுக்கு ஒரு *சுயாட்சி பகுதி* ஏற்படுத்த வேண்டும், சுயாட்சி பகுதியின் பொலிசு, சிவில் நிர்வாகத்தில் முசுலீம்களின், வீதப் பிரதிநிதித்துவம் அப்படியே பேணப்பட வேண்டும்.

☞ தமிழீழத்தின் (வடக்கு கிழக்கு இணைந்த) பொலிசு, சிவில் அமைப்பு முழுவதும் தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

☞ தமிழீழ மாநிலத்தில் இருந்து சிறீலங்கா இராணுவம், கடற்படை போலீஸ் முற்றாக வெளியேற வேண்டும். இராணுவத்தில், கடற்படையில் ஒரு தமிழ்ப்படை உருவாக்கப்பட வேண்டும். எல்லா இயக்கங்களின் போராளிகளும், தமிழ் மக்களும் (ஆண் - பெண்) படைப்பிரிவில் இணைக்கப்பட வேண்டும்.

☞ நாட்டின் பாதுகாப்பு, நிதி, வெளியுறவுத் துறை தவிர அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். மாநில அரசை எக்காரணத்தையிட்டும் மத்தியரசு கலைக்க முடியாது இருக்க வேண்டும்.

☞ தமிழீழ மாநில அரசியல் - அதிகார அமைப்புக்களில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்.

*ஊ*தமிழீழ தொலைத் தொடர்பு சாதன துறை, மற்றும் ஊடகவியல் துறை (பத்திரிகை, வான்ஒலி, வான்ஒளி)யில் அன்னிய முதலீட்டாளர்கள்

www.tamilarangam.net



அனுமதிக்கப்படமாட்டார்கள், ஊடகவியல் துறையில் மக்கள் விரோத மூடப்பழக்க வழக்க, சீரழிவுக் கலாச்சார விளம்பரங்கள், படங்கள், சீரியல்கள், அழகி - அழகன் போட்டிகள் அதிர்ஷ்ட இலாபசீட்டு போன்ற பந்தயமுறைகள் தடை செய்யப்படவேணடும், அனைத்து துறைகளிலும் அறிவியல் தொழில்நுட்ப பார்வைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

☞ தமிழீழ மக்கள் அனைவருக்கும் கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம், வீடு, அடிப்படை அரசியல் சாசன உரிமையாக்கப்பட வேண்டும். வீடு இல்லாத குடும்பங்களுக்க வீடும், நிலம் அற்றவர்களுக்கு விவசாயக் காணியும் அரசால் உடனடியாக கண்டிப்பாக வழங்க வேண்டும்.

☞ தமிழீழத்தில் சிறு விவசாயத்திலும், கூலி உழைப்பிலும் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும், உளவுத் தொழிலை (மண் கொத்தும்) மட்டும் நம்பியுள்ள கூலி உழைப்பாளர்களுக்கும், விவசாய உற்பத்திக்கு உகந்த காணிகள் நிலப்பகிர்வு மூலம் உடனடியாக வழங்க வேண்டும். காணி உரிமை தமிழீழ மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். நில உச்சவரம்பு சட்ட அமுலாக்கமும், காணிப் பங்கீடும் அடிப்படையானவை. விவசாயம், மீன்பிடி, கட்டுமானம் நெசவு தையல் தொழில்களிலுள்ள கூலித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச கூலி அளவும், 7 மணி நேர வேலையும் சட்டத்தில் நிறைவேற்ற வேண்டும். விவசாய மீன்பிடி உற்பத்தியில் உணவு பதனிடும் தொழிலில் உள்நாட்டு முதலீடுகளுக்கும், உணவுத் தேவையை நிவர்த்திக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.

☞ தமிழீழ தொழிற்துறை, நிதி, சேவைத் துறைகளின் வளர்ச்சிக்கும் புதிய உருவாக்கத் திற்கும் ஆன தொழில் உரிமங்கள், அரசின் ஊக்க உதவிகள் தமிழீழ தேசியத் தொழில் முனைவோருக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும். தமிழீழத்தில் வாழாத தமிழர்களின் *(NRT)* முதலீடுகள், உள்நாட்டு அத்தியாவசி பாவனை உற்பத்தி துறையில் ஊக்குவிக்கப்பட வேண்டும்; அன்னிய நாட்டு முதலீடுகள் கனரக தொழிற்துறை, அறிவியல் தொழில்நுட்ப துறைகளின் மட்டும் அனுமதிக்கப்படலாம். அன்னிய முதலீடுகளின் இலாபத்தில் 75% மீண்டும் உள்நாட்டு உற்பத்திக்கு திரும்ப வேண்டும். அன்னிய முதலீடுகள் 25 ஆண்டுக்குள் திரும்ப பெற முடியாத சட்டம் அமுலாக்க வேண்டும். விவசாய மீன்பிடி - தொழிற்துறை உற்பத்தியில், வணிகத்தில் உள் நாட்டு நடுத்தர தொழில் முனைவோரை பாதுகாப்பது அடிப்படையாக இருக்க வேண்டும். இதற்கு தடையான அன்னிய முதலீடுகள் உலகமயமாக்கல் திறந்த பொருளாதார கொள்கைகள் தடை செய்யப்பட வேண்டும்.

☞ அரசு துறை - தனியார் துறை (பெருந் தொழில் - சிறுதொழில்) என எல்லா உற்பத்தி வணிக - சேவைத் துறைகளிலும் தமிழீழ தொழிலாளர்களின் வேலை நேரம் சட்ட ரீதியாக 7 மணி நேரமாக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். பொலிஸ் துறைக்கும் தொழிற்சங்க உரிமை இருக்க வேண்டும். அரசு துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்க அனுமதிக்கப்படாது. சரியான முறையில் புனரமைப்பு செய்ய வேண்டும்.

☞ தமிழீழத்தில் ஆரம்பக் கல்வி முதல் - உயர் கல்வி வரை தமிழ் மொழியே பயிற்றுவிப்பு மொழியாக எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் இருக்க வேண்டும். சிங்களம், ஆங்கிலம் மொழிப் பாடமாக இருக்க வேண்டும். பல்கலைக் கழக கல்வியில் மட்டும் ஆங்கிலமும் பயிற்று மொழியாக இருக்க அனுமதிக்கலாம். கல்வி நிலையங்கள் மத நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, கல்வி நிறுவனங்கள் நேரடியாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

☞ அரசின் வேலை வழங்கும் திணைக் களத்தில், யுத்தத்தில் அங்கவீனமான போராளிகளுக்கும், மக்களுக்கும், யுத்தத்தில் கணவனை, பிள்ளைகளை இழந்த பெண்களுக்கும், குடும்பங்களுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டும். யுத்தத்தில் ஆண் - பெண் விகிதாச்சாரத்தில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதைக் கணக்கில் கொண்டு திருமணச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

☞ தொடக்கக் கல்வி, உயர்கல்வி, தொழில்

www.tamilarangam.net



நுட்பக் கல்வி, வேலைவாய்ப்புக் (அரசு - தனியார்) களில் இலங்கை, இந்திய அகதி முகாம் களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமையும் 50% ஒதுக்கீடும் (ஆண்களுக்கு 25% பெண்களுக்கு 25%) கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

☞ தமிழீழ மாநிலத்தில் 1970-களுக்கு பிற்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் திரும்பப் பெறப் பட வேண்டும்.

☞ பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறையிலும், தடுப்புக் காவ லிலும் உள்ள தமிழ், மலையக, முசுலீம் மக்கள், தமிழீழ போராட்டத்தில் ஈடுபட்ட, அதற்கு ஆத ரவளித்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்ட அர சியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடு தலை செய்யப்பட வேண்டும்.

☞ யுத்தத்தால் இடம் பெயர்ந்து இலங்கைக் குள்ளும், இந்தியாவிலும் அகதிகளாக முகாம் களில் இடைதங்கல் நிலையங்களில்/வீடுகளில் வாழும் தமிழ், முசுலீம், மலையக மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர அடிப்படை வச திகள் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

☞ மூன்றாவது தரப்பின் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடப்பது, காண்காணிப்பதற்கு அப்பால்; எந்த மூன்றாவது நாடும், சர்வதேச நிறு வனமும், படைகளும் உள்நாட்டுக்குள் அனும திக்கப்படக் கூடாது.

☞ போராளிகளின் ஆயுதங்கள், சிறீலங்கா அரசிடமோ, சர்வதேச இராஜதந்திர கண்காணிப் பாளர்களிடமோ நேரடியாக தனியாக ஒப்படைக் கப்படமாட்டாது, தமிழர்கள் பொலிசிலும், இரா ணுவத்திலும், கடற்படையிலும் நேரடியாக இணைக்கப்படுவதன் மூலம் மாற்றப்பட வேண்டும்.

☞ அனைத்து மலையக தமிழ் மக்களுக்கும் குடியுரிமை, வாக்குரிமை வழங்கப்பட வேண்டும். சிறீலங்காவில் மலையக மக்களுக்கு *சுயாட்சிப் பகுதி* ஏற்படுத்த வேண்டும்.

☞ தமிழீழ மாநில அரசு மதச்சார்பற்ற அர சாக இருக்க வேண்டும். மத சாதி நிறுவனங்க ளுக்கு அரசு எவ்வகை உதவியும் செய்க் கூடாது. அன்னிய நாடுகளிலிருந்து இந்நிறுவனங்கள் நிதி பெறுவது கட்டாயமாக தடுக்கப்பட வேண்டும். கல்வி - தொழில் - வணிக நிறுவனங்களில் மதச்ச டங்குகள் மத பழக்க வழக்கங்கள் அனுமதிக்கப் படக் கூடாது. மத நிறுவனங்களின் மதமாற்ற நட வடிக்கைகள் இனிவரும் காலங்களில் தடை செய்யப்படும். மதம், சாதி, பிரதேசம் பெரியலான அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட வேண்டும்.

☞ தமிழீழப் பகுதியில் சிறீலங்கா அரசு படைகளால் அரசு சார்பு ஆயுதக் குழுக்களால், புலிகளால் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணி பொறி வெடிகள் உள்நாட்டு கண்கா ணிப்பு குழு முன்னிலையில் உடனடியாக எடுக் கப்பட வேண்டும். அதன்பின்பே அகதிகள் சொந்த வீடுகளில் குடியேறவும், தொழில் செய்யவும் அனுமதிக்க வேண்டும்.

☞ இந்தியாவில் அகதி முகாம்களில் உள்ள தமி ழீழ மக்களும், சிறப்பு முகாம், மற்றும் சிறைகளி லுள்ள போராளிகளும் மிகக் குறுகிய மாதங்களில் தமிழீழப் பகுதியில் குடியமர ஏற்பாடு செய்ய வேண்டும். வெளிநாடுகளிலுள்ள குடியுரிமை இல்லாத தமிழர்கள் குறுகிய காலத்தில் நாடு திரும்ப ஆவண செய்ய வேண்டும்.

☞ தமிழீழத்தில் உள்ளூராட்சி முதல் பாரா ளுமன்றம் வரையுள்ள அரசியல் தலைவர்களின் கட்சி - இயக்க தலைவர்களின் பெரும் பொறுப் புள்ள அதிகாரிகளின் வருமான சொத்து விபரங் கள் வருடம் ஒரு தடவை மக்கள் முன் வைக்கப்ப டவேண்டும்.

நடந்து வருகின்ற தமிழீழ விடுதலைப் போராட் டத்தில் - போரில் தமிழீழ தொழிலாளர்களும், விவசாயிகளும், நடுத்தர வர்க்க மக்களும் மிக அதிகளவு தியாகம் செய்து வருகிறார்கள். வாழ்வா - சாவா என அரசு கட்டுப்பாட்டு பகுதி / புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் அரசின் பொருளாதார தடைகள் மத்தியில், கல்வி - தொழில் நெருக்கடியில் தேசத்தை விட்டு ஓடாது, உயிர் பிழைத்து வாழ்கிறார்கள். தமிழீழ விடு தலை யுத்தத்துக்கு நேரடியாக - மறைமுகமாக உயிராதாரமாக விளங்கி வருகிறார்கள். உயிரைக்

www.tamilarangam.net



காப்பதற்காக இலட்சம் மக்கள் இந்தியாவில் அகதிகளாகவுள்ளனர். வன்னிப் பெருநில கூலி விவசாயிகள்/யுத்தத்தில் வழங்கி வரும் பங்கை புலிகளின் ஓயாத வெற்றிகள் பறைசாற்றுகின்றன. தமிழீழ உழைக்கும் மக்களின் வாழ்வில் ஒரு முன்னேற்றத்தை, பேச்சு வார்த்தை — அரசியல் தீர்வு ஏற்படுத்த வேண்டும். இக்கடமைமைய நிறைவேற்றாத இராணுவத் தீர்வோ, அரசியல் தீர்வோ பெரும்பான்மை தமிழீழ மக்களுக்கு செய்யும் வரலாற்று துரோகமாகும். மக்களின் நலனில் - முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ அரசியல் சக்திகளும், கட்சிகளும், வெளியீடுகளும் தேசநலன் - மக்கள் நலன் என்ற இலக்கில் இத்தீர்வுப் பொதி திட்டத்தின் அடிப்படையில் கூட்டிணைந்து போராட வருமாறு அறைகூவல் செய்கிறோம், இவ்அரசியல் தீர்வுப் பொதியை நாளிதழ்கள், வார - மாத - காலாண்டு இதழ்கள் மறுபிரசும் செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புரட்சிகர தேசபக்த சனநாக சக்திகளே, இக்கோரிக்கைகளை எட்டு திக்கும் பரப்புக்கள், மக்களை அணி திரட்டுங்கள். கூட்டுப் போராட்டங்களை நடத்துங்கள்.

*மத்திய குழு*
*தமிழீழ புதிய சனநாயகக் கட்சி* ***(N.D.P.T.)***

# ஆணாதிக்க பாலியல் வெறிப் பயங்கரம்

இச்சமூக அமைப்பில் புரையோடிப் போயுள்ள ஆணாதிக்கமானது. குடும்பம் முதல் அரசு வரை அனைத்து இடங்களிலும் பெண்கள் மேல் தனது கருத்தியல் ஆதிக்கத்தையும், வன்முறையையும் பிரேயாகித்து வருகின்றது. இவ்ஆணாதிக்க நடவடிக்கைகள் ஆதிக்க கருத்தியலை தாங்கியுள்ள ஆண்களிடம், பெண்களிடம் மனித நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் தனக்கே உரித்தான முறைகளில் வெளிப்படுகிறது; ஆணாதிக்கத்தின் முக்கிய குறியீடான பெண்கள் மீதான பாலியல் (SEX) ஆதிக்க கருத்துக்களும், பாலியல் உடல் வன்முறைகளும், ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் பெண்கள் மேல் உள - உடலியல் தாக்குதலை நடத்தி வருகிறது. ஆதிக்கங்கள், மோதல்கள், அராஜகங்கள் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்சிகளிலும் பெண்கள் அந்நிகழ்ச்சிகளில் இல்லாவிட்டாலும் பெண்களை இழிவுபடுத்தும் - கேவலப்படுத்தும் வசைமொழி வார்த்தைகள் பாவிக்கப்படுகின்றன. பெண்கள் அந்நிகழ்ச்சிகளில் இருப்பார்களானால் அவர்களின் உடல் மீதான தாக்குதல் மூலம் ஆணாதிக்க வெறி தன்னை வெளிப்படுத்துகிறது. சாதி, மத, பிரதேச, இன மோதல்கள், ஆக்கிரமிப்புக்களில் ஈடுபடுகின்ற ஆண்களிடம் ஆணாதிக்க பாலியல் வெறி முன்னிலை பெறுகிறது.

சிறீலங்கா அரசின் தமிழ் இன ஒழிப்பு, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிங்களக் குண்டர் படை ஆண் முதல் பாதுகாப்பு படையில் உள்ள ஆண்கள் வரை, அரசியல் தலைவர்களாகவுள்ள ஆண்கள் அனைவரும் தமிழ்ப் பெண்கள் மேல் (பெண்கள்) நடத்திய - நடத்திவரும் ஆண் ஆதிக்க பாலியல் வெறிக்கு சோதனைச் சாவடியிலும், தேடுதலிலும், விசாரணையிலும், யுத்தத்திலும் முப்படைகளாலும் தமிழீழப் பெண்கள் (இந்து, கிறிஸ்தவ, முசுலீம்) பாலியல் துன்புறுத்தல் முதல் பாலியல் பலாத்காரம் வரை எதிர் கொண்டு வருகின்றனர். இந்திய சமாதான ஆக்கிரமிப்பு படை வந்தபோதும் இதை தமிழீழப் பெண்கள் சந்தித்தனர். அய்நா சமாதானப்படை வந்தாலும் இவ்ஆணாதிக்க பாலியல் வெறியை பெண்கள் சந்திக்க வேண்டிவரும், அரசு படைகளிலுள்ள பெண்கள் கூட, படைகளுக்கு எதிராக நியாயம் கோரிப் போராடும் பெண்கள் மீது

www.tamilarangam.net



வன்முறைத் தாக்குதலை துன்புறுத்தலை நடத்து கின்றனர். பாலியல் பலாத்காரம் செய்வதில் லையே ஒழிய மற்றைய அனைத்தையும் பெண் குறிகளை சிதைப்பது உள்ளிட்ட உடல் வன்மு றையிலும், தமது சக படை ஆண்களின் பாலியல் பலாத்காரத்துக்கு ஆதரவாக நடப்பதிலும், ஆணாதிக்க வசை மொழிகளை பிரயோகிப்ப திலும் பெண்களே. பெண்களுக்கு எதிரியாகவும் செயல்படுகின்றனர்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறைக்கு, படைகளின் பாலியல் வன்முறைகளுக்கு எதி ராக கிளர்ந்தெழுந்த தமிழீழப் பெண்கள் யுத்த முனையில் ஆண்களைப் போல் தாங்களும் சரி சமமாக நின்று போரிட்டு வருகிறார்கள். தமிழீழ விடுதலை இயக்கங்களின் போராட்ட வர லாற்றில் ஒவ்வொரு இயக்கங்களிலும் பெண்களின் பங்களிப்பு இருந்து வந்திருக்கிறது. பெண் புலிகள் இன்று பிரசித்தமானவர்களாக உலகளவில் பார்க்கப்படுகிறார்கள், எதிரிப் படைகள் அப்பாவி தமிழீழப் பெண்கள் மீது கட்டவிழ்த்து விட்டு வரும் பாலியல் துன்பு றுத்தல், பலாத்காரம் தொடர்ந்து கொண்டிருக்கி றது. கிருசாந்தி, சாரதாம்பாள் இன்று நீர்வே லியில் 70 வயது தாய் மகள் முன்னிலையில் இரா ணுவக் காடையர்களால் பலாத்காரம் செய்யப் பட்டாள் என பட்டியல் தொடர்கிறது. எதிரிப்ப டைகள் போராளிப் பெண்களை உயிருடன் பிடித் துவிட்டால் செய்யும் பாலியல் வதைகளை எழுத்தில் விபரிக்க முடியாது. தமிழீழம் விடு தலை அடையும் வரை எதிரிப் படைகளின் பாலியல் கொடூரமும் தொடரும்.

இன ஒடுக்குமுறைக்கு படைகளின் பாலியல் வெறிக்கும் எதிராகப் போராடும் பெண்கள் தமி ழீழ ஆண்களின் பாலியல் வெறிக்கும் எதிராக போராட வேண்டியுள்ளது. பெண் விடுதலை பற்றி பேசுகின்ற இயக்கங்களின் மத்தியிலுள்ள ஆணாதிக்க சிந்தனை - செயல்முறைகளுக்கு எதிராக கருத்து ரீதியான போராட்டத்தை நடத்தி வருகின்ற - நடத்த வேண்டிய தமிழீழப் பெண்கள்; இயக்கத்துக்குள்ளும் - சமூகத்திலும் தமிழீழ (இந்து, கிறிஸ்தவ, முசுலீம்) ஆண்கள் மத்தியிலுள்ள ஆணாதிக்க வெறியர்கள் இடம் இருந்து வெளிப்படுகின்ற பாலியல் துன்புறுத்தல் - பாலியல் பலாத்காரம் போன்ற நிகழ்ச்சிக ளுக்கு எதிராக தற்காப்பு ரீதியில் எதிர்வன்மு றையை பிரயோகிக்க வேண்டியுள்ளது. இத்த கைய சம்பவங்களின் அரங்குகளைப் பொறுத்து அதற்கெதிரான வெகுசனப் போராட்டங்களும் அதற்கான தண்டனைகளும் பெண்களால் வழங் கப்பட வேண்டும். போராளி இயக்கங்களில் கீழ் அணி முதல் தலைமை வரையுள்ள ஆண்கள் தங்களின் ஆணாதிக்க சிந்தனைகளை - பாலியல் துன்புறுத்தல்களை இயக்கத்துள் உள்ள பெண்க ளிடம், வெளியில் உள்ள பெண்களிடம் வெளிப் படுத்தி வந்திருப்பது புதிய நிகழ்ச்சிகள் அல்ல, இயக்க தலைமையில் உள்ள பெண்கள் கூட, கீழ் அணிப் பெண்கள், உட்போராட்டம் நடத்திய பெண்கள் மேல், சகஇயக்க பெண்கள் மேலான அணுகுமுறைகளில் ஆணாதிக்க வசைமொழிக ளையும், உளவியல் துன்புறுத்தல்களையும் வெளிப்படுத்தியுள்ளனர். இயக்க மோதல் என்று வருகின்றபோது பெண்கள் - இயக்க பெண், ஆண் போராளிகள் மேல் தாக்குவதும் நடந்திருக்கிறது. இயக்கங்களின் தலைமையிலுள்ள ஆண்கள் - தாங்கள் குடும்பத்துக்கு வெளியே, வேறு பெண்க ளுடன் சினேக பூர்வமாக பாலியல் உறவு வைத்தி ருந்த சில நிகழ்ச்சிகளும், இவர்களின் மனைவி மார்கள் சிலர் தாங்களும் தலைவர்களின் பாதுகா வலர்கள், உள் - வெளி ஆண்களுடன் பாலியல் உறவு பேணியமையும், திருமணமாகாத தலை வர்கள், பணம் விபச்சாரிகளிடம் கூட கொடுத்து பாலியல் தேவைகளைத் தீர்த்து வந்ததையும், பெண்களிடம் பலாத்காரமாக உறவு கொள்ள முயன்ற சம்பவங்களும்; இயக்கங்களின் வெகு சன அரசியல் அமைப்பிலும், விடுதலை இரா ணுவ முகாம்களிலும் நிகழ்ந்திருக்கின்றன.

குட்டி முதலாளித்து சுத்த இராணுவக் கண்ணோட்டம் உள்ள தலைமைகள் (ஆண்கள் - பெண்கள்) 'பெண் விடுதலை' என்பதை தங்கள் இயக்கத்தை முற்போக்கானதாக காட்டிக் கொள்ளவும், இயக்கத்துக்கு இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதற்கான சுலோகமாகவே பயன்படுத்தி வந்தன. தமிழீழப் பெண்களின் அடிப்படைப் பிரச்சனைகளை புரிந்து, தமிழீழ விடுதலைக்கான அரசியல் கோரிக்கைகளையும், பெண் விடுத லைக்கான குறிப்பான அம்சங்களையும் முரண் பாடு இன்றி இணைத்து சிந்திக்கவோ, செயற்படுத் தவோ முனையவில்லை. ஆணாதிக்கத்தை நவீன முறைகளில் தக்க வைக்கவே செய்தார்கள். போரா ளிகள் மத்தியில் எழுந்த ஆணாதிக்க பிரச்சனை களை அரசியல் சூழ்ச்சிகளுக்கு பயன்படுத்தி னார்கள், பாலியல் பிரச்சனைகள் ஆண் - ஆண்

www.tamilarangam.net



உறவு, பெண் - பெண் உறவு முறைகளில் இரகசியமாக தீர்வை தேடத் தொடங்கியது. அதிகாரத்தில் உள்ளவர்கள் எதிர்ப்பால் குறுக்கு வழிகளிலும், ஒரே பால் நிர்ப்பந்த உறவுகளிலும் கூட ஈடுபட முனைந்தனர். இராணுவ முகாம்களில் உணவில் மஞ்சள் துளை அதிகம் போட்டு பாலியல் உணர்வை தடுப்பது - குறைப்பது. அதையும் மீறிய பாலியல் பிரச்சனைகளில் 'பனிஷ்மன்' தண்டனை முறைகளில் மட்டுமே தீர்வுகளைத் தேடியது தலைமை. இப்பிரச்சனைகளுக்கான அடிப்படை சமூக - அறிவியல் காரணங்களை கண்டறிந்து புதிய வழிமுறைகளை உருவாக்க முடியாதவர்கள். சமூக அங்கீகாரத்துக்காக குடும்ப அமைப்பை முன்னிறுத்துவதுடன், ஆணாதிக்க பாலியல் சிந்தனையான கட்டற்ற பாலியல் உறவு முறைகளை மனைவிமார்களுக்கும், காதலிகளுக்கும் ஆண்களே வழங்கும் சுதந்திரமான சீரழிவு முறைக்கு செல்கின்றனர். ''பெண் விடுதலை'', ''பாலியல் சுதந்திரம்'' என்ற சுலோகங்களுடன் அதிகார நிறுவனங்களை தகர்ப்பது, குடும்பம் என்ற நுண்ணியல் நிறுவனத்தை, அரசு என்ற பேரியல் நிறுவனத்தை தகர்ப்பதற்கு முன் நிபந்தனையாக கொள்வது என்ற கருத்தாடல்களுடன் ''நவீன சுதந்திரச் சீரழிவு'' வழிகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆண் ஆதிக்க சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டே 'பெண் விடுதலை' பற்றி பேசிய விடுதலை இயக்கங்களின் ஆண் போராளிகள் தங்களுக்கு ஆயுதங்களின் பாதுகாப்புடன் இயக்க அதிகாரத்துடன் பெற்ற பலத்தை பயன்படுத்தி தமிழீழ சமூகத்தில் பெண்கள் மேல் பாலியியல் வக்கிரத்தை கட்டவிழ்த்து விடுகின்றனர் சில துரோக இயக்க தலைவர்கள். தாங்கள் விரும்பிய பெண்களை நிர்ப்பந்த முறையில் மனைவியாக்கி கொண்டிருப்பதும், பின்னர் விரும்புகின்ற வேறு பெண்களை நிர்பந்தம் மூலம் பாலியல் உறவுக்கு உட்படுத்தி வருவதும் நடந்து வருகின்றது. இயக்கக் கட்டுப்பாட்டு பகுதிகளில் வெட்ட வெளிச்சமான செய்திகள் இதை எதிர்த்து குரல் கொடுக்கவும், போராடவும் இயக்கங்களின் பெண்கள் அமைப்புகளோ, சுதந்திரமான பெண்கள் இயக்கங்களோ பலமாக இல்லை என்பது வேதனைக்குரியது.

யாழ்ப்பாணத்தில், அய்நா சபையின் கண்ணி வெடி அகற்றும் குழுவில் உள்ள சிம்பாவே நாட்டைச் சேர்ந்த அதிகாரிக்கு யாழ் நகரின் பிரபலமான 'டியுசன் சென்ரர்' முதலாளியின் மனைவிக்கும் பாலியல் தொடர்பு இருந்த செய்தியும், 6-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்களை இந்த முதலாளியின் மனைவி கண்ணி வெடி அகற்றும் குழுவுக்கு பாலியல் தேவைகளுக்கு வழங்கியதும், அதற்குப் பரி உபகாரமாக 1000 கணக்கான அமெரிக்க டொலர் பணத்தை பெற்ற செய்தியும் வெளிவந்துள்ளது. (இந்திய சமாதான ஆக்கிரமிப்பு படை அதிகாரிகளுக்கு தமிழ்ப் பெண்களை வழங்கிய துரோக இயக்க தலைவர்களை, ஆயுதக் கேடிகளை அறிவோம்) சாரதாம்பாள் பாலியல் பலாத்காரத்தில் சிறீலங்கா கடற்படைக்கு எதிராக கொதித்த தீவுப் பகுதியில், ஊர்காவற்துறை பருத்தியடைப்பு பகுதியில் ஒரு தமிழ் யுவதியை துரோக இயக்கம் ஒன்றின் போராளி என கருதப்படுபவர், தீப்பெட்டி கேட்டு வீட்டுக்குள் சென்று பாலியல் பலாத்காரம் புரிய முயன்றுள்ளார். அந்த யுவதி மாதவிடாய்க் காலத்தில் இருந்ததால் அவரின் உள்ளாடையில் வெளிப்பட்ட இரத்தத்தை கண்டு பயந்து ஓடித் தப்பிவிட்டார் அந்த ஆண் அதிக்க வெறியன். இதுபோல் வெளிப்படாத சம்பவங்கள் எத்தனை? எத்தனை?

சிறீலங்காப் படையின் ஆணாதிக்க பாலியல் வெறிக்கு பலியான பெண்களின் செய்திகள் வெளிவரும் அளவுக்கு, தமிழீழ ஆணாதிக்க வெறியர்களின் பாலியல் துன்புறுத்தல் - பலாத்கார செய்திகள் வெளி வருவதில்லை. முகம் வெளிப்பட்டும், வெளிப்படாமலும் ஆணாதிக்க பாலியல் வெறிக்கு பலியான பெண்கள் பல நூறு பேர். எந்த இனத்தில், மதத்தில், சாதியில், பிரதேசத்தில் நாட்டில் இருந்து ஆணாதிக்கமும், ஆணாதிக்க பாலியல் வெறியும் வெளிவந்தாலும், எதிர்கொள்ளும், பாதிக்கப்பட்ட பெண்களையும், இணைத்துச் செல்லும் தேசபக்த பெண்கள் அமைப்பு வளர வேண்டும், தேசிய விடுதலையையும் பெண் விடுதலையையும் எதிர் எதிராக நிறுத்தும், முன்பின் வைக்கும், கருத்தாக்கமும், நடைமுறையும் உடைத்தெறிப்பட வேண்டும். இரண்டு சனநாயக கடமைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து நிற்க வேண்டும். தமிழீழ மக்களின் சரி பாதி பெண்கள் விடுதலை அடையாமல் தமிழீழம் எப்படி உண்மையான விடுதலை பெற முடியும். சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும்.

— சுனிதா

www.tamilarangam.net



# தமிழீழம் தேசியவாதப் பார்வையிலா? சர்வதேசியப் பார்வையிலா?

சிறீலங்கா இனவாத அரசை எதிர்த்து 17 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடந்து வருகிறது. தமிழீழப் போராட்டத்தின் பிராந்திய உலக நண்பர்கள் யார், எதிரிகள் யார், தமிழீழ பொருளாதார அமைப்புமுறை எப்படியானது. எவ்வாறு உருவாக்கப் போகிறோம் என்ற பிரச்சினைக்கு அன்று முதல் இன்று வரை தெளிவான பதில் இல்லை. சிறீலங்கா அரசை எதிர்த்து 15 ஆண்டுகளாக யுத்தம் புரிந்து வரும் புலிகள் இயக்கத்திற்கு இன்று 38 நாடுகளில் கிளைகள் (செயலகங்கள்) உள்ளன. பிரிட்டன், பிரான்ஸில் சர்வதேச தலைமையகங்கள் உள்ளன. சர்வதேச ராஜதந்திரங்கள், உதவிகள் என்பது போராடும் இயக்கத்தின் பலம். பலவீனத்தில் இருந்து மட்டுமே தீர்மானிக்கப்படுவதாக நம்பப்படுகிறது. புலிகளின் ஓயாத அலை வெற்றி புலிகளுக்கு சர்வதேச ஆதரவை பெற்று தந்துள்ளதாக கூறப்படுகிறது. ஒரு சில அய்ரோப்பிய நாடுகள் புலிகளுக்கு மறைமுகமாக உதவியை வழங்கி வந்தாலும் தமிழீழப் போராட்டத்தை, சுயநிர்ணய உரிமையை, பிரிவினையை, எந்த நாடும் வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லை; புலிகள் இயக்கத்துடன் அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனக் கூறுவது, தமிழீழ விடுதலை வெற்றியை, தமிழீழ அரசை அங்கீகரிப்பதாக அர்த்தம் கொள்ளக் கூடாது.

சிறீலங்கா அரசுக்கு எதிரான எல்லாரும் நமது நண்பர்கள் என்ற குறுகிய கண்ணோட்டம் எல்லாப் போராளி இயக்கங்களிடமும் இருந்தது. இந்தியரசு போராளி இயக்கங்களை ஆதரித்து எல்லாவகையிலும் கொடுத்தது. ''சோசலிச தமிழீழம்'' தமது இலட்சியம் எனப் பேசிய எல்லா இயக்கங்களும் தமிழீழப் போராட்டத்தின் உறுதியான உண்மையான பிராந்திய, உலக நண்பர்கள் யார் என்ற விடயத்தில் ஒரே பார்வையை கொண்டிருக்கவில்லை; புலிகளைப் பொறுத்தவரை சிறீலங்கா அரசு படைகளை எதிர்த்து போராட எந்த நாடு உதவி செய்தாலும் பெற்றுக் கொள்வது, தமது இலட்சியத்துக்கு தடையாக நேரடியாக தலையிடும் நாட்டை எதிர்த்து போராடுவது என்பதேயாகும். சிறீலங்கா அரசுக்கும் - புலிகளுக்கும் ஏக காலத்தில் ஒரு அன்னிய நாடு உதவி வழங்கினாலும் பெற்றுக் கொள்ளும் கொள்கை கொண்டது. (இஸ்ரேல் சிறீலங்காப் படைக்கும் - புலிகளுக்கும் ஏககாலத்தில் பயிற்சி வழங்கியதும் வெளிப்படை) எந்த நாட்டின் எந்த வகையான உதவியையும் பெற்றுக் கொண்டு தனித்தமிழீழம் அமைக்கப் போராடுவதும் தமிழீழ அரசு. (ஒரு இஸ்ரேல் போன்றோ சிங்கப்பூர் போன்றோ ஒரு நாடாக இருக்கும்) என்பதே புலிகளின் கொள்கை. ஒ.கீ. ஜெயவர்த்தனே 1977 -இல் திறந்த பொருளாதார கொள்கையை கொண்டு வரும் போது இலங்கை 'சிங்கப்பூர்' ஆக மாறும் என்றார். தமிழீழக் கொள்கையில் புலிகள் உறுதியாக நின்று பெரும் இராணுவ வெற்றிகளை ஈட்டி வருவது புலிகளின் அரசியல், தமிழீழத்தின் எதரிகாலம் பற்றிய கேள்விகளை மறைத்து வருகின்றது; புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள், தமிழீழம் எத்தகைய பொருளாதார சமூக அமைப்பாக மாறப் போகிறது என்பதை வெளிகாட்டும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். நிட்சயமாக ஒரு புதிய ஜனநாயக பொருளாதார முறையை அல்லது சோசலிசப் பொருளாதார வடிவத்தை கொண்டிருக்கப் போவதில்லை என்பது தெளிவாக இருக்கிறது; சிறீலங்கா அரசும், பல நவ கொலனிய நாடுகளும் கூறி வந்த சோசலிசமும் [illegible]வமும் இல்லாத கலப்பு

www.tamilarangam.net



பொருளாதார முறையையா? புலிகள் அமுல் படுத்தி வருகிறார்கள். இல்லை அதுதான் சோவியத்தும், சீனமும் திசைமாறியதுடன் கலப்பு பொருளாதாரம் பற்றிய பேச்சும் கைவிடப்பட்டுள்ளது; கலப்பு பொருளாதாரம் பற்றி பேசிய நடைமுறைப் படுத்திய நாடுகள் எல்லாம் இன்று சீர்திருத்த பொருளாதாரம், அல்லது திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் பொருளாதாரப் பாதையில் வீறு நடை போடுகின்றன. தூர நோக்கற்ற தெளிவான பொருளாதார கொள்கையும், நடைமுறைப் பரிசோதனையும் இல்லாத புலிகளின் தமிழீழப் பொருளாதாரம். யுத்த நெருக்கடிக் காலத்தில் உள்நாட்டு வளங்களை உற்பத்தி முறையை தங்கி நின்றாலும் யுத்தம் முடிந்தவுடன் யுத்த நெருக்கடியில் சிதைந்த பொருளாதாரத்தை, வளங்களை சீரமைப்பது முக்கிய தேவையாக இருக்கும் போது நவகொலனிய பொருளாதாரத்தின் முக்கிய அம்சமான ‘‘நல்வாழ்வுப் பொருளாதார திட்ட உதவிகள்’’ வழியாக ஏகாதிபத்தியங்கள், அன்னிய நாடுகள் தமிழீழப் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டுள் கொண்டு வர முயல்வார்கள். இதற்கான சமூக அடித்தள கூறுகள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இயங்கும் "NGO'ண் அமைப்புக்கள், ஆய்வு நிறுவனங்கள் ஊடாக செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழீழம் தனியரசாக வேண்டும், சோசலிச தமிழீழம் மலர வேண்டும் என்ற இலட்சியக் கனவுகளுடன் போராடிக் கொண்டிருக்கிற புலிப் போராளிகளும், தமிழீழ புரட்சிகர சக்திகளும் தங்களது இலட்சியத்தை அடைவதற்காக அறிவுபூர்வமாக ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் இது. இல்லையெனில் தமிழீழம் ஒரு நவகொலனிய தமிழீழமாக, சிறீலங்கா அரசுக்குப் பதிலாக பல நாடுகள் சுரண்டுகிற, ஆதிக்கம் செலுத்துகிற, ஒடுக்குகின்ற தமிழீழமாக மலர்வதை யாராலும், எத்தனை பிரபாகரன் வந்தாலும், மாவீரர்கள் மடிந்தாலும் தடுத்து நிறுத்த முடியாது போய் விடும்.

சிறீலங்கா அரசு ஒரு நவகொலனிய அரசாக இருப்பதால் அரசை எதிர்த்த போராட் டம் என்பதே முழுமையான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் என கணித்து புலிகளின் தொடர்ச்சியான யுத்தத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தமாகவும் சிலர் மதிப்பிடுகின்றனர். ஒரு ஏகாதிபத்திய நாடோ, விரிவாதிக்க நாடோ இரண்டு தரப்புக்கும் ஆயுதங்களை வழங்கி யுத்தத்தை நடத்தும் இராணுவப் பொருளாதார முறை, அல்லது அரசுக்கு பின்னால் உள்ள ஏகாதிபத்திய நாடுகளுடன் முரண்படும் நாடுகள், புதிய தலையீட்டுக்கும், சந்தை விரிவு படுத்தலுக்கும் அலையும் மற்றைய ஏகாதிபத்திய நாடுகள், போராளி இயக்கங்களை இயக்குவதும், கொலனிய கட்டதைவிட நவகொலனிய கட்டத்தில் வேகமும் விவேகமும் பெற்றுள்ளது. எனவே ஒரு இயக்கம் எவ்வளவு மூர்க்கமாக நீண்டகாலமாக உள்நாட்டு அரசை எதிர்த்து போராடுகின்றது என்பதில் இருந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமா - போராட்டமா என்பதை கணிப்பிடக் கூடாது ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலை சொந்த மக்கள் முன்வைத்து செயல்படுகிறதா உள்நாட்டில் அவ்வியக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் எப்படி நடத்தப்படுகிறது என்பதைக் கொண்டும் சர்வதேச அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் போராட்டங்களுடன் உள்ள உறவைக் கொண்டும் (ஏகாதிபத்தியங்களுடன் முரண்படும் அரசுகளுடனான உறவை வைத்தல்ல) கணிப்பிடவேண்டும்.

நவகொலனிய அரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை பயன்படுத்தியும், ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டை பயன்படுத்தியும் தங்கள் இயக்கத்தை, போராட்டத்தை வளர்க்கின்ற மூலோபாயக் கொள்கை கொண்ட இயக்கம் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக, அது நடத்துகின்ற போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக விளங்க முடியாது. எதிரிகளுக்கு இடையிலான முரண்பாட்டை பயன்படுத்துவது என்பது ஒரு நடைமுறைத் தந்திரோபாய பிரச்சனையாக மட்டுமே இருக்க முடியும். மூன்றுலக கோட்பாட்டு அய்க்கிய முன்னணி கொள்கையை சர்வதேச மூலோபாய விடயம் என்ற மட்டத்துக்கு உயர்த்தி பார்க்க முடியாது என்பதும் தெளிவாகும்.

இந்துமா சமுத்திரத்தில் இந்தியரசின் பங்கு

www.tamilarangam.net



பற்றிய கண்ணோட்டத்தில் அனைத்து இயக்கங்களும், இந்தியரசு தமிழீழத்தை பிரித்துத் தந்தால் வாங்கிக் கொள்வோம் என்ற நிலைப்பாட்டில் செயற்பட்டார்கள். புலிகளைத் தவிர மற்றைய இயக்கங்கள் சோசலிசம், சர்வதேசியம். ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி கொஞ்சம் அதிகம் பேசினார்கள். தாங்கள் சோசலிச முகாமின் பக்கம் நிற்பதாக தெரிவித்தார்கள். சோவியத் யூனியன் 1960-களில் சமூக ஏகாதிபத்தியமாக மாறிய பின்னரும், ரசியா சோசலிச நாடு என்றும் இந்து சமுத்திரத்தில் ரசியாவின் உற்ற நண்பன் இந்தியரசு எனவே இந்தியரசை சார்ந்து தமிழீழ நண்பனாக கணித்து தமது சர்வதேசிய கண்ணோட்டத்தை முன் வைத்து செயற்பட்டனர். இன்று முழுக்க முழுக்க இந்தியரசின் கைக் கூலிகளாக மாறிப் போயினர். EPRLF, PLOT, EPDP, TELO, EROS, ENDLF இவர்கள் புலிகளை ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் இல்லை என்று குற்றம் சாட்டி வந்தனர். இவர்களின் சந்தர்ப்பவாத அரசியல். இன்று சிறீலங்கா அரசு எதிர்ப்பும் இல்லாத ஏகாதிபத்திய எதிர்ப்பும் இல்லாத துரோக அரசியல் தளத்தில் நிற்கின்றனர். இந்தியரசு தனது சோசலிச முகமூடிக் கொள்கையை கழட்டி விட்டு ஏகாதிபத்திய உலகமயமாக்கல், நவீன மயமாக்கல் கொள்கையை வெளிப்படையாக கடைப்பிடிக்கிறது. அமெரிக்க இஸ்ரேலிய உறவுகளை நெருக்கமாக்கி கொள்கிறது. ஆனால் தமிழ்த் துரோக இயக்கங்கள் இந்திய சார்பு சிறீலங்கா அரசு சார்புக் கொள்கைகளை கடைப்பிடித்தபடி, ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி பம்மாத்து காட்டி வருகின்றன. தமிழீழ தற்சார்பு பொருளாதாரம், சோசலிசப் பொருளாதாரம் எனப் பேசிய இவ்வியக்கங்களின் தலைமைகள் இன்று சந்திரிகா அரசின் பொருளாதாரத்துள் அடங்கி விட்டார்கள்.

தங்களின் வயிற்றுப் பிழைப்புக்கு வரி வசூலிக்கும், அதற்காக இயக்க மோதல் நடத்தும், பணம் உள்ளவர்களை கடத்தி பணம் பறிக்கும் பொருளாதார முறையை மன்னார், வவுனியா பகுதிகளில் நடைமுறைப்படுத்துகிறார்கள். இத்தலைமைகள் பேசியது தமது இயக்க தலைமையின் பொருளாதாரம் பற்றியா தமிழீழ மக்களின் சமூக பொருளாதார அரசியல் குறித்தா இன்றைய அவர்களின் நடைமுறை நிரூபிக்கிறது.

தமிழீழ புரட்சிகர தேசபக்த போராளிகளே, போராடிக் கொண்டிருக்கும் புலிகளே இன்று தமிழீழப் போராட்டத்தின் உள்நாட்டு எதிரிகளை — நண்பர்களை, உலக எதிரிகளை — நண்பர்களை சரியாக அடையாளம் காண வேண்டிய தேவை இருக்கிறது, யுத்தமுனையில் நமக்கு எதிரே நிற்கின்ற ஆயுதம் தரித்த எதிரிகளை இனம் காண்பது இலகுவானது. ஆனால் சர்வதேச அளவில் நமது எதிரிகளை துல்லியமாக அடையாளம் காண்பதும், அவர்களது தந்திரங்களுக்கு, சதித் திட்டங்களுக்கு பலியாகவும் இருக்க வேண்டியுள்ளது. நாம் பேசுகின்ற கொள்கைகள், இலட்சியங்கள் குறித்து நமக்கு ஆழமான புரிதல் தேவைப்படுகிறது. பழைய இயக்கத் தலைமைகள் போல் கொள்கைகளை 'சுலோகங்களாக' புரிந்து கொள்ளக் கூடாது. பேசக் கூடாது, மக்களை ஏமாற்றக் கூடாது, தமிழீழ சமூகத்தின் அரசியல் பொருளாதார பண்பாட்டு வளர்ச்சி மட்டத்தை கவனித்தால் சனநாயகப் புரட்சி கடமைகள் தீர்க்கப்படா இடத்தில் சோசலிசப் புரட்சி அல்ல, புதிய சனநாயகப் புரட்சியே முதல் கடமையாகிறது, தமிழீழ புதிய சனநாயகப் பொருளாதாரம் எப்படி இருக்க வேண்டும் என்பதை குறித்து தெளிவு தேவைப்படுகிறது. புதிய சனநாயகப் பொருளாதார முறையை உருவாக்க முடியாவிடில் சோசலிசப் பொருளாதாரம் பற்றி நினைத்தும் பார்க்க முடியாது.

இன்றைய ஏகாதிபத்திய நவகொலனியப் பொருளாதாரம் பற்றிய அறிவு இல்லாமல் ஏகாதிபத்திய நவகொலனிய அரசியல் குறித்து தெளிவைப் பெற முடியாது. எனவே இதில் நாம் அக்கறை செலுத்த வேண்டும், படிக்க வேண்டும். இன்று கண்முன்னே புதிய சனநாயக - சோசலிச பொருளாதார முறை, நாடு இல்லை ஆனால் சோவியத்தின், சீனத்தின் அனுபவங்கள், பட்டறிவுகள், மாதிரிகள் இருக்கின்றன. நாம் நமது சமூகத்தின் சமகால வளர்ச்சிக்கு உகந்த ஒரு புதிய முறையை முன்வைக்க வேண்டியுள்ளது. தமிழீழ விடுதலையை வென்றெடுக்கும், புதிய சனநாயகப் பொருளாதாரத்தை கட்டியமைக்கும் முறையில் தான். நமது சர்வதேசிய, தேசிய அரசியல் முன்னேடுப்புக்களும் இருக்க வேண்டும். ஒரு புதிய சனநாயக - சோசலிச அரசின் பொருளா

www.tamilarangam.net



தார மாதிரியை, அரசியலை பின்பற்றுகிற நிலையில் உலகம் இல்லை புதியதொரு புரட்சியை ஏற்படுத்தி காட்ட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில், இயக்கங்கள் மத்தியில் நிலவிய கண்ணேட்டங்கள் சர்வதேச பிராந்திய மாற்றங்களின் பின்பும் கூட, சொந்த பட்டறிவின் பின்னாலும் தெளிவைப் பெறவில்லை. சிறீலங்கா அரசை எதிர்த்து போராடுவது என உறுதிபூண்ட இயக்கங்கள், தங்களின் பிராந்திய சர்வதேச நிலைப்பாடுகளில் கொண்டிருந்த கண்ணோட்டம் குறுகிய நோக்கிலானதாக இருந்தது. உலகம் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய முகாமாகவும், சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாமாகவும் அணி சேர்ந்திருந்த நிலையும், அமெரிக்க முகாமுக்குள் "NATO" ஒப்பந்த நாடுகளும், சோவியத் முகாமுக்குள் 'வார்சா' ஒப்பந்த நாடுகளும் விசேடமான அரசியல் - இராணுவ உறவுகளை பேணி வந்தன. எல்லா ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நவகொலனிய நாடுகளும் இரு பெரும் உலக முகாம்களின் பொருளாதார அரசியல் இராணுவ சர்வதேச சமனிலைச் செல்வாக்குக்குள் இணைக்கப்பட்டிருந்தன. முதலாளித்துவ ஆளும் வர்க்க கட்சிகள் கூட முகாம் பிரிப்பில் பிளவுப்பட்டிருந்தன. அந்தளவுக்கு வரலாற்றில் முதன் முதல் தோன்றிய சோசலிசப் புரட்சியும் அதன் சர்வதேசப் பொருளாதார அரசியல் சமூக கலாச்சார உறவுகள், முதலாளித்துவ ஏகாதிபத்திய சமூக அமைப்பின் நாடுகளின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளைவிட சிறந்து விளங்கியது. பொருளாதாரம் அரசியல் பண்பாடு, அறிவியல், மனிதவுரிமை, அரசு அமைப்பு என சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் ஏகாதிபத்திய முதலாளித்துவ முறைக்கும் சோசலிச முறைக்கும் இடையிலான நேரடி வேறுபாட்டை, சிறப்பை உலக மக்கள் கண்கூடாக கண்டனர். சோசலிசப் புரட்சி நடவடிக்கைகளும், புதிய சனநாயகப் புரட்சிகளும் உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரவியது. ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட குட்டி முதலாளிய தேசிய முதலாளிய இயக்கங்கள் கூட ''சோசலிசம்'' என்ற இலட்சிய தாகத்தை முன் வைத்து போராடின. ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்துவது என்ற அடிப்படையில் சோசலிச முகாமுக்குள் நின்றன. சோசலிச அரசுகளின் உதவிகளை பெற்றன.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய முகாம் தன்னை தக்க வைப்பதில் முழுக் கவனம் செலுத்தியது. கூடவே சோசலிச முகாமை அதற்குள்ளே உள்ள முதலாளித்துவ சமூகக் கூறுகளை கொண்டே மறைமுகமாக தாக்கி வந்தது. பல சதிகளில் ஈடுபட்டது. 1950-களின் பிற்பகுதியில் சோவியத் யூனியன் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த முதலாளித்துவ பாதையாளர்களால் வழி மாற்றப்பட்டது.

சோசலிச முகாமுக்குள் நவீன திரிபுவாதப் பாதைக்கும் (சொல்லில் சோசலிசம் செயலில் முதலாளித்துவம்) விஞ்ஞானபூர்வ சோசலிசப் பாதைக்கும் இடையில் மாபெரும் விவாதம் நடந்தது; 1960-களின் முற்பகுதியில் மக்கள் சீனத்தின் தலைமையிலான சோசலிசமுகாம், ரசியா தலைமையில் திரிபுவாதமுகாம் என சோசலிச முகாம் பிளவு கண்டது.

அமெரிக்க, ரசிய ஏகாதிபத்திய முகாம்களை சாராமல் சர்வதேசக் கொள்கைகளில் நடந்து கொள்ளும் நோக்கில் 'அணி சேரா நாடுகள்' (NAM) ஒரு முகாமாக உருவாகியது. பெரும்பாலான நவகொலனிய நாடுகள் இதில் அங்கம் வகித்தன. அதேவேளை பழைய அமெரிக்க - ரசிய உறவுகளையும் பொருளாதார - அரசியல் - இராணுவ உறவுகளையும் பேணி வந்தன. அமெரிக்க ஏகாதிபத்திய முகாமுக்கு சோவியத்தில் ஏற்பட்ட மாற்றம் தென்பை ஏற்படுத்தியது. ஆனால் சீனத்தின் தலைமையிலான புரட்சிகர முகாமின் நிலை நிறுத்தம் ஏகாதிபத்தியத்தை குலுக்கிக் கொண்டிருந்தது. 1980களின் முற்பகுதி வரை அமெரிக்காவுக்கும் ஏகாதிபத்திய அமைப்புக்கும் எதிராக உலகம் முழுவதும் நடந்த சோசலிச, புதிய சனநாயக எழுச்சிகள் கிளர்ச்சிகள், போராட்டங்கள் இதை நிரூபித்திருக்கிறது. மாபெரும் விவாதத்தின் போதே சீன கொம்யூனிசக் கட்சிக்குள் வெளிப்பட்ட முதலாளித்துவ போக்கு 1970களின் கடைசியில் மாஓ மரணத்துடன் நடந்த அதிகாரக் கைப்பற்றல் மூலம் சீன முதலாளித்துவ பாதையாளர்களால் முதலாளித்துவ பாதைக்கு சீனம் திருப்பிவிடப்பட்டது.

www.tamilarangam.net



உலகில் முதலாளித்துவ பொருளாதார முறை, சோசலிசப் பொருளாதார முறை என இரண்டும் தனித்தனியான மாதிரிகளும் உலகில் வெளிப்பட்ட அதேவேளையில் கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டத்தில் புதிய சனநாயகப் புரட்சியை நடத்தி வெற்றி பெற்ற நாடுகள் தவிர மற்றைய கொலனிய நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் ஏகாதிபத்தியங்களுடன் சமரசம் ஏற்படுத்திக் கொண்டு, நவகொலனிகளாக மாறின. இந்நாடுகளில் அரசு அதிகாரத்தை கைப்பற்றிய தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ பெரும் நிலவுடைமை வர்க்க ஆளும் கட்சிகள், தமது முதலாளித்துவ பொருளாதார முறையுடன், சோசலிச பொருளாதார முறையின் சில வடிவங்களை எடுத்து இணைத்து, தமது பொருளாதாரத்தை 'கலப்புப் பொருளாதாரம்' என்றனர். அணிசேரா இயக்க அரசியலும், கலப்பு பொருளாதார முறையையும் பின்பற்றிய நாடுகள் எல்லாம் இன்று ஏகாதிபத்திய திறந்த உலக பொருளாதார முறைக்கும், ஏகாதிபத்திய அரசியல் வழிக்கும் சென்று விட்டன.

நவகொலனிய நாடுகளின் முதலாளித்துவ தேசிய இன விடுதலை இயக்கங்கள் 'சோசலிசம்' பற்றி பேசினாலும், நேரடியாக ஏகாதிபத்திய நவகொலனியப் பொருளாதார அரசியல் முறைக்குள் சமரசப்பட்டு விடுகின்றன. உள்நாட்டு அரசை எதிர்த்து உறுதியாக உக்கிரமாக போராடினாலும், இவ்வியக்க தலைமைகளின் குட்டி முதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ அரசியல், இராணுவ மார்க்கம், உலகில் உள்ள எல்லாவற்றையும் பயன்படுத்தி தமது இலட்சியத்தை நிறைவேற்றுவது என்பதாகும். நாம் எல்லாரையும் எதிர்க்க கூடாது பலயீனமாகவுள்ளோம். உள்நாட்டு அரசை முதலில் எதிர்ப்போம். மற்றைய நாட்டு அரசுகளை பயன்படுத்தும் கொள்கையை முன்வைக்கின்றனர், சர்வதேசியப் பார்வை என்பது இவர்களிடம் இல்லை என்பதல்ல. மாறாக எல்லாவற்றையும் பயன்படுத்தும் கண்ணோட்டமே இவர்களது சர்வதேசியப் பார்வை, இறுதியில் ஏகாதிபத்திய ச ர் வ தேசிய கொள்கைக்கு பலியாகிறார்கள். எல்லாச் சக்திகளையும் பயன்படுத்துகின்ற, எல்லா நாடுகளாலும் பயன்படுத்தப்படுகின்ற இவ்வியக்கங்களின் செயற்பாடு, வளர்ச்சி என்பது அபரீதமாக உலகில் புதுமையாக தோன்றும் தன்மை பெற்றது.

ஏகாதிபத்திய நாடுகளும், விரிவாதிக்க நாடுகளும், உலக, பிராந்திய 'கொள்கை வகுப்பு படிப்பு கல்விக் கூடங்களை' நடத்தி வருகின்றன. (CIRS, CEUPS, CSEAS...) இதில் தேர்ச்சியுள்ள அறிவு ஜீவி (சீவி)கள் (THINK TANK) முன்னாள் கொம்யூனிஸ் கட்சி அறிவு ஜீவிகளும் உள்ளனர்.

நாடுகளின் தேசிய, சர்வதேசிய கொள்கை வகுப்புக்கான தகவல் வங்கியாகவும் (IB) செயற்படுகின்றனர். இலங்கையை பிரிட்டன் கடைசியாக ஆக்கிரமிப்பு செய்து கொலனிய ஆட்சி செய்தது. இதை மட்டும் முன்னிறுத்தி போர்ச்சுக்கல், கொலன்ட் நாடுகளின் கல்விக் கூடங்கள் 'பிரித்தானிய எதிர்ப்பை' மட்டும் ஏகாதிபத்திய எதிர்பாக முன்னிறுத்துகின்றன. அதேபோல் நவகொலனிய கட்டத்தில் இலங்கையில் ஜப்பானிய முதலீடு அதிகம் (முதலீட்டு அளவில் இருப்பதைக் காட்டி மற்றைய நாட்டு கல்விக் கூடங்கள் 'ஜப்பானிய நவகொலனிய எதிர்ப்பை' மட்டுமே ஏகாதிபத்திய எதிர்ப்பாக முன்னிறுத்துகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டை திசைதிருப்ப குறிப்பிட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலை முன்தள்ளப்படுகிறது.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம், சோசலிசப் புரட்சியின், புதிய சனநாயகப் புரட்சியின் தோல்வி அனுபவங்கள். ரசியா, சீனா முதலாளித்துவ பாதைக்கு திரும்பியதில் ஏற்பட்ட அனுபவங்கள் மிகச் சிறப்பாக கணக்கில் கொண்டது, பாடம் படித்து கிரகித்துக் கொண்டது. அவற்றில் இருந்து முதலாளித்துவ சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான மக்களின் போராட்டவழிகளை தடுப்பதற்கும், திசைதிருப்புவதற்குமான ஆயிரம் வழிகளை 'நல்வாழ்வு திட்டங்களை' உலகக் கொள்கையாக, குறிப்பான நாடுகளுக்கு, குறிப்பான வழிகள் மூலம் நடைமுறைப் படுத்துகிறது. ரசியாவையும், சீனாவையும் கூட பொருளாதார ரீதியில் ஏகாதிபத்திய நாடுகளின்,

www.tamilarangam.net



நிதி நிறுவனங்களிடம் கையேந்த வைத்திருக்கிறது. அன்னிய முதலீட்டுக்காக காத்திருக்க வைத்திருக்கிறது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய முகாமின் உலக ஆக்கிரமிப்பு கொள்கைகளை தடுத்து நிறுத்தும் எதிர்த்துப் போராடும் நிலையை இழந்துவிட்டன. சர்வ தேசப் பொருளாதார அரசியல் - இராணுவ - நிறுவன விவகாரங்களில் தமது நாட்டுக்கு நலனுக்கு முரண்பாடானவற்றை எதிரொலிக்கும் சக்தி மட்டுமே உள்ளது. பிராந்திய ஆதிக்கத்தை கட்டிக் காப்பாற்ற முயல்கின்றன.

1980-களின் பின் உலக ஏகாதிபத்திய முகாம், உலக சோசலிச சக்திகள் மீது (நாடுகள் இல்லை) அனைத்து துறைகளிலும் முன்னேறி தாக்கி வருகிறது. சோசலிச சக்திகள் தாங்கள் சந்தித்துள்ள வரலாற்று ரீதியான தற்காலிக பின்னடைவு, தேக்கங்களில் இருந்து பாடம் கற்று மீண்டும் முன்னேழுகிறார்கள்.

அமெரிக்க, ரசிய ஏகாதிபத்தியங்கள் உலகை பங்கிட்டுக் கொண்டிருந்த நிலைமையில், ஒவ்வொரு பிராந்தியங்களிலும் இவற்றுக்கு மிக நெருங்கிய சார்பான நாடுகளை தங்களுடன் கூட்டிணைத்து வைத்திருந்தன. தெற்காசியாவில் பாகிஸ்தான் அமெரிக்க சார்பு நாடாகவும், இந்தியா ரசிய சார்பு நாடுகளாகவும் வெளிப்பட்டன. இந்தியாவின் பூகோள நிலை இந்துமா சமுத்திரத்தில் முக்கியத்துவம் பெற்றது. உலக நிலைமையில் சோசலிச முகாம் சிதைவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் நிகழ்ச்சிப் போக்கில் 1980-களில் தொடங்கி ஏகாதிபத்திய முகாம், திறந்த பொருளாதாரக் கொள்கை உலகமயமாக்கல், நவீனமயமாக்கல், இவை படிப்படியாக பல கட்டங்களுடாக நவகொலனிய நாடுகள் மீது வெளிப்படையாக ஏகாதிபத்திய ஆதிக்கத்தை அனைத்து துறைகளிலும் (பொருளாதாரம் அரசியல் பண்பாடு இராணுவம் அரசு அமைப்பு விவகாரங்கள்) அரங்கேற்றி வருகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்திய முகாம் தனக்கு எதிரான முகாம்களின் சிதைவை, செயற்பாடற்ற தன்மையை உறுதிப்படுத்திய பின் சர்வதேச அதிகாரச் சமநிலையை பலப்படுத்தும் வகையில் பிராந்தியங்களின் ‘நட்பு நாடு’ கொள்கை அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார விஸ்தரிப்பு முக்கியத்துவம் கொடுக்கிறது. மேற்காசியாவில் ‘இஸ்ரேலை’ கையாளும் விதம், தெற்காசியாவில் ‘பாகிஸ்தானை’ கையாழம் விதத்தில் வெளிப்படுகிறது. பாகிஸ்தானை பயங்கரவாத ஊக்குவிப்பு நாடாகவும், மேற்காசியாவில் இருந்து ‘பயங்கரவாதம்’ தெற்காசியாவுக்கு மாறிவிட்டது எனவும் அறிவிக்கிறது. இந்தியாவை உலகின் மிகப் பெரிய சனநாயக (சந்தை) நாடு என்கிறது அமெரிக்க தெற்காசிய கொள்கை வகுப்புப் பிரிவு. நவகொலனிய நாடுகள், ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பு முறைக்குள் மிக வேகமாக நவீனமயமாக்கல் மூலம் உலகமயமாகி வருகிறது. நிதித்துறை தொழிற்துறை, விவசாயம், வணிகம், சேவைத் துறை என அனைத்திலும் பல்தேசியக் கொம்பனிகளும் (ஞமீஇ'கு) தேசங்கடந்த நிறுவனங்களும் (கூமீஇ'கு) தங்களின் முன்னேறிய அறிவியல் தொழில்நுட்பத் தின் மூலம், நிதிவளம் மூலம் நவகொலனிய நாடுகளின் சுதேசிய பொருளாதாரத்தை அதன் இயல்பான வளர்ச்சியை அனைத்து நிலைகளிலும் நசுக்கி அழித்து கொடி கட்டி பிறக்கிறது. இதுவே உலக நவீனம்.

நவகொலனிய நாடுகளில் உள்நாட்டு அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக நடக்கின்ற தேசிய இன விடுதலைப் போராட்டங்கள். ஏகாதிபத்திய நவகொலனிய எதிர்ப்பு தேசியப் போராட்டங்களாகவும் இருந்தால் மட்டுமே உண்மையான தேசிய விடுதலை என்பது சாத்தியம், ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் வெறும் உள்நாட்டு எல்லைப் பிரிப்புக்களாகவே இருக்கும். புதிய அரசும் மக்களும் தொடர்ந்து ஏகாதிபத்திய நவகொலனிய சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் முகங் கொடுக்கும். கொலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டம். ஏகாதிபத்திய முறையுடன் சமரசம் கண்டதால் நவகொலனிய நாடுகள் மீண்டும் தேசிய விடுதலைப் போராட்டம் நடத்த 50 ஆண்டுகளின் பின் தள்ளப்பட்டிருக்கிறது. எனவே நவகொலனிய நாடுகளில் நடக்கும், வெடித்தெழும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களை உள் நாட்டு இன, மத வெறி அரசுக்கு எதிரான போராட்டமாக மட்டும் முன்னெடுக்

www.tamilarangam.net



காமல் ஏகாதிபத்திய எதிர்ப்பு, விரிவாதிக்க எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டமாகவும் ஒன்றிணைத்து முன்னேடுக்க வேண்டி கடமை புரட்சிகர தேசபக்த இயக்கங்களுக்கு உள்ளது.

ஏகாதிபத்தியம், தனது உலகமயமாக்கல் கண்ணோட்டத்தில் உலக மக்களை நாடுகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து கொண்டிருக்கும போது உலகின் எந்த மூலையில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டமும், தேசிய வாதப் பாதையில் சென்று வெற்றியடைய முடியாது. அது ஏகாதிபத்திய உலக கண்ணோட்டத்திற்கு பலியாகியே தீரும், எனவே ஏகாதிபத்திய உலக கண்ணோட்டத்திற்கு பதிலாக தொழிலாளி வர்க்க சர்வதேசிய கண்ணோட்டத்தில் இருந்து, தேசிய விடுதலைப் போராட்டம் முன்னேடுக்கப் பட வேண்டும். அப்போதுதான் தேசத்துக்கும் மக்களுக்கும் விடுதலை கிடைக்கும் தமிழீழ புரட்சிகர தேசபக்த போராளிகள் இந்தப் பாதையில் மட்டுமே செல்ல முடியும். வெற்றி ஈட்ட முடியும்.

— கலை

# தமிழீழ அகதிகள் தேசபக்தர்களா? பயங்கரவாதிகளா?

1995-இல் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிப்பு செய்ய சிறீலங்கா அரசு படையெடுப்பு செய்தது. 2 இலட்சம் மக்கள் யாழை விட்டு அகதிகளாக வெளியேறினர். வெளியேற்றப் பட்டனர். இன்று மீண்டும் 2000-இல் புலிகள் யாழை விடுதலை செய்வதற்காக புலிகளின் படை நடப்பு நடந்து வருகிறது. இந்த ஓயாத அலையில் தமிழீழ மக்களும் அகதிகளாகுவதற்கும், இடப்பெயர்வுக்கும் கூட ஓய்வு இல்லை. யாழுக்குள் வடமாராட்சிக்கும், வலிகாமத்துக்கும், வன்னிக்கும் இடம் பெயர்வது ஒருபுறம். பாக்கு நீரிணையின் ஓயாத கடல் அலையை தாண்டி தமிழ் நாட்டுக்குள் அகதிகளாக புகுந்து கொண்டிருக்கிறார்கள். மறுபுறம்,

புலிகள் மரபு வழி யுத்தத்துக்கு வளர்ந்தபின், முன்னர் போல் அன்றி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளிறே முன்னறிவிப்பு செய்து தாக்குதல் நடத்துகின்றனர்; கொரில்லா யுத்த நடவடிக்கைகள் யுத்தத்தில் அதிகமாக இருப்பதால் முன்னறிவிப்பு செய்யாத தாக்குதல்களே அதிகமாக இடம் பெறுகின்றன. சிறீலங்கா இராணுவம் தோல்வி மேல் தோல்விகளை சந்திப்பதால் முன்னர் போல் எச்சரிக்கை பிரசுரங்களை, முன்னறிவிப்புக்களை செய்யாமல், விமானத்தில் இருந்து குண்டுகளை மட்டுமே போடுகிறது. யுத்த வெறியர்கள், மக்களின் அரசியல் அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்காதவர்கள் தோல்வியும் — விரக்தியும் ஏற்படும்போது 'இராணுவ உளவியல்' மக்களை மனிதக் கேடயங்களாக பாவிப்பதும், சம்பிரதாய முன்னறிவிப்புகளைக் கூட கைவிட்டு கொடூரமாக மக்கள் மீது தாக்குதல் நடத்துவது யுத்த வரலாற்றில் புதிய விடயமல்ல. இதுதான் யுத்தம் உக்கிரம் அடைந்துள்ள சூழலில் வாழும் நாம் எதிர் கொள்கிறோம்.

மக்களின் பாதுகாப்பான வெளியேற்றம் இடப்பெயர்வுக்கு எனக் கூறி முன்வைத்த 'தற்காலிகப் போர் ஓய்வைக் கூட' ஓயாத அலையின் இராணுவ இரகசியத்தை புரிந்த அரசு படைகள் செவிசாய்க்கவில்லை. ICRC செஞ்சிலுவைச் சங்கம், UNHCR அகதிகளுக்கான அய்நா நிறுவனம் அகதிகளின் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு எடுத்த நடவடிக்கைகளைக் கூட அழுத்தமாக எடுக்கவில்லை என புலிகளே விசனப்படுகிறார்கள். அகதிகள் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுத்து இராணுவ இராஜ தந்திர நகர்த்தலை பலயீனப்படுத்த எதிரிகள் தயாரில்லை. புலிகளுக்கு ஓய்வு கொடுத்து ஓயாத அலையை பலப்படுத்தக் கூடாது என்ற திட்டத்தால், படைகளின் எறிகனை வீச்சும், குண்டு வீச்சும் ஓய்வு ஒளிச்சல் இன்றி தொடர்கிறது.

யாழுக்கும் - திருகோண மலைக்கும் இடையிலான பயணிகள் கப்பலை இயக்குவதில் அக்கறை காட்டப்படுகிறது. யூன் மாதத்தில் யாழுக்கு வந்த

www.tamilarangam.net



உணவுக் கப்பலை (?) புலிகள் படைகளுக்கு ஆயுதம், உணவு கொண்டு செல்லப்பட்டதாக கூறி தாக்கி மூழ்கடித்தனர். கடலில், அரசு மக்களுக்கான உணவு யாழ் வியாபாரிகள் எடுத்து சென்றனர் என்றது. தரை வழிப் போக்குவரத்து இல்லாத நிலையில், கடல் வழிப் போக்குவரத்தில் ஏற்பட்ட நெருக்கடியால், கருங்கேசன் துறை, திருகோணமலை துறை முகாம் களில் மக்கள் காத்து கிடக்கின்றனர். இப்போது ICRC, அரசிடம், புலிகளிடம் தாக்குவதில்லை என்ற உறுதி மொழியை எழுதி வாங்கிக் கொண்டு 'றிங்கோ சிட்டி' ''திருமலை நகரம்'' என்ற கப்பலை மக்கள், உணவுப் பரிமாற்றத்துக்கு இயக்க ஒப்பந் தம் செய்துள்ளனர். வேறு கப்பல்கள் இயக்கப்படும் என தெரிகிறது. UNHCR இடம் பெயர்ந்தோருக்காக அக திகள் நலன்புரி நிலையங்களுக்கு 70 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது.

தென்மராட்சியல் 40,200 மக்கள் இடம் பெயர்ந் துள்ளனர். எறிகனை வீச்சுக்கு பயந்து மக்கள் பதுங்கு குழிகளில் உள்ளனர். குண்டு வீச்சுக்களில் பாதிக்கப் பட்ட மக்கள் மருத்துவ வசதி இன்றி வவுனியா வுக்கும், மல்லாவிக்கும் கொண்டு செல்லப்படுகின் றனர். பல பத்து பேர் இறந்து விட்டனர். MSR, ICRC ஊழியர்களைக் கூட எல்லா யுத்தப் பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு உதவ அரசு அனுமதிப்பதில்லை, சங்குப்பிட்டி வழியாக மக்கள் வன்னிக்கு செல்ல 4 நாட்கள் ஆகிறது. யுத்தம் மேலும் விரிவடையும் என மக்கள் எதிர்பார்ப்பதால் அரசு கட்டுப்பாட்டு பகு திக்குள் செல்வதை தவிர்க்கின்றனர். வன்னியில் உள்ள பழைய அகதிகளுடன் மேலும் எண்ணிக்கை கூடுகிறது. உணவுக்கும், மருந்துக்கும், மழை, வெயில் கோரத்தக்கும், பொருள்களை சுமப்பதற்கும், பாதுகாப்பாக முன்னே நடப்பதற்கும் மக்கள் படும் வேதனைகள், யுத்தம் புரிகிறவர்கள் படும் கஷ்டங் களை விட கூடுதலாகவுள்ளது கொடூரமாகவுள்ளது. வவுனியாவில் அகதிகள் தங்களின் பணக் கொடுப் பனவு, உட்பட சில கோரிக்கைகளை முன்னிறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியுள்ளனர். யாழில் 1260/- பெறுமதியான உலர் உணவு போதா து எனக் கோரிப் போராடத் தயாராகி வருகின்றனர்.

புது நூற்றாண்டில் மன்னாரில் இருந்து தமிழ்நாட் டுக்கு 'ஓயாத கடல் அலையை' தாண்டி 1300-க்கும் மேற்பட்ட அகதிகள் சென்றிருக்கிறார்கள். தமிழீழ மண்ணில் படும் சொல்லெணா துயரங்களை, துன்பங் களைத் தாண்டி, உயிரைப் பாதுகாக்க, வாழ்வைத் தக்கவைக்க முனையும் தமிழீழ அகதிகள் கரையிலும், கடலிலும் படகுகளிலும், கடல் திட்டுக்களிலும் வாழ்வா சாவா என தத்தளித்து கரையேற வேண்டி யுள்ளது. இந்திய மத்திய, மாநில அரசுகளின் அகதிக் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம். இதுவரை தஞ்சம் கோரிச் சென்ற அகதிகள் அனுபவிக்காத கடல் துயரத்தை இன்று அகதிகள் முகங் கொடுக்கின்றனர்.

21 அகதிகள் யூலையில் கடலில் மூழ்கடித்து கொலை செய்யப்பட்டது. குமுதி என்ற இளம் பெண் படகு ஓட்டிகளால் பாலியல் பலாத்காரத் துக்கு உள்ளாக்கப்பட்டது. அகதிகள் உடல்கள் கரையில் பிணங்களாக ஒதுங்கிய கோர நிகழ்ச் சிகள், கறுப்பு யூலை அகதிகள் வாழ்வில் இன்றும் தொடர்வதை காட்டியது.

தரையில் மட்டுமல்ல, கடலிலும் அகதிகள் மூழ்க டிக்கப்படுவது பெண்கள் பலாத்காரப்படுவது வெளிப்பட்ட சில செய்தி மட்டுமே இது. மூழ்கடிக் கப்பட்ட மறைக்கப்பட்ட செய்திகள் எத்தனை?

தலை மன்னாருக்கும் - தனுஷ்கோடிக்கும் இடைப் பட்ட கடல் தூரம் 18 KM இந்தப் பாதையில் 8 மணல் திட்டுக்கள் இருக்கின்றன. 3 இலங்கை கடல் எல்லைக்குள், 5 இந்திய கடல் எல்லைக்குள் உள்ளது. இந்தியரசு (மத்திய - மாநில) தமிழீழ அகதிகள் தமிழ் நாட்டுள் நுழைவதை இப்போது விரும்பவில்லை. ''அகதிகள் வருவதை முழுக்க முழுக்க தடுக்க முடியாவிட்டாலும், குறைக்க முயற்சி எடுக் கிறோம். அகதிகளுடன் பயங்கரவாதிகள் (புலிகள்) ஒன்று கலந்து வருவதால் அதை தடுப் பது தமது கடமை'' இந்திய கடற்படை கொமாண்டர் பிரான்சிஸ்ன் கூற்று இது; 21 அகதிகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டது பற்றி தமிழ்நாட்டு அதி காரி ஒருவர். ''இத்தகைய பிரச்சனைகள் இருப் பதால் அகதிகள் தங்கள் நாட்டில் இருக்க பழக வேண்டும்'' என்கிறார்.

அகதிகளை கூட்டிச் சென்று கரை சேர்க்கும் விசைப்படகுகள், இந்தியக் கடற்படை, கடலோர காவல் படை, ரோந்துப் படைகளால் பறிமுதல் செய்யப்படுகிறது. படகு ஓட்டிகள் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். கரை இறங் கிய அகதிகள் பல வகையான விசாரணைகளுக்கு புலனாய்வுப் பிரிவு (வ) பொலிசால் உட்படுத்தப்ப டுகின்றனர், சந்தேகிக்கப்படுபவர்கள் தனியாக பிரிக் கப்பட்டு எடுத்து செல்லப்படுகிறார்கள். இங்கும் புல னாய்வுப் பிரிவுக்கு உதவும் தமிழ்த் துரோக ஆள்க்காட்டிகள் செயல்படுகின்றனர்.

தலை மன்னாரில் தலைக்கு 5000/- முதல் 15,000/- வரை அகதிகள் படகில் செல்ல பணம் வசூ லிக்கப்படுகிறது. (அகதி ஏழை மக்களை தமிழ்நாட் டுக்கு கூட்டிச் செல்ல இந்த வியாபாரம், பணக்கார அகதிகளை வெளிநாடுகளுக்கு கூட்டிச் செல்ல 5 இலட்சம் முதல் 15 இலட்சம் வரை, ஆள் கடத்தும் வியாபாரிகள் இந்த யுத்தத்தில் உருவாகி இருக்கி

www.tamilarangam.net



றார்கள். வளர்ந்து இருக்கிறார்கள்.) படகு ஓட்டிகள் கடற்படைக்கு பயந்து அகதிகளை 4-வது, 5-வது மணல் திட்டுக்களில் இறக்கி விடுகின்றனர். அல்லது மீன்பிடிக்க கடல் எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களிடம் தலைக்கு விலை பேசி அகதிகளை படகு மாற்றி விடுகிறார்கள். சில வேளைகளில் மீன்பிடிப் படகுகள் தமிழகக் கரை திரும்பும்போது, கடல் கொந்தளிப்பாக இருக்கும்போது தங்களின் படகையும் அவற்றுடன் சேர்ந்து சென்று 6-வது, 7-வது திட்டுக்களில், கரைகளில் இறக்கி விடுகின்றனர். 6-வது திட்டில் இருந்து கரை கண்ணுக்கு தெரியும். இத்திட்டு 5 அடி தண்ணீரில் உள்ளது. இத்தனை வேதனைகளின் பின்தான் அரிச்சமுனை, தனஷ்கோடியில் அகதிகள் கரை சேர்கின்றனர். பின் சோதனைகளுக்கு பிறகு மண்டபம் முகாமுக்குள் செல்கிறார்கள். வேறு முகாம்களுக்கு பிரித்து அனுப்பப்படுகிறார்கள்.

தலை மன்னாரில் ஆயிரக் கணக்கான அகதிகள் பசி, பட்டினியுடன் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், பிள்ளைத் தாச்சிகள் என கடல் தாண்டி உயிரைக் காப்பாற்ற காத்துக் கிடக்கின்றனர். தரையில் வாழ அனுமதிக்காது குண்டு மழை பொழிந்த சிறீலங்கா வான் படையும் இராணுவமும், கடல் தாண்டிச் செல்ல கடற்படையும் தடுக்கிறது. 350 அகதிகள் நடுக்கடலில் பிடிக்கப்பட்டு, மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இளம் வயதுடையவர்கள் இராணுவ முகாம்களில் சமையல், துப்புரவு பணிகள் செய்ய வைக்கப்படுகின்றனர்.

யூன் நடுப்பகுதியில் 26 அகதிகள் படகு ஓட்டிகளால் (திட்டின் பெயர்ப் பலகை மாற்றம், கடற்படை அச்சத்தால்) 3-வது மணல் திட்டில் இறக்கிவிடப்பட்டனர். 2 நாள் கடற்காற்று குளிர். உணவு, தண்ணீர் இன்றி அகதிகள் காத்து இருந்தனர். தமிழக அரசோ, இந்திய கடற்படையோ காப்பாற்றவில்லை உதவவில்லை. இலங்கைக் கடல் எல்லைக்குள் தலையிடக் கூடாதாம் (இந்திய முப்படைகளும் மனிதாபிமான உதவியாக யாழில் இருந்து சிறீலங்கா படைகளை வெளியேற்ற தயாராக இருந்தன. கடைசியில் அரசுக்கு 450 கோடி ரூபா கொடுத்தது.) சிறீலங்கா கடற்படைக்கு தகவல் கொடுத்து சிறீலங்கா கடற்படை சென்று கைது செய்து வந்தது. 26 அகதிகளில் ஒருவர் மணல் திட்டில் இறந்துவிட்டார், இன்னொருவர் மயக்கமுற்ற நிலையில் இருந்தவரையும் அங்கே விட்டு விட்டு 24 அகதிகளை பிடித்துக் கொண்டு வந்து மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர். என்ன கொடுமை இது. கடலில் மூழ்கடிக்கப்பட்ட அகதிகளுக்காக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட குமுதினிக்காக நியாயம் கோரி கண்ணீர் வடிக்க முடிகிறது. கறுப்புக் கொடி ஏற்ற முடிகிறது தமிழ்நாட்டு அகதி முகாம் மக்களால் நீதிகோரி நியாயம் வேண்டி, காந்தியின் மண்ணில் ஒரு அகிம்சை வெடித்தெள வேண்டாமா?

சிறீலங்கா அரசும், இந்தியரசும் அகதிகளை எப்படி அணுகுகிறது என்பதற்கு வேறு உதாரணம் வேண்டுமா? தமிழீழ மக்களுக்காக இந்தியா தலையீட்டால் எற்கலாம் என்கிறது **OFFER** தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன், ஈழ சுதந்திரன், ஈழ அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின், தலைமையின் அரசியல் என்ன என்பது அகதி சேவை என்ன என்பதை இனியும் அகதிகள் புரியாமல் இருக்க முடியாது.

தமிழ் நாட்டுக்கு வரும் ஏழைத் தமிழீழ அகதிகளின் அறியாமை, கல்வி இன்மை, ஏழ்மை எல்லாவற்றையும் எல்லா அயோக்கியர்களும், வியாபாரிகளும் அவர்களுக்கான அரசுகளும், ஆணாதிக்க வெறியர்களும் ஏமாற்றி பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்கிறார் அகதிகளுக்காக ஆதரவுப் பணியில் ஈடுபடும் 'பிரணவானந்தா' மீண்டும் அகதிகள் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சிறீலங்கா இனவாத அரசின் தமிழின ஒடுக்குமுறைால் இனக்கலவரங்களால், 1958 முதல் 1983 வரை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இலங்கைத் தீவுக்குள் இடம் பெயர்ந்தார்கள். அகதிகளானார்கள் ''லங்காராணி''-இலிருந்து ''லங்காமுடித்த'' கப்பல் வரை ஏற்றி இறக்குகிறது.

1983-களுக்கு பின், தமிழினப் படுகொலைக்கு பின் தமிழீழ அகதிகள் பிரச்சனை ஒரு உள்நாட்டு பிரச்சனை என்ற எல்லையைத் தாண்டி உலகளாவிய பிரச்சனையாக மாறிவிட்டது. விசேசமாக இந்தியாவின் தலையீடு என்பது நேரடியாக அகதிகள் விவகாரங்களை காட்டி வெளிப்பட்டு நிற்கிறது. 83-களின் பின் அகதிகள் விவகாரம் யுத்தத்துடன் தொடர்புபட்டதாக மாறிவிட்டது. யுத்தம் உக்கிரம் அடையும்போது அகதிகள் வெளியேற்றம் மற்றும் அது தொடர்பான சிக்கல்கள் அனைத்தும் விஸ்வரூபம் எடுக்கும். இந்தியத் தலையீட்டுக்கு எதிரான போதும் சிறீலங்கா அரசுக்க எதிராகவும் தமிழீழ தேசிய விடுதலை யுத்தச் செயற்பாடுகளின் தாக்கம், அகதிகள் விவகாரத்தில் அடியொற்றி நிற்கின்றது. அகதிகள் பிரச்சனைக்கும் யுத்த நிறுத்தம் அமைதி, சமாதானம் இவற்றுக்கு இடையிலான உறவை வெளிப்படுத்துவதன் போக்கில் ஆக்கிரமிப்பு அரசியலும், விடுதலை அரசியலும் உலகளவில் எதிர் எதிர் நிலையில் இயங்கிக்

www.tamilarangam.net



கொண்டிருக்கிறது.

ஆக்கிரமிப்பு படைகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கும், விடுதலைப் படைகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கும் இடையில் மோதல்கள் நடக்காதவரை அமைதி போல் தோற்றமளிக்கும் அகதிகள் பிரச்சனை ஆக்கிரமிப்புக்கு அல்லது விடுதலைக்கான மோதல்கள் சண்டைகள், முன்னேறுதல்கள், பின்வாங்குதல் நடக்கும் போது மட்டும்தான் அகதிகள் பிரச்சனை அரசியலாக்கப்படுகிறது. மற்றைய காலங்களில் அகதிகள் பிரச்சனை அனாதைகள் விவகாரமாக அனுகப்படுகிறது. அரசுகளும் சரி, அராஜகத்தன்மை கொண்ட இயக்கங்களும் சரி இந்த எல்லையை தாண்டி அகதிகளின் அவலத்தை கணக்கில் கொள்வதில்லை. யாழ்ப்பாணத்தில் சண்டை நடக்கும் போது மட்டும் அகதிகள் பிரச்சனை உலகளவில் பேசப்படுகிறது. அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்தவர்களில் 99% யாழ்ப்பாணப் பூர்வ குடிகள்.

யாழை 95-ல் சிறீலங்கா அரசு ஆக்கிரமித்த போது அகதிகள் பிரச்சனை புதிய வடிவம் பெற்றது. அரசு படைகளின் அட்டகாசத்துக்கு பயந்தும், மக்களையும் வெளியேற்றி பின்வாங்கும் புலிகளின் திட்டமிட்ட நடவடிக்கையால் யாழ் மக்களின் வெளியேற்றம் விசித்திர வரலாறா கியது (புலிகள் இருக்கும் இடத்தில்தான் மக்கள் இருக்க விரும்பி வெளியேறினார்கள். மாஓவின் நீண்ட பின்வாங்குதலையும், பிரபாகரனின் பின்வாங்குதலையும் ஒன்றுதான்னே ஜேர்மனியில் த.பெ.க. மணியரசன் பேசியதை என்னவென்பது?)

இன்று 5 ஆண்டுகள் கழிந்து மீண்டும் புலிகளின் யாழ் விடுதலைக்கான யுத்தம் தொடங்கியது முதல் அகதிகள் பிரச்சனை முன்னுக்கு வந்துள்ளது.

வன்னி யுத்தத்தில், யாழிலிருந்து வெளியேறியவர்கள் உட்பட இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். வவுனியாவில் இடம் பெயர்ந்தவர்கள் மட்டும் 25,000, அகதிகள் 49,000, 12 அகதிகள் நலன்புரி அமைப்புகள் (NGO) இயங்குகின்றன. சிறீலங்கா அரசு அகதி பராமரிப்புக்கு 20 கோடிரூபா செலவு செய்கின்றது என ஒரு புள்ளி விபரம் கூறுகிறது. கிளிநொச்சியில் 34 பாடசாலைகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. 20,000 மாணவர்களுக்கு கல்வி இல்லை. வன்னியில் அரசின் பொருளாதாரத் தடை, மருந்துத் தடையால் அகதிகள் கொடிய நோய்களில் சிக்கி தவிக்கின்றனர். மருத்துவமனைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருகோணமலையில் யாழ்ப்பாணம் செல்வதற்காக 4265 பேர் பதிவு செய்துவிட்டு காத்திருக்கிறார்கள். 'திருமலை' கப்பல் 350 நபர்களை ஏற்றி இறக்குகிறது. காங்கேசன் துறை துறைமுகம் ஆபத்து என்பதால் பருத்தி துறையில் இறக்கி விடுகிறது. பயணிகள் கப்பலான இதில் பிரயாணம் செய்ய 1000/- செலுத்த வேண்டியுள்ளது. திருகோணமலை ''அலஸ் தோட்டத்தில்'' 1992-ல் இந்தியாவில் இருந்து திரும்பிவந்த 472 குடும்பங்கள், தங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் இன்றுவரை இந்த இடைத்தங்கல் முகாமில் உள்ளனர். 9 குடும்பங்கள் அண்மையில் முகாமில் இருந்து காணாமல் போயிருக்கிறார்கள். 7 அகதி நலன்புரி நிவாரண அமைப்புக்கள் இங்கு (NGO) இயங்குகின்றன. யாழில் 1999-ல் சர்வதேச நிதி நிறுவனங்கள், மீஎஙூக்கள் நேரடியாக தலையிடக் கோரி வடகிழக்கு மீஎஙூ-க்கள் மாநாடு நடத்தினர்.

வெளிநாடுகளிலுள்ள அகதிகளை பொறுத்தவரை உயிருக்கும், உணவுக்கும் இருப்பிடத்துக்கும் உத்தரவாதம் உள்ளது. அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளிலுள்ள அகதிகள் (புலம் பெயர்ந்தோர் என்கின்றனர்) தமக்கு கிடைக்கும் அகதிகள் நல நிவாரண நிதியில் அப்படி இப்படி பிடித்து, இலங்கை - இந்தியாவிலுள்ள உறவினர்களுக்கும் பணம் அனுப்புகின்றனர். நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களைத் தவிர மற்றயவர்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலைமையிலுள்ளனர். ஜெர்மனியிலும், சுவிசிலும் இத்தகைய நிலையில் 5,000 பேருக்கு மேல் உள்ளனர். ஜேர்மன் 22 பேரை நாடு கடத்தியது. அவர்களை நாடு கடத்தும் முயற்சிக்கு எதிராக சர்வதேச மன்னிப்பு சபை மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அய்ரோப்பிய நாடுகளில் அதிகரித்துவரும் அகதிகள் பிரச்சனையின் ஒரு வெளிப்பாடு, நாடு தாண்டும், தஞ்சம் கோரும் ஆசிய நாட்டு மக்களின் அவலத்துக்கு சிறந்து எடுத்துக்காட்டு நெதர்லாந்திலிருந்து பிரிட்டனுக்குள் நுழைய முயன்ற 58 பேர், தக்காளி பழ பாரம் தூக்கி வாகனத்துள் மரணம் அடைந்த செய்தி இத்தகைய முயற்சிகள் ஈடுபடும் தமிழீழ அகதிகளுக்கு இது ஒரு முன்னெச்சரிக்கை. இந்தியாவில் 1985-இல் 26,365 அகதிகள் இருந்தனர். 1990 1,00,000-த்தை தாண்டியது. 1992-ல் 17,123 குடும்பங்களை சேர்ந்த 7,312 அகதிகள் சுயவிருப்பத்திலும், நிர்ப்பந்தத்திலும் நாடு திரும்பினர். 1998, 47,150 குடும்பங்கள் 1,62,415 அகதிகள் உள்ளனர். 5,957 அகதிகள் முகாமில் இருந்து அனுமதி இன்றி வெளியேறியுள்ளனர்.

## உதவிப் பட்டியல்

மண்டபம் முகாம், மற்றும் பண்டக சாலை குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களைத் தவிர மற்றைய முகாம்கள் தற்காலிக நோக்கில் அமைக்கப்

www.tamilarangam.net



பட்டவை. இவ்வீடுகள் (கொட்டகைகள்) 10 வருடங்களைத் தாண்டிவிட்ட நிலையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஓரளவு வெளியில் சென்று உழைக்கும் குடும்பங்கள் தாங்களாகவே குடிசைகளை போட்டுள்ளனர். ஆனால் முகாமின் சுற்றுச் சூழல் நோய்களை தானாகவே உருவாக்கும் நிலையில் உள்ளது; குடி தண்ணீர், மருத்துவ வசதி, கழிப்பக வசதி, மின்சாரம், வேலை, போக்குவரத்து, கல்வி என்பன எல்லா முகாம்களுக்கும் பொதுவான பிரச்சனைகளாக உள்ளன. இந்தியாவில் உள்ள அகதிகளுக்கு அய்நா சபை சட்டப்படி கூட 'அகதி அந்தஸ்து' இல்லை. அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிட்டால் நாடு திரும்பி விடுவது என்ற ஒரு நம்பிக்கையுடன் வீழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

போராளி இயக்கங்களின் நடவடிக்கைகள், அத்துமீறல்களால் ஏற்பட்ட நெருக்கடிகள், தமிழக மக்களின் வெறுப்புக்களை தமிழீழ அகதிகளே எதிர் கொள்கின்றனர், போதை வஸ்து கடத்தல், ஆள் கடத்தல் திருட்டு, கொலை, கொள்ளை என பாதாள உலகத்தின் கிரிமினல்கள் சிலர் அதிகார வர்க்கத்துக்கு இலஞ்சம் கொடுத்து செய்யும் நடவடிக்கைகள் வெளியாகும் போது ஊடகங்கள், அவற்றை தமிழீழ அகதிகளின் செயலாக சித்தரிப்பதாலும் தமிழக மக்களிடம் அகதிகள், போராளிகள் பால் இருந்த அனுதாபம் உருக்குலைந்து வருகிறது 16 தமிழக NGO அமைப்புக்கள் அகதி முகாம்களில் செயற்படுகின்றது. ஈழ அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (OFERR) JRS என்பன எல்லா முகாம்களிலும் செயற்படுகின்றன.

புலிகள் இயக்கம் தங்களின் கட்டுப்பாட்டு பகுதியில் எப்படி ஒரு மாற்று அரசியல் ஆயுதப் போராட்ட இயக்கம் உருவாவதை - இருப்பதை அனுமதிப்பதில்லையோ அதேபோல் இந்திய அகதி முகாம்களில் OFERRஐ தவிர வேறு ஒரு தமிழீழ அகதிகள் அமைப்பு உருவாவதை இயங்குவதத OFERR அனுமதிப்பதில்லை. ஆயுதப் போராளி இயக்கங்களை பொறுத்தவரை இயக்கத்துக்கு ஆள்பிடிக்கவும், சர்வதேசப் பிரச்சாரங்களுக்குமே அகதிகள் தேவைப்படுகிறார்கள். தனி இயக்க - தனி அகதி அமைப்பு அதிகாரச் சிந்தனையின் வேர் என்ன?

புலிகள் உட்பட எல்லா இயக்கங்களும் சிறீ லங்கா அரசிடம் இருந்து விடுதலை பெற வேண்டும். தனிநாடு அமைக்க வேண்டும் என்று மட்டுமே இலக்கு கொண்டிருந்தார்கள். ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படகின்ற மக்களின் சமூகப் புரட்சி என்ற இலக்கை, அதை தேசிய விடுதலையுடன் இணைத்து போராடுவது என்ற இலட்சியத்தை பேசினார்கள், எழுதினார்கள். நடைமுறையில் அதற்கு எதிராக செயற்பட்டார்கள். செயற்பட்டு வருகிறார்கள். வெகுசனங்களின் மீது நம்பிக்கை இல்லை. இளைஞர்கள் - யுவதிகள் மேலும், ஆயுதங்கள், மிக நவீன ஆயுதங்கள் மேல்தான் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அல்லது சர்வதேச ராஜதந்திர மேல்மட்ட அழுத்தங்கள் மீது அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ மக்கள்தான், யுத்தம் நடக்கின்ற பகுதிகளில் இருந்து வெளியேறும் போது அகதிகளாக மாறுகிறார்கள். மக்கள் மத்தியில் தேசிய விடுதலைப் போராட்ட அரசியலும், அதில் மக்களின் பங்கும் எந்தளவுக்கு போராடுகின்ற இயக்கத்தால் வேரூன்றப்பட்டு இருக்கிறதோ அந்தளவுக்கு மக்கள் அகதிகளாக மாறும்போதும் தங்களின் பிரச்சனைகளுக்காக உரிய தளங்களில் சரியான கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடக் கற்றுக் கொள்வார்கள். அகதிகளாக மாறுகின்ற, அகதிகளுக்குள் வாழ்கின்ற போராளிகள் எந்தத் தளங்களிலும் மக்களின் பக்கம் நின்று மக்களின் வாழ்வுக்கும், முன்னேற்றத்துக்கும், விடுதலைக்குமான போராட்டங்களை முன்னெடுப்பார்கள். மக்கள் போராட்டத்தின் பார்வையாளர்களாக இயக்கத்துக்கு எடுபிடி வேலை செய்பவர்களாக, உணவு, உளவு வழங்குபவர்களாக மட்டுமே வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஏன் யுத்தத்தில் மிளிர்கின்ற போராளிகள் கூட யுத்த முனையை விட்டு வெளியே வந்தால் சாதாரண மக்களுடன் வாழ்வதற்கே திக்குமுக்காடுகின்றனர். ஆயுதம் தாங்கி எதிரியை அழித்து தானும் அழியத் தயாரான போராளிகள், மக்களுக்கு தலைமை தாங்கிய, கட்டளையிட்ட, நீதி வழங்கிய பல நூறு போராளிகள் (புலிகள் உட்பட) அகதி முகாம்களில், சிறப்பு முகாம்களில் தங்களின் அகதி மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு கூட போராடும் உணர்வும், மக்களை இணைக்கும் ஆற்றலும் இன்றி வாழ்கிறார்கள். முன்னாள் சீருடையும், ஆயுதமும் கொடுத்த தென்புகூட அவர்களிடம் இல்லை. இயக்கப் பெயரைச் சொல்லி பயமுறுத்தியும், முகாம் அதிகாரிகள், உளவு அதிகாரிகளுடன் சேர்ந்தும் தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்கிறார்கள். ஒரு சில முன்னாள் போராளிக் கருங்காலிகள். அகதிகளுக்கான மாதக் கொடுப்பனவை அரசு உரிய காலங்களில் வழங்கியபோதும், அலுவலர்கள் (R.I.) உரிய காலத்தில் கொடுப்பத்தில்லை (இலட்சக்கணக்கான ரூபாய்கள் தினசரி வட்டிக்கு திருப்பப்படுவதால் கொடுப்பனவு 10-15 நாட்கள் தாமதமாகிறது. இதை மக்களை திரட்டி மனுக்கொ

www.tamilarangam.net



# Camp Population of Sri Lankan Refugees as on 31.01.99

| S. No. | District | No. of Camps | No. of Families | Children 8Years & below Male | Children 8Years & below Female | Children Between 9-11 Year Male | Children Between 9-11 Year Female | Children Total | Adults Between 12-17 Y Male | Adults Between 12-17 Y Female | Adults 18 Years & above Male | Adults 18 Years & above Female | Adults Total | Total No.of Persons |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kancheepuram | 9 | 383 | 128 | 108 | 43 | 39 | 318 | 107 | 104 | 430 | 386 | 1027 | 1345 |
| 2. | Tiruvallur | 2 | 908 | 207 | 210 | 282 | 286 | 985 | 201 | 198 | 1080 | 995 | 2474 | 3459 |
| 3. | Caddalor | 7 | 347 | 116 | 107 | 63 | 52 | 338 | 135 | 120 | 374 | 343 | 972 | 1310 |
| 4. | Villupuram | 3 | 262 | 109 | 99 | 31 | 36 | 275 | 111 | 100 | 311 | 275 | 797 | 1072 |
| 5. | Vellore | 9 | 1099 | 464 | 422 | 122 | 119 | 1127 | 371 | 345 | 1182 | 951 | 2849 | 3976 |
| 6. | Tiruvannamalai | 16 | 875 | 253 | 247 | 142 | 165 | 807 | 273 | 288 | 1075 | 979 | 2615 | 3422 |
| 7. | Salem | 8 | 646 | 268 | 272 | 73 | 56 | 669 | 177 | 165 | 708 | 625 | 1675 | 2344 |
| 8. | Dharmapuri | 13 | 936 | 343 | 320 | 133 | 121 | 917 | 340 | 328 | 1030 | 968 | 2666 | 3583 |
| 9. | Namakkal | 2 | 357 | 121 | 96 | 112 | 129 | 458 | 267 | 149 | 138 | 180 | 734 | 1192 |
| 10. | Erode | 4 | 1052 | 344 | 374 | 170 | 151 | 1039 | 440 | 378 | 1184 | 1039 | 3041 | 4080 |
| 11. | Coimbatore | 8 | 779 | 252 | 238 | 145 | 121 | 756 | 258 | 296 | 906 | 828 | 2288 | 3044 |
| 12. | Tiruchi | 2 | 766 | 251 | 258 | 98 | 122 | 729 | 264 | 236 | 846 | 800 | 2146 | 2875 |
| 13. | Karur | 2 | 593 | 194 | 183 | 69 | 76 | 522 | 236 | 247 | 675 | 640 | 1798 | 2320 |
| 14. | Perambalur | 1 | 73 | 28 | 26 | 8 | 11 | 73 | 24 | 21 | 76 | 80 | 201 | 274 |
| 15. | Pudukottai | 3 | 909 | 230 | 203 | 161 | 181 | 775 | 329 | 310 | 723 | 687 | 2049 | 2824 |
| 16. | Madurai | 4 | 1319 | 424 | 399 | 185 | 175 | 1183 | 581 | 514 | 1333 | 1274 | 3702 | 4885 |
| 17. | Dindugul | 8 | 846 | 275 | 262 | 122 | 135 | 794 | 324 | 309 | 992 | 870 | 2495 | 3289 |
| 18. | Ramanathapuram | 1 | 1824 | 516 | 467 | 248 | 238 | 1469 | 393 | 340 | 1756 | 1572 | 4061 | 5530 |
| 19. | Sivaganga | 7 | 913 | 303 | 313 | 96 | 124 | 836 | 370 | 365 | 912 | 919 | 2566 | 3402 |
| 20. | Virudhunagar | 6 | 879 | 272 | 250 | 160 | 138 | 820 | 194 | 196 | 1179 | 1067 | 2636 | 3456 |
| 21. | Thoothukudi | 3 | 347 | 109 | 125 | 55 | 59 | 348 | 112 | 85 | 458 | 430 | 1085 | 1433 |
| 22. | Tirunelveli | 8 | 779 | 195 | 191 | 118 | 165 | 669 | 290 | 277 | 782 | 793 | 2142 | 2811 |
| 23. | Kanniyakumary | 4 | 271 | 101 | 109 | 27 | 33 | 270 | 96 | 79 | 287 | 264 | 726 | 996 |
| 24. | Chennai | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 2 | 2 |
| | **Grand Total** | **131** | **17165** | **5503** | **5279** | **2663** | **2732** | **16177** | **5893** | **5450** | **18439** | **16965** | **46747** | **62924** |
| | New arrivals Jan.99-Ddc.99 | | 1800 | | | | | 4026 | | | | | 951 | 4977 |
| | **Total** | | **18965** | | | | | **20203** | | | | | **47698** | **67901** |

www.tamilarangam.net



டுத்து, மேல் அதிகாரிகளுக்கு அரசியல் வாதிகளுக்கு சுட்டிக்காட்டி அரசு நடவடிக்கை எடுக்க கோருகின்ற, மக்கள் கோரிக்கைகளுக்கு முன்னாள் போராளிகளால் தலைமை தாங்க முடியவில்லை. மக்களையும், போராளிகளையும் இயக்க தலைமைகள் எப்படி போராட்டத்தில் இணைந்துள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள இது சிறு உதாரணம் மட்டுமே.

ஆணையிறவு வெற்றி, ஓயாத அலை வெற்றி பற்றி கூட்டம் போட்டு கொண்டாடுகின்ற ஆதரவாளர்கள் தமிழீழ அகதிகளின், தமிழ்நாட்டிலுள்ள அகதிகளின் பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அய்ரோப்பாவிலும், அமெரிக்க நாடுகளில் தமிழீழ ஆதரவுப் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கின்ற புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் பேசுகின்ற தமிழீழ தமிழ்நாட்டு ஆதரவாளர்கள், தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் மத்தியில் வந்து ஏன் ஆதரவு தெரிவிப்பதில்லை, புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் பொன்னும், பொருளும், பயணச் செலவும், பொறுப்பு எடுப்பார்கள் என்பதலா? தமிழீழ மக்களுக்காக, மக்களின் சுதந்திரத்துக்காக ஆதரவு கொடுக்கும் தமிழக ஆதரவாளர்களே! தமிழ்நாட்டிலுள்ள அகதிகளின் குரலையும் ஒலியுங்கள், முழங்குங்கள். மக்களை, அகதிகளை, மந்தைகளாக, அனாதைகளாக, பயந்தாங்கொள்ளிகளாக ஓடிப்பபோபவர்களாக - வந்தவர்களாக கருதுகின்ற, போராளிகளால், இயக்கங்களால் தேசபக்த போராட்டத்தை இறுதி வெற்றிவரை முன்னெடுக்க முடியாது. மக்களும் - அகதிகளும் தேசபக்தர்களாக இருக்கிறார்கள், போராட்டத்தில் சரியான முறையில் மக்களை இணைக்க ஒன்றுபடுத்த குட்டி முதலாளித்துவ சுத்த இராணுவ தலைமைகளால் முடியவில்லை. அதனால் தமது தவறை புரிந்து கொள்வதற்கு பதில் அகதிகளுக்கு பட்டப் பெயர்கள் சூட்டுகிறார்கள்.

சிறீலங்கா அரசும், இந்தியரசும் அகதிகளை தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் எனப் பார்த்து அணுகுகிறார்கள். அகதிகளை - மக்களை தீவிரவாதிகளாக, சனநாயக? நீரோட்டத்தில் கலக்க வைத்து கைக்கூலிகளாக்கி அதிகளாக - துரோகிகளாகக் கூட மாற்றுகின்ற சக்திபடைத்த அரசுகள், தங்களின் கண்ணோட்டத்தில் அணுகுவதும் தமிழீழப் போராட்டத்தின் வெளிப்பாடுகள். மக்களுக்கு உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்து கொடுக்கும் நிவாரண வேலைகளுடன் ''மக்களுக்கு கையேந்தி நிற்கும் மனோபாவத்தை'' உருவாக்கும், அரசியல் செயற்பாடுகளை அறவே நிராகரிக்கின்ற. தேசபக்த உணர்வை மழுங்கடிக்கும் NGO-க்களின் அணுகுமு

றையையும் அதன் சர்வதேச வலைப் பின்னலையும் அகதிகள் புரிந்து கொண்டு வருகிறார். தமிழீழ அகதிகள் தமது தேசபக்த உணர்வை, போராட்டத்தை வெளிப்படுத்தும் காலம் தொலைவில் இல்லை. அகதிகளே தங்களின் அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்க்கும் காலம் நெருங்குகிறது.

- அகதியின்குரல்

*கிழக்கு திமோருக்கு அய்நா சபையும், அன்னிய நாடுகளும் சேர்ந்து சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திரம் கொடுத்தது பற்றி பேசுபவர்களே, கிழக்கு மேற்கு திமோரில் இலட்சக்கணக்கான திமோரிய அகதிகளின் நிலையைப் பாருங்கள். மேற்கு திமோரில் 500-க்கும் மேற்பட்ட அதிகள் உணவில்லாமல், மருந்து இல்லாமல் இன்றும் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அய்நாசபை, அமைதி காப்புப் படை அகதி முகாம்களில் உள்ள போராளிகளை பிரித்தெடுப்பது, போராளிகளின் ஆயுதங்களை களைவதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுகிறது. அதிகளுக்காக போராடுவதை எந்த அயோக்கியனும், அரசும் ஏற்க மறுப்பது ஏன்.*

www.tamilarangam.net

தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்

# தேசபக்தன்

NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக் தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT தேசபக்தன் NDPT

தமிழீழ புதிய சனநாயக கட்சி தி.பி. 2631 (2666) இதழ் 17

## தேசபக்தர்களின் அரசியல் தீர்வுப் பொதி



## தமிழீழ அகதிகள் தேசபக்தர்களா? பயங்கரவாதிகளா?

**NEW DEMOCRATIC PARTY OF THAMIZLEELAM (N.D.P.T.)**

RGSD. ISSN - 07647 2262 RNI 04512 / 1999 CANADA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபத்தன்

"சிறு துளி பெரு வெள்ளம்" அன்பளிப்பு 25 உருபா / வெளிநாடு 10 டொலர்

மடல் தொடர்புகளுக்கு மட்டும்

A. JAYARATNA
67, PARKWOOD
VILLEGE DR
# 308 DONMILLS
ONTARIO
M 34 2x4
CANADA

T. NAZEERATAF
POST BOOKS-10
5125 BOVAGEN
NORWAY

இலக்கம்


- பாராளுமன்றத் தேர்தலை பகிஷ்கரிப்போம் 1
- கறுப்பு யூலை நினைவுகள் 3
- ஓயாத அலை வெற்றி, யுத்தத்தின் எதிர்காலம் 6
- தமிழ்நாட்டில் மீண்டும் தமிழீழ எழுச்சி 22
- தமிழீழக் கூலி அகதிகளின் குமுறல் 26
- சிம்பாவேயில் நிலப்பறிப்புப் போராட்டம் 29
- ஆக்கிரமிப்பு யுத்தம் - பொருளாதாரத் தடை 34
- நவீன சிங்கள பௌத்த தேசிய வெறி 40
- புலிகளிடம் மீண்டும் புலிக்குணம் 46
- இனவாத தீர்வுப் பொதியை தூக்கி எறிவோம் 47
- தமிழீழ தேசபக்தர்களின் அரசியல் தீர்வுப் பொதி 52
- ஆணாதிக்கப் பாலியல் வெறிப் பயங்கரம் 56
- தமிழீழம் சர்வதேசியப் பார்வையிலா? 59
- அகதிகள் தேசபக்தர்களா? பயங்கரவாதிகளா? 66


*அன்பார்ந்த வாசகர்களே!*

சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளினதும் கெடுபிடிகளைக் கடந்து; அகதி முகாம்களில் கையெழுத்துப் பிரதியாக உருவான **தேசபத்தன்** பின் உருட்டச்சிலும் தொடர்ந்து அச்சுக் கோர்ப்பிலும் தற்போது மின் கணனிப் பதிப்பாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. உங்களுடைய ஆதரவினாலும், பொருளாதார உதவிகளினாலும் படிப்படியாக உயர்ந்த **தேசபத்தன்** இன்று சர்வதேச இணைவலையிலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. எமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடும் **தேசபத்தன்** தொடர்ந்தும் உங்கள் ஆதரவையும் விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றது. தமிழீழ மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள வெளியீட்டாளர்களே! **தேசபத்தனை** விளம்பரப்படுத்தி உதவுங்கள்.

http//home.no.net/ndptamil | patriot_editor @Yahoo.com

NEW DEMOCRATIC PARTY OF THAMIZL EELAM (N.D.P.T.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்